# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 291 ஆவணி 28ஆம் நாள் வியாழக்கிழமை 13 செப்ரெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

விலை: 30
பக்கங்கள்: 28

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM


## புதிய கூட்டு

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச ஆகியோர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இந்தச் சந்திப்பு புதுடில்லியில் நேற்று இடம்பெற்றுள்ளது. (5)



## அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் இந்தியாவில் கருத்து வெளியிட்ட மகிந்த

டில்லி, செப். 13
அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கான வயதை 35 ஆக உயர்த்தியுள்ளதால் எனது மகன் நாமல் ராஜபக்ச தேர்தலில் போட்டியிட முடியாது. ஆனால், எனது சகோதரர் நிச்சயமாக போட்டியாளர்களில் ஒருவராக >> 25

## எப்போதும் உங்களுடனேயே இருப்போம்

### சம்பந்தனுக்கு உறுதியளித்த மோடி

யாழ்ப்பாணம், செப்.13
இலங்கை எமது அயல்நாடு. அங்கு மீண்டும் போர் ஏற்படுவதற்கு இடமளிக்கமாட்டோம். எம்மை நம்புங்கள். நாம் எப்போதும் உங்களுடனேயே இருப்போம். இலங்கை அரசு காலதாமதமின்றி அரசியல் தீர்வைக் காணவேண்டும். இதில் இந்திய அரசு உறுதியாக உள்ளது. இவ்வாறு இந்தி >> 24

### தமிழ் மக்களுக்கு எதிரான

# மிக மோசமான மீறல்களுக்கு பயங்கரவாதச் சட்டமே துணை

### ஜெனிவாவில் சாடல்

ஜெனிவா, செப். 13
பயங்கரவாத தடைச் சட்டமானது இலங்கையில் மோசமான மனித உரிமை மீறல்களுக்குத் துணைபோயிருக்கின்றது. தமிழ் மக்களுக்கு எதிராக இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இதன் ஊடாகத் தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுத்து வைத்தல்கள் இடம்பெற்றுள்ளன. சித்திரவதைகள் இடம்பெற்றுள்ளன.
அனைத்துவிதமான அநீதிகள் மற்றும் இனவாதங்களுக்கு எதிரான பன்னாட்டு இயக்கம் இவ்வாறு தெரிவித்துள்ளது. ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 39ஆவது கூட்டத் தொடரில் நேற்று உரையாற்றிய அந்த அமைப்பின் பேச்சாளர் >> 23

## மின்சாரம் தாக்கி இளைஞன் சாவு



வவுனியா, செப். 13
வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் மின்சாரம் தாக்கி இளைஞன் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அந்தப் பகுதியைச் சேர்ந்த மகாலிங்கம் நிதர்சன் (வயது-28) என்பவரே இவ்வாறு >> 25

## பொலிஸ் வாகனத்தை கடத்தியவர் கைது

தென்மராட்சி, செப். 13
கொடிகாமம் பாலாவியில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க் >> 25

## பன்னாட்டு மனித உரிமை நியமங்களை பதிலீட்டுச் சட்டம் திருப்திப்படுத்தவேண்டும்

தன்னிச்சையாக தடுத்துவைத்தல் தொடர்பான ஐ.நா. செயற்குழு வலியுறுத்தல் >> 23

### ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு இலங்கை வழங்கிய

## வாக்குறுதிகள் நிறைவேற்றம் சிலவற்றில் மட்டுமே தாமதம்!

### கூட்டத் தொடரில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.செப் 13
2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுகின்ற போதிலும், அதில் சில விடயங்களில் தாமதம் நிலவுவதாக ஐ.நா மனித உரிமைகள் >> 25

## பட்டப்பகலில் தாலிக் கொடி அறுத்து கொள்ளை

அச்சுவேலி, செப். 18
கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பணியாளர் ஒருவரின் 7 பவுண் தாலிக்கொடி அறுத்துக் கொள்ளையிடப்பட்டது. கலாசாலையின் முதன்மை >> 25

## வடக்கு அமைச்சரவை சிக்கல் முடிவேதுமின்றி தொடர்கின்றது

### நேற்றைய முயற்சியும் முறியடிப்பு

யாழ்ப்பாணம், செப். 13
வடக்கு அமைச்சரவை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சையை முடிவுக்கு கொண்டு வருவதற்காக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் குரே ஆகியோருடன் >> 25

## ஆண் ஒருவரின் எலும்புகள் காங்கேசன்துறையில் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 13
காங்கேசன்துறை தொடருந்து நிலையம் அருகில் உள்ள பற்றைகளுக்குள் இருந்து எலும்புக்கூடு ஒன்று நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டது. தொடருந்து ஊழி >> 25

## மூதாட்டி வீட்டில் நகைகள் திருட்டு

கிளிநொச்சி.செப் 13
உடுவில் பகுதியில் மூதாட்டி ஒருவரின் வீட்டில் 8 லட்சம் ரூபா பெறுமதியான நகை மற்றும் பணம் திருட்டு போயுள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் >> 25

### புதுக்குடியிருப்பில்

## வாள்வெட்டுக் குழுவினர் வீடு புகுந்து தாக்குதல்

### குடும்பத் தலைவர் பதிலுக்கு சுட்டதில் ஒருவர் படுகாயம்

முல்லைத்தீவு, செப். 13
6பேர் கொண்ட வாள்வெட்டுக் குழுவினர் வீடு புகுந்து தாக்குதல் நடத்தினர். வீட்டின் குடும்பத் தலைவர் பதிலுக்கு கட்டுத்துவக்கால் சூடு நடத்தினார். வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த இளைஞன் படுகாயமடைந்தான். காயமடைந்த >> 23

## திரைப்படப் பாணியில் ரவுடிக் குழுக்கள் அட்டகாசம் கிளிநொச்சி சந்தையில் நேற்று மாலையில் பதற்றம்

கிளிநொச்சி.செப்.13
கிளிநொச்சி பொதுச் சந்தையில் நேற்று மாலை இரு குழுக்கள் ஒன்றுடன் ஒன்று மோதி அட்டாகாசம் புரிந்ததால் சிறிது நேரம் அங்கு பெரும் பதற்றம் நிலவியது. உருத்திரபுரம் மற்றும் பாரதிபுரம் பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர் குழுக்களிடையிலேயே இந்த மோதல் இடம் பெற்றது.
திரைப்படப் பாணியில் வாகனம் ஒன்றில் வந்து குதித்த பத்திற் >> 25





Member of David Peiris
0114 700 100
எசட்லைன் லீசிங் கம்பனி லிமிடெட்
இல. 120-120A, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை.
மின்னஞ்சல்: info@assetline.lk
எசட்லைன்

# மைத்திரியின் உதவியுடனேயே ரவீந்திர வெளிநாடு சென்றார்

## நீதிமன்றில் சுட்டிக்காட்டப்பட்டது

கொழும்பு, செப். 13

5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை வெள்ளைநிற மூடுந்தில் கடத்திச் சென்று, காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில் முதன்மைச் சந்தேகநபரான நேவி சம்பத் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி மறைந்திருக்க உதவிய குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்ட முன்னாள் கடற்படை தளபதியும் தற்போதைய முப்படைகளின் அலுவலகப் பிரதானியுமான ரவீந்திர விஜேகுணரத்ன, மைதிரிபால சிறிசேனவின் ஒத்துழைப்புடனேயே வெளிநாடு சென்றுள்ளதாக சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன நீதிமன்றில் நேற்றுத் தெரிவித்தார்.

வழக்கு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்று விசாரணைக்குவந்தபோதேபாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி அச்சலாசெனவிரத்னமேற்கண்டவாறு கூறினார்.

ரவீந்திர விஜே குணரத்ன உரிய முறையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவிக்காமலேயே வெளிநாடு சென்றுள்ளதாகவும், சென்ற பின்னரேயே அவர் அவ்வாறு வெளிநாடு செல்வது தொடர்பில்தெரிவிக்கப்பட்டதாகவும்கூறிய விசாரணைஅதிகாரிகள், அவர்நாடு திரும்பியதும்விசாரணைநடாத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நீதிவானிடம் தெரிவித்தனர்.

வழக்கின் மேலதிக விசாரணை அறிக்கையை சமர்ப்பித்த குற்றப் புலனயவுப் பிரிவின் அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்ததாவது.

10ஆவது சந்தேக நபரான ஹெட்டிஆரச்சி எனும் இவரை கைது செய்யும் போது அவரிடம் இருந்த போலி அடையாளஅட்டைமற்றும்பின்னர் கைப்பற்றப்பட்ட மற்றொரு அடையாள அட்டை தொடர்பிலும் விசாரணைகள் தொடர்கின்றன. போலி அடையாள அட்டைகள், கடவுச் சீட்டுக்களுக்கு உரிய ஆவணங்கள் அடங்கிய கோவைகள் இன்னும் குடிவரவுகுடியகல்வுதிணைக்களம் மற்றும் ஆள்பதிவு திணைக்களத்திடமிருந்துகிடைக்கவில்லை. அவை கிடைத்ததும் இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை எடுக்கவும், போலிஆவணங்கள்மற்றும்கடவுச் சீட்டு தொடர்பில் சந்தேக நபருக்கு எதிராக தனியாக வழக்குப் பதிவு செய்யவும் எதிர்ப்பார்த்துள்ளோம், என்றார்.

திறந்தமன்றில்கருத்துக்களைமுன்வைத்த சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன, முப்படைகளின் அலுவலகப் பிரதானி, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டநிலையில்நாட்டைவிட்டு, குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குத் தெரியாமல் வெளிநாடு செல்வதுஎன்பதுபயங்கரமானவிடயமாகும். நாட்டை விட்டு சென்ற பின்னரேயேகுற்றப்புலனாய்வுப்பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டை பிரதிநிதித்துவம் செய்து அவர் இவ்வாறுவெளிநாட்டுக்குஅனுப்பட்டுள்ளதன் பின்னணியில் அரச தலைவர் மைதிரிபால சிறிசேனவும், உயர் பாதுகாப்பு அதிகாரிகளும் உள்ளனர். ரவீந்திர விடயத்தில் வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்படல்வேண்டும்எனக்கூறினார். நீதிவான்குற்றப்புலனாய்வுப்பிரிவினரிடம் அவருக்கு எதிராக வெளிநாட்டு பயணத் தடைப் பெறப்பட்டதா? என்று வினவினார். அதற்கு இல்லைஎன்று பதிலளித்தனர்.

(5.71)

# கஞ்சாவுடன் இருவர் கைது



யாழ்ப்பாணம், செப். 13

பருத்தித்துறைப் பகுதியில் கஞ்சாவை உடமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் நெல்லியடிப் பொலிஸாரால்நேற்றுக்கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து ஒரு கிலோ300கிராம்கஞ்சாபொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது, கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக அல்வாய்ப் பகுதியில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 23 வயதுடையஇளைஞன்300கிராம் கஞ்சாவுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம்விசாரணை,மேற்கொள்ளப்பட்டது. மற்றொருஇளைஞனின்வீட்டில்கஞ்சா இருக்கும் தகவலை அவர் பொலிஸாரிடம் வெளிப்படுத்தியுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞனின் அலைபேசியிலிருந்து மற்றைய இளைஞனுக்கு அழைப்பு எடுக்கப்பட்டது. கஞ்சா கொள்வனவு செய்பவர்கள் போன்று பொலிஸார் அந்த இளைஞனின் வீட்டுக்குச் சென்றனர். அவர்நிலத்தில்புதைத்துவைத்திருந்த ஒரு கிலோ கஞ்சாவை எடுத்து வந்தபோது பொலிஸார் அவரைக்கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் பொலிஸ்விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றனர். நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படவுள்ளனர்.

(5.26)

## நல்லூரில்

# தவறவிட்ட பொருள்களை மாநகரசபையில் மீட்கலாம்

யாழ்ப்பாணம், செப். 13

நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவின்போது பக்தர்களால்தவறவிடப்பட்டபொருள்களை ஆதாரம்காட்டிமாநகரசபையில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்று, யாழ்ப்பாணமாநகரசபைஆணையாளர் த.ஜெயசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

தவறவிடப்பட்டதேசியஅடையாள அட்டை, திறப்புக்கள், கையடக்கத் தொலைபேசிகள், பணப்பைகள் மற்றும்பெறுமதியானபொருள்கள் என்பனயாழ்ப்பாணமாநகரசபையின் உற்சவ காலப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டது. அந்தப் பொருள்கள்இன்றுவரைஉரிமை கோரப்படவில்லை. பொருள்களின் உரிமையாளர்கள் மாநகர சபை பணியகத்தில், அலுவலக நேரத்தில் உரிய அடையாளத்தை உறுதிப்படுத்திபெற்றுக்கொள்ளமுடியும் என்றுள்ளது.

(5.7)

# முன்கூட்டிய தேர்தலுக்கு சாத்தியமே இல்லை

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 13

இலங்கையில்முற்கூட்டியதேர்தல்நடைபெறுவதற்கான சாத்தியம் இல்லை என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உலகப் பொருளாதார மாநாட்டில் கலந்துகொள்ள வியட்நாம் சென்றுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மாநாட்டின் இடைநடுவில் பன்னாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை உள்பட ஆசிய நாடுகள் நிதிப் பற்றாக்குறையுடனேயே செயற்படுகின்றன. இது ஒரு கரிசனைமிக்க விடயமாகும். எனினும் இது நிதியைப் பெறும் இயலுமையை பாதிக்கவில்லை.

சீனாவினால்இலங்கைகடன்பொறிக்குள்சிக்கியுள்ளதாக கூறப்படுவதை நான் நம்பவில்லை. நாங்கள் சீனாவுடன் செயற்பட்டு வருகின்றோம். சீனாவின் முதலீடுகள் இலங்கையில் இடம்பெறுகின்றன. சீனாவிடம் கடன்கள் பெறப்படுகின்றன. அதனை நாங்கள் அச்சுறுத்தலாக பார்க்கவில்லை. மேலும் நாட்டில் முற்கூட்டிய தேர்தல் இடம்பெறும் சாத்தியமில்லை என்றார்.

(5.31)

# மீனவப் படகு கப்பலுடன் மோதி கவிழ்ந்ததில் 4 பேர் உயிரிழப்பு

## இருவரைக் காணவில்லை

கொழும்பு, செப். 13

பேருவளை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 7 பேருடன் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக சென்ற மலிந்து புதா எனும் மீன் பிடிப்படகு, கப்பலொன்றுடன் மோதிக் கவிழ்ந்ததில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் உயிருடன் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும், காணாமல் போயுள்ளதாக கூறப்படும் இருவரை தேடித் கடற்படையினர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும்கடற்படை ஊடகப்பேச்சாளர் கொமாண்டர் தினேஸ் பண்டார தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்றுக் காலை 8.30 மணிக்கு கடற்படை தலைமையகத்தில் உள்ள கடல் சார் கண்காணிப்புமையத்துக்கு, கொள்கலன்களைஏற்றிச் சென்ற வெளிநாட்டுக் கப்பலொன்றில் இருந்து தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. படகொன்று கவிழ்ந்துள்ளதாகவும் ஒருவர் உயிர் தப்பி தத்தளிப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. அந்தத் தகவலுக்கு அமைய காலிக்கு மேற்கு திசையில் 30 கடல் மைல் தூரத்தில் சம்பவ இடம் அடையாளம் காணப்பட்டது. காலி கடற்படை கட்டளை மையத்தில் இருந்து இரண்டு டோரா படகுகள் சம்பவஇடத்துக்குப்படையினருடன்அனுப்பட்டுள்ளது.

உயிர் தப்பிய நபர் பாதுகாப்பாக மீட்கப்பட்டு முதலுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. காப்பாற்றப்பட்ட நபரின் தகவல்களுக்கு அமைய மேலதிக நடவடிக்கைகளை கடற்படையினர் முன்னெடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் மீனவப் படகு 7 பேருடன் மீன்பிடி நடவடிக்கைகளுக்காகபேருவளைமீன்பிடித்துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுள்ளது. அவருடன் வந்த ஏனையோர் தொடர்பில் கண்டறிய கடற்படை சுழியோடிகள் சம்பவ இடத்துக்கு அழைக்கப்பட்டு கவிழ்ந்த படகை அண்மித்த பகுதியில் தேடுதல் நடாத்தப்பட்டுள்ளது. படகுக்குள் இருந்துநால்வர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். ஏனையஇருவரையும்கடற்படைசுழியோடிகளின் உதவியுடன் கடற்படையினர் தேடிவருகின்றனர்.

காப்பாற்றப்பட்ட நபர் தனது வாக்குமூலத்தில், தாங்கள்பயணித்த மீனவப்படகு, நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.00 மணியளவில், அந்தப் பகுதியால் பயணித்த கப்பலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாகவும், இதன்போதேபடகு கவிழ்ந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

(5.71)

# தெல்லிப்பழை மருத்துவமனையில் நேற்று சிறப்பு டெங்குச் சோதனை

## அங்குள்ள பணியாளர்களுக்கும் டெங்கு பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 13


தெல்லிப்பழை மருத்துவமனையில் பணியாற்றும் 6 பணியாளர்களுக்கும் அங்கே சிகிச்சை பெற்று வெளியேறிய நால்வருக்கும்டெங்குப்பாதிப்புஏற்பட்டுள்ளது. இதனையடுத்து மாவட்ட சுகாதாரப் பணிப்பாளரின்உத்தரவுக்குஅமைவாக தெல்லிப்பழை மருத்துவமனையில் டெங்குச்சோதனைநேற்றுநடத்தப்பட்டுள்ளது.

டெங்கினால் பணியாளர்களும், மருத்துவமனையில்சிகிச்சைபெற்றுவெளிசயேறியோரும் பாதிப்புக்கு உள்ளாகினர். ஆரம்பத்தில் இந்த எண்ணிக்கை குறைவாக இருந்தபோதும், தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றுள்ளது. இதனையடுத்து மருத்துவமனை மற்றும் அதனை அண்மித்துள்ள சுற்றாடலில் சோதனை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு அமைவாக நேற்று சோதனை முன்னெடுக்கப்பட்டது. மருத்துவமனை வளாகத்தில்நான்கிற்கும்மேற்பட்டஇடங்களில் டெங்குக் குடம்பிகள் பரவலாக காணப்பட்டுள்ளது. இந்த இடங்கள் தொடர்பில் பரிசோதனைக் குழுவினர் அறிக்கையிட்டுச்சென்றுள்ளனர்.

இதுதொடர்பில்தெல்லிப்பழைமருத்துவமனையின் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, மிக பரந்தளவில் மருத்துவமனை காணப்படுகின்றது. அதற்கு உரிய பணியாளர்கள் அரைவாசிப்பேரே உள்ளனர். அவர்களில் 90 வீதமானவர்கள் பெண் ஊழியர்கள். அவர்களை வைத்தே கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். நல்ல தண்ணீரில் தான் டெங்கு நுளம்பு பரவும். அவ்வாறான இடங்களை அடையாளம் கண்டுவருகின்றோம். நுளம்புவலையை பயன்படுத்தி தூங்குமாறு அனைவருக்கும்பணித்துள்ளோம். சுகாதாரமருத்துவ அதிகாரிபணிமனையின் தொற்றுநோய் பிரிவினர்இந்தக்காண்காணிப்புநடவடிக்கையில்ஈடுபடுவதாகதெரிவித்துள்ளனர் என்றார்.

(5.7.105)



# வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு அருகில் மோட்டார் குண்டு மீட்பு

யாழ்ப்பாணம் .செப் .13

பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தை அண்மித்த பகுதியில் ஆலய பெருந் திருவிழாவை முன்னிட்டு நேற்று மதியம் துப்பரவாக்கும் பணிஇடம்பெற்றது . இதன்போது மோட்டார் குண்டுஒன்று இருப்பதை பொதுமக்கள் அவதானித்தனர் .இந்த விடயம் தொடர்பாக பருத்தி த்துறை பொலிஸாருக்கு அறிவித்ததைத்தொடர்ந்து குண்டினை அகற் றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன .

## யாழ்.களியாட்ட நிகழ்வில்
# மாநகர சபையின் அனுமதி பெறாத நுழைவுச் சீட்டுக்கள் பறிமுதல்

யாழ்ப்பாணம் ,செப். 13

யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வரும் களியாட்ட நிகழ்வுக்கான நுழைவு சீட்டில் மாநகர சபையின் அனுமதி பெறப்படாத நுழைவு சீட்டுக்களை யாழ்.மாநகர சபை உறுப்பினர்களால் , பறிமுதல் செய்து ஒப்படைக்கப்பட்ட நிலையில் ,அதிகாரிகள் உரிய நடவடிக்கையை எடுத்துள்ளதாக யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் ஜெயசீலன் தெரிவித்தார். குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது :

யாழ்.முத்திரை சந்திக்கு அருகிலுள்ள சங்கிலியன் (கிட்டு) பூங்காவில் களியாட்ட நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

இதன்போது குறித்த களியாட்ட நிகழ்வுக்கு விற்கப்படும் நுழைவுச் சீட்டில் யாழ்.மாநகர சபை உத்தியோக முத்திரை பொறிக்கப்படவில்லை. அது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து அங்கு சென்ற அவர்கள், நுழைவுச் சீட்டுக்களில் மாநகர சபை முத்திரை பொறிக்கப்படாத நுழைவுச் சீட்டுக்களை கைப் பற்றியுள்ளனர்.

இந்தநிலையில் கைப்பற்றப்பட்ட நுழைவுச் சீட்டுக்களை மேலதிக நடவடிக்கைக்காக யாழ்.மாநகர சபை வருமான வரி பகுதியினரிடம் ஒப்படைத்துள்ளனர்.இதனை ஆராய்ந்த அதிகாரிகள் அது தொடர்பில் நடவடிக்கையை எடுத்துள்ளதாக தெரிவித்தனர். (8)

# “நிலமகவெர” நடமாடும் சேவைக்கு கிராம மக்களிடம் பணம் அறவீடு

யாழ்ப்பாணம்.செப்.13

அரச தலைவர் செயலகத்தினால் நடத்தப்படும் "நிலமகவெர" நடமாடும் சேவையை நடத்துவதற்கு பொதுமக்களிடம் பணம் அறவிடப்பட்டு வருகின்றது. அமைச்சினால் ஒதுக்கப்படும் நிதி போதாது என்பதால், கிராம அலுவலர்களால் கிராம மக்களிடம் பணம் வாங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது பிரதேச செயலக ரீதியில் நடமாடும் சேவை இடம்பெறுகின்றது. இந்த நடமாடும் சேவைகளிற்காக குறித்த அமைச்சின் ஊடாக ஓர் பிரதேச செயலகத்திற்கு ஒரு இலட்சத்து 50 'ஆயிரம் ரூபா மட்டும் ஒதுக்கப்படுகின்றது.

இருப்பினும் குறித்த நடமாடும் சேவையில் பிரதேச,மாவட்ட மற்றும் அமைச்சின் அதிகாரிகள் என சுமார் 100 பேரும் சேவையினை பெறுவதற்காக ஆயிரக்கணக்கான பொது மக்களும் சமூகமளிக்கின்றனர்.

இந்த நிலையில் குறித்த அலுவலர்கள் பொது மக்களின் தேநீர் மற்றும் உணவு உள்ளிட்ட செலவுகளிற்கு பல

இலட்சம் ரூபா பணம் தேவையாகவுள்ளமையினால் எஞ்சிய தொகை பொது அமைப்புக்கள் , பிரதிநிதிகள் மூலம் சேகரிக்கப்படுகின்றன. இவ்வாறு பணம் அறவிடுவது தொடர்பில் பலர். தமது விசனத்தை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மாவட்டச் செயலருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது :

குறித்த சேவையினை பெற்றுக்கொள்ள வரும் பொது மக்களிற்கான அனைத்து தேவைகளையும் அன்றைய தினம் இலவசமாகவே வழங்குவதே திட்டம் .

இருப்பினும் வழங்கப்படும் பணம் மிக குறைந்தளவு. ஆகையினால் கிராமத்தின் சகலரிடமும் அல்ல. அதேபோன்று சாதாரண அமைப்புக்களிடம் அன்று நிதி நிலமை உள்ள குறிப்பிட்ட சிலரிடம் இருந்து செலவு தொகைக்கு ஏற்ப அந்த நிதியை பெற்றே எஞ்சிய தொகையை சீர் செய்யுமாறே அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டுள்ளதற்கு அமையவே அந்த நிதியை பிரதேச செயலர்கள் கோருகின்றனர். எனப் பதிலளித்தார். (105)

# சுருக்கு வலையைப் பயன்படுத்த அனுமதிகோரிக் கவனவீர்ப்பு

முல்லைத்தீவு .செப் .13

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசத்திற்கு உட்பட்ட மாத்தளன் பகுதி மீனவ குடும்பங்கள் கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரியின் ஊர்தியினை வெளியில் செல்லவிடாது தடுத்து ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளார்கள்.





மாத்தளன் பகுதி மீனவர்கள் தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட சுருக்கு வலையினை பயன்படுத்தி தொழில் செய்ய அனுமதிகோரி இந்த கவனவீர்பு நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளார்கள்.

இதேவேளை தங்கள் கடலில் சுருக்குவலையின் அனுமதியுடன் வெளிமாவட்டத்தினை சேர்ந்தவர்கள் வந்து மீன் பிடித்து செல்வதாகவும், சுருக்கு வலைக்கான அனுமதி தங்களிடம் இருந்தும் மாத்தளன் கடலில் உள்ள மீனினை பிடிக்க முடியாத நிலையில் தாங்கள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

நேற்றுக் காலை மாத்தளன் பகுதிக்கு கடல் தொழில் நடவடிக்கையினை கண்காணிக்க சென்ற கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் ஊர்தியினையும், அதிகாரிகளையும் ,மாத்தளன் பிரதேச மீனவர்கள், பெண்கள் உள்ளிட்டவர்கள் மறித்து, தங்களுக்கான முடிவினை அதிகாரிகள் தெரிவிக்காவிட்டால் தற்கொலை செய்துகொள்ளபேவதாக தெரிவித்து மண்எண்ணெய் கானுடன் கவனவீர்பு ஒன்றினை மேற்கொண்டுள்ளார்கள். இதன்போது குறித்த அதிகாரிகள் மக்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்கள்.

கடந்த 8ஆம் மாதம் 12 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திற்கு கடற்தொழில் நீரியல்வளத்திணைக்கள அமைச்சர் வந்து ,சுருக்குவலை தொடர்பில் முடிவு எடுக்கப்படும் என அறிவித்து விட்டு சென்றுள்ள நிலையில், இன்று ஒன்றரை மாதங்களாக சுருக்கு வலைக்கான அனுமதி வைத்திருந்தும் தாங்கள் தொழில் செய்யமுடியாத நிலையில் இருப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

இலங்கையில் எல்லா மாவட்டங்களுக்கும் ஒரே சட்டம்தான் ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்திற்குமட்டும் விதிவிலக்கா? என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

திருகோணமலை,யாழ்ப்பாண மாவட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் சுருக்குவலையினைப் பயன்படுத்தி முல்லைத்தீவு கடலில் தொழில் செய்கின்றார்கள். எங்கள் கடலில் நாங்கள் தொழில் செய்யமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக மக்கள் முறையிட்டனர்.

கடற்தொழில் நீரியல்" வளத்திணைக்கள அதிகாரிகள் குறித்த பிரச்சனைக்கு விரைவில் உயர் அதிகாரிகளுடன் கதைத்து முடிவு எடுத்து கொடுப்பதாக ,போராட்டம் நடத்திய மக்களுக்கு தெரிவித்துள்ளதை தொடர்ந்து அவர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளார்கள்.

தொடர்ந்தும் சுருக்கு வலைக்கான அனுமதி இருந்தும் தொழில் செய்வதற்கான அனுமதி கிடைக்காவிடின் உயிரை மாய்க்கவும் தாங்கள் தயங்கமாட்டோம் என குடும்ப பெண்கள் தெரிவித்துள்ளார்கள். (ரி 3)

# சிகிச்சையின் போது தப்பிச்சென்றவர் கைது

கிளிநொச்சி செப். 13

கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து சிகிச்சையின் போது தப்பி சென்ற நபரை நேற்றைய தினம் கைது செய்த கிளிநொச்சி பொலிசார் நீதிமன்றில் முற்ப்படுத்தினர்.

கடந்த 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உருத்திரபுரம் கூழாவடிப் பகுதியில் வாள்களுடன் அட்டகாசம் புரிந்தவர்களில் ஒருவரை கிராம மக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இவரை கிளிநொச்சி மருத்தவமனையில் சிகிச்சைக் காக பொலிஸார் அனுமதித்த ருந்தவேளையில் அங்கிருந்து தப்பியோ டியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி நீதிமன்றில் பொலிஸார் அறிக்கையிட்டபோது வாள்வெட்டுச் சம்பவத்தில ஈடுபட்டவர்களை கைது செய்து நீதிமன்றில முற்படுத்துமாறும் தவறின் பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் நீதிவான் எச்சரிக்கை செய்துள்ளார்.



இந்தச் சம்பவம் தொடர்பாக தமது கிராமத்தில் அட்டகாசம் செய்யும் வாள்வெட்டுக் குழுவினைக் கட்டுப்படுத்துமாறு கிராம மக்கள் நீதிமன்றில் பொது நலன் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வாள்வெட்டுக் குழுவினர் அப்பகுதியில் உள்ள சண்முகராசா வசீகரன் என்பவரது வீட்டின் முன்னால் அட்டகாசம் புரிந்ததுடன், அவரின் இரும்புக் கதவினைத் தாக்கிச் சேதப் படுத்தியுள்ளனர் எனவும், தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தையடுத்து அப் பகுதி மக்கள் ஒன்றுதிரண்டு தாக்கியபோது ஒருவர் பிடிக்கப்படவே மற்றவர்கள் தப்பியோடியுள்ளனர். இந்த நிலையில் தப்பி சென்ற நபரை கைது செய்த கிளிநொச்சி பொலிஸார் நீதிமன்றில் முற்ப்படுத்தினர், சந்தேக நபரை விளக்கமறிய லில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (9, 6)

# தரமற்ற முந்திரிப்பருப்பு நிறுவனத்தின் ஒப்பந்தம் கைவிடப்பட்டது

சிறிலங்கன் எயார் லைன்ஸ் விமானத்தில் தனக்கு பரிமாறப்பட்ட முந்திரிப் பருப்புக்கள் நாய் கூட உண்ண முடியாதவை என நேற்று முன் தினம் ஹம்பாந்தோட்டையில் விவசாயிகள் மத்தியில் உரையாற்றும் போது அரசதலைவர் தெரிவித்திருந்தார்.

இதன் பிரகாரம் சிறிலங்கன் எயார் லைன்ஸ் கொள்வனவு செய்த முந்திரிப் பருப்புக்களை நீக்கி விட்டதோடு முந்திரிப் பருப்பு கொள்வனவிற்காக டுபாய் நிறுவனத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டு ,வேறு நிறுவனத்தோடு ஒப்பந்தத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தள்ளது.

# மாட்டிறைச்சிக் கடைகளை மூடுவது என்பது முஸ்லிம்களின் வயிற்றில் அடிக்கும் செயல்

## யாழ். மாநகர சபை உறுப்பினர் கே.எம். நிலாம் கடும் காட்டம்



யாழ்ப்பாணம், செப். 13
மாட்டிறைச்சிக் கடைகளை மூடுவதற்கு நல்லூர் பிரதேச சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமானது முஸ்லிம்களின் வயிற்றில் அடிக்கும் செயல் என்று தெரிவித்தார் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் கே.எம் நிலாம்.

நல்லூர்பிரதேசசபைஎல்லைக்குள் மாட்டிறைச்சிக்கடைகளை தடை செய்வது தொடர்பில் நல்லூர் பிரதேச சபையில் நேற்று முன்தினம் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதையடுத்தேஇவ்வாறு குறிப்பிட்டார் அவர்.
"மாட்டிறைச்சியை முஸ்லிம் மக்கள் அதிகமாக நுகர்வதை யாவரும் அறிவர். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் அநேகமான இறைச்சிக்கடைகளை குத்தகை அடிப்படையில் பெற்று நடத்துவது முஸ்லிம் மக்களே. இவ்வாறான சந்தர்ப்பத்தில் குறித்த கடைகளை மூட எத்தனிப்பது எவ்விதத்திலும் நியாயம் ஆகாது. யாழ்ப்பாண முஸ்லிம்கள் போரின் பின்னர் மீள்குடியேறி தற்போது சுமூக வாழ்வைத் தொடர்கின்றனர். ஆனால் இந்த நடவடிக்கை அவர்களதுதொழிலுரிமையைப் பாதிக்கின்றது. அவர்களின் குடும்பங்களின்வயிற்றில்அடிக்கின்றது" என்று நிலாம் மேலும் தெரிவித்தார். (ம)



## மகாகவியின்நினைவுதினம் குடாநாட்டில் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், செப். 13
மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 97ஆவது நினைவு தினம் யாழில் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது.
யாழ்ப்புாணம் பருத்தித்துறை வீதியில் வைமன்வீதிசந்திக்கு(நல்லூர்பின்வீதி) அருகில் உள்ள பாரதியார் சிலைக்கு இளைஞர்களால் மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அத்துடன்நினைவுதினத்தில்கலந்து கொண்டுஅஞ்சலிசெலுத்தியவர்களுக்கு ஏற்பாட்டாளர்களால் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (ம)

## விநாயகர் சதுர்த்தி உற்சவங்கள்

யாழ்ப்பாணம், செப். 13
நீர்வேலி அரச கேசரிப் பிள்ளையார் கோவிலின் ஆவணிவிநாயகர் சதுர்த்தி உற்சவம்இன்றுவியாழக்கிழமைநடைபெறும். இன்றுமாலை 6 மணிக்குசிறப்புப்பூசையும், அதைத்தொடர்ந்துவிநாயகர் பெருமாள் வீதிவலம் வருதலும் இடம்பெறும்.

★★★

வடமராட்சி தென்புலோலி முறாவில் சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தின் இறுதிநாளான இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சமும் மாலை 6 மணிக்கு விநாயகர்சதுர்த்திஉற்சவமும்நடைபெறவுள்ளன. காலை 6 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி 8.30 மணிக்கு வசந்த மண்டபப்பூசை இடம்பெற்று காலை 10 மணியளவில் விநாயகர் தீர்;த்தமாடவுள்ளார். மாலை6மணியளவில்;விநாயகர் சதுர்த்தி உற்சவமும் சிறப்புப் பூசைகளும் இடம்பெறவுள்ளன.

★★★

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த ஆவணிசதுர்த்திதிருவிழாஇன்றுவியாழக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 6.15 மணி முதல் சிறப்புப் பூசை வழிபாடுகளுடன் ஆயிரத்து எட்டு சங்காபிஷேகம், பஞ்சமுக அர்ச்சனை என்பன இடம் பெறும். மதியம் 12 மணிக்கு மகேஸ்வர பூசைநடைபெறும். மாலைகூட்டுப்பிரார்த்தனை, கதாப்பிரசங்கம் என்பன இடம் பெறவுள்ளதோடு, சைவ சமய அறிவுப் போட்டியில் சித்திபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும கற்றல் உபகரணங்கள்என்பனவும்வழங்கப்படவுள்ளன. (ம24.17)



## சாவ. இந்துக் கல்லூரியில் திருவள்ளுவருக்குச்சிலை

சாவகச்சேரி இந்துக் கல்லூரி வளாகத்தில் நிறுவப்பட்டதிருவள்ளுவர்சிலைநேற்றுத்திரைநீக்கம் செய்யப்பட்டது.
கல்லூரிஅதிபர்ந.சர்வேஸ்வரன்தலைமையில் நிகழ்வுநடைபெற்றது. புலம்பெயர்நாடொன்றில் வாழும் செல்லையா செந்திலாதன் திருவள்ளுவரின் திருவுருவச் சிலையை திரைநீக்கம் செய்து வைக்க ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்தார். நினைவுக் கல்லை மருத்துவர் சு.சி. அருளானந்தம் திரைநீக்கம் செய்து வைத்தார்.
சாவகச்சேரி நகரசபை வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்ததிருவள்ளுவர்சிலை, நகரசபைவளாகத்தில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகக் காணப்பட்டதால் அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தியபோது சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர்ந.சர்வேஸ்வரன்அதனைகல்லூரிவளாகத்தில்நிறுவுவதற்குஏற்பாடுகளைமேற்கொண்டிருந்தார். இதனையறிந்த புலம்பெயர் நாட்டில் வாழும் அ.பொ.செல்லையா குடும்பத்தினர் சிலையைகல்லூரிவளாகத்தில்நிறுவுவதற்கான செலவினைப் பொறுப்பேற்றனர். (ம-9)

## மாட்டிறைச்சிதடைசெய்யப்பட்டதைஅடுத்து நல்லூர்பி.சபையை வரவேற்றது சிவசேனை

யாழ்ப்பாணம், செப். 13
நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் மாட்டிறைச்சிக் கடைகளுக்கு அனுமதிகொடுப்பதில்லை என எடுக்கப்பட்ட தீர்மானத்தைவரவேற்றுள்ளது சிவசேனை அமைப்பு.
"எமதுசைவபாரியங்களை காக்க இளைய தலைமுறையினர்முன்வந்துள்ளமை பாராட்டத்தக்கது என்றும்அதுகுறிப்பிட்டது"
இந்த விடயம் தொடர்பில் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம்உதயனுக்குக் கருத்து தெரிவித்ததாவது:
"இலங்கையின்5ஆயிரம் ஆண்டுமரபுகளைமீட்டெடுக்கும் முயற்சியில் இன்றைய தலைமுறையினர் முனைப்பாக இறங்கியுள்ளனர். அந்த வகையில் சைவத்தின் வாழ்விடம், தமிழர்களின் கொழிப்பிடம், முருகனின் இருப்பிடம், தமிழ் அரசுகளின் பொறுப்பிடம் என கூறப்படும் நல்லூரில் இந்தத் தீர்மானம்கொண்டுவரப்பட்டுள்ளமையை சைவ உலகம்வரவேற்கின்றது. இலங்கையில் முதன் முறையாக அனுராதபுரத்தில் உள்ள மத்துகம பிரதேச சபையில் இவ்வாறானதீர்மானம்கொண்டு வரப்பட்டது. தமிழ் மக்களின் பிரதேசத்தில் முதன் முறையாகநல்லூர்பிரதச சபையில் இந்தத் தீர்மானம்கொண்டுவரப்பட்டுள்ளது. இது எமது மக்களுக்குஓர்எடுத்துக்காட்டு. இதனை எமது அமைப்பு வரவேற்கின்றது. ஏனைய சபைகளும் இவ்வாறு செயற்பட வேண்டும்" - என்றார். (ம-8)

## தமிழ், சைவம், வீரம் என்பவைக்குப் பெயர்போனதுதான் வடமராட்சி மண்

### வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் பெருமிதம்

யாழ்ப்பாணம், செப். 13
வடமராட்சி மண் தமிழுக்கும், சைவத்துக்கும், வீரத்துக்கும் பெயர்போனது என்றுதெரிவித்தார்வடமராட்சிவலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார்.
ஐங்கரன், ஐங்கரன் சுலோஜனா எழுதிய "பேரறிவுச்சுடர் சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை"நுல்வெளியீட்டுநிகழ்வு புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில்அண்மையில்நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் அவர்.
அங்கு அவர்மேலும்தெரிவித்ததாவது, "வடமராட்சிமண்வித்தியாசமானமண்ணாகும். இங்கேதமிழால்வாழ்ந்தவர்கள், சைவத்தால்வாழ்ந்தவர்கள், வீரத்தால் வாழ்ந்தவர்கள் என்போர் ஏராளமானவர்கள் இருகின்றார்கள். அதுவும் புலோலி மிகச் சிறப்பானது. இந்த மண்ணில் பல அறிஞர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். கலாநிதி சிவப்பிரகாசம், பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பண்டிதர் சச்சிதானந்தம் பண்டிதர் பரந்தாமன், பண்டிதர் கிருஸ்ணபிள்ளை, கந்தமுருகேசனார்என்றுஏராளமானவர்களைக் குறிப்பிட லாம். இன்றும் பலர் வாழ்ந்து கொண்டிருகின்றனர். இவர்கள் சைவத்தையும் தமிழையும் கட்டிக் காத்தவர்கள். அவர்கள் பாதையில் நாமும் செயலாற்ற வேண்டும்" என்று அவர்மேலும்தெரிவித்தார். (ம-124)




தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள கழிவு வாய்க்கால் நீண்ட நாள்களாக துப்பரவு செய்யாமல் சேறும், சகதியுமாகக் காணப்பட்டது. தற்போது அது வலிவடக்கு பிரதேச சபையால் துப்பரவு செய்யப்பட்டு வருகின்றது. (ம-63)

# குடியிருப்புக்கள் அமைக்கப்படும்போது மழைநீர் சேகரிப்புத் திட்டம் அவசியம்

## சாவகச்சேரி நகரசபையின் உறுப்பினரான சிவராசா முன்வைத்தார் தீர்மான வரைவு

சாவகச்சேரி, செப். 13

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடியிருப்புகள் அமைக்கப்படும்போது மழைநீர் சேகரிப்புத் திட்டங்களும் அதில் இடம்பெற வேண்டும். இவ்வாறான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால்தான் நீர்த் தட்டுப்பாட்டைத் தவிர்க்க முடியும் என்று சாவகச்சேரி நகர சபையின் உறுப்பினரான க.சிவராசா தீர்மான வரைவொன்றை முன்வைத்தார்.



சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த அமர்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதன்போதே உறுப்பினர் க.சிவராசா இந்தத் தீர்மான வரைபை வழங்கினார்.

"தற்போது மழைவீழ்ச்சி குறைவாகக் காணப்படுவதாலும் ஆழ்துளைக் கிணறுகள் வகைதொகையின்றி அமைக்கப்படுவதாலும் நிலத்தடி நீரின் அளவு குறைந்து வருகின்றது. எனவே குடியிருப்புக்கள் அமைக்கப்படும் போது அவற்றுடன் சேர்ந்த வகையில் மழைநீர் சேகரிப்புத் திட்டங்களும் இருந்தால் குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தவிர்க்க முடியும்" என்று தனது தீர்மான வரைவை வழங்கிய பின்னர் அவர் உரையாற்றினார்.

உறுப்பினரின்திட்டவரைவைஅனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டதால் அது சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டதெனத் தவிசாளர் தெரிவித்தார். (ம-9)







## காரை. கலாசாரப் பெருவிழா சிறப்புற நடைபெற்றது

காரைநகர், செப். 13

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் காரைநகர் பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து காலாசாரப் பெருவிழாவை கடந்த திங்கட்கிழமை முன்னெடுத்தன. காரைநகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேசசெயலாளரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

காரைநகர், வலந்தலை மடத்துக்கரை முத்துமாரி அம்மன் ஆலய முன்றலில் இருந்து பண்பாட்டு ஊர்வலத்துடன் ஆரம்பமான இந்தப் பெருவிழாவில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பிரதேசங்களின் சுகாதார வைத்திய அதிகாரி பரா.நந்தகுமார், யாழ்ப்பாண மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மா.அருட்சந்திரன்ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மங்கலவிளக்கேற்றலுடன் ஆரம்பமான விழாவில் தமிழ் மொழி வாழ்த்தினை காரைநகர் இந்துக் கல்லூரி மாணவர்களும், வரவேற்புரையினை கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.அகிலனும், கலை நிகழ்வுகளைக் காரைநகர் கலாசார மத்திய நிலையம், சிவகாமி அம்மன் அறநெறிப் பாடசாலை, கிழவன்காடு கலா மன்றம், களபூமி கலையகம், சக்தி கல்வி மேம்பாட்டு நிலையம் ஆகியவற்றின் மாணவர்களும் நிகழ்த்தினர்.

விழாவின் ஒரு பகுதியாக 'கலங்கரை' என்ற சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. இதன் அறிமுக உரையினைக் கலாசார உத்தியோகத்தர் ச.தனுஜன் வழங்கினார். நன்றியுரையினை இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்து.ஞானேஸ்வரி வழங்கி னார். விருது வழங்கல், பரிசளிப்பு நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றன. (ம-250)



வடமராட்சி புலோலி குரும்பைகட்டி சனசமூக நிலையத்தினதும் உதய சூரியன் விளையாட்டுக் கழகத்தினதும், 73ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த ஞாயிறன்று சனசமூக நிலையத்தின் தலைவர் ப.செல்வநாயகத்தின் தலைமையில் விளையாட்டுப்போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் குரும்பைகட்டி சனசமூகநிலைய மைதானத்தில் இடம்பெற்றது. (ம)

## சாட்டி திருவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 13

வேலணை சாட்டி புனித சிந்தாந்திரை மாதா ஆலயப் பெருவிழா இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகும்என்றுவேலணைப் பிரதேச சபை தவிசாளர் தெரிவித்தார். நவநாள்களைத் தொடர்ந்து எதிர்வரும்22ஆம்திகதிதிருவிழா நடைபெறும் என்றும் திருவிழா சிறப்புற அனைவரையும் ஒத்துழைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ம-7)

## சிரமதானம்

கொடிகாமம், செப். 13

இலங்கை ஐக்கிய நாடுகள் நட்புறவு அமையத்தின் நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளுக்கான இளைஞர்களும், சாவகச்சேரி இளைஞர் சம்மேளனத்தினரும் இணைந்து சிரமதானமொன்றை முன்னெடுக்கவுள்ளனர். கச்சாய்-வீதி கடற்கரைப் பகுதியில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை இந்த சிரமதானம் இடம்பெறவுள்ளது. "இயற்கையை நேசிப்போம்" செயற்திட்டத்தின் கீழ், டெங்கு ஒழிப்புக்கும், பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருள்களை விலக்குவதையும் இலக்காகக் கொண்டு இந்தச் சிரமதானம் மேற்கொள்ளப்படும் என்றும் இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் இந்தச் சிரமதானத்தில் இணைய வேண்டும் என்றும் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ம-159)

## சாவுச் சடங்குகளின்போது பட்டாசுகளுக்குக் கட்டுப்பாடு சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் தர்சன் திட்டவரைவு



சாவகச்சேரி, செப். 13

சாவுச் சடங்குகளில் அதிகளவான பட்டாசுகள் வெடிக்க வைக்கப்படும் கலாசாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் க.தர்சன் தனிநபர் திட்ட வரைபை வழங்கினார்.

சாவுச் சடங்குகள் நடைபெறும் வேளைகளில் அதிக அளவில் பட்டாசுகள் வெடிக்க வைக்கப்படுவது சாவகச்சேரி நகர சபையால் தடை செய்யப்பட்டுள்ள நிலையிலும் சிலர் அதனை மீறி அதிகளவான பட்டாசுகளை வெடிக்க வைக்கின்றனர். குறிப்பாக சாவகச்சேரி சந்தியில் இவ்வாறான சம்பவங்கள் மிகமிக அதிகளவில் இடம்பெறுகின்றன. இதையடுத்தே இவ்வாறானதொரு திட்ட வரைவு கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற சபையின் மாதாந்த அமர்வில் கொண்டுவரப்பட்டது.

திட்டவரைபைக் கொண்டுவந்த சபையின் உறுப்பினர் க.தர்சன் உரையாற்றுகையில், "இறுதிச் சடங்கின்போது அதிகளவான பட்டாசுகள் வெடிக்கவைக்கப்படும் செயற்பாட்டினைத் தடுக்க வேண்டுமாயின் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனக்கிரியைக்காகவோ அல்லது நல்லடக்கத்திற்காகவோ சடலங்களைக் கொண்டு செல்வது தொடர்பான அனுமதி வழங்கும் படிவத்தில், சந்திகளில் பட்டாசுகள் அதிக அளவில் வெடிக்க வைக்கக்கூடாது என்ற நிபந்தனை சேர்க்கப்பட வேண்டும். அதில் படிவத்தைப் பதிவு செய்ய வருபவரின் தேசிய அடையாள அட்டை இலக்கமும் பதிவுசெய்யப்பட வேண்டும். படிவத்தில் உள்ள அறிவுறுத்தலை மீறினால் படிவத்தினை பெற்றுக்கொண்டவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார்.

முன்னைய சபையின் காலத்தில் சந்திப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் உள்ளோர் மற்றும் பொதுமக்களால் அதிக அளவில் பட்டாசுகள் வெடிக்க வைக்கப்படுவதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவது சுட்டிக்காட்டப்பட்டு அதனைக் கட்டுப்படுத்துமாறு விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது தொடர்பான அறிவித்தலும் சந்தியில் காட்சிப்படுத்தப்பட்டது. அந்தச் சபையின் ஆட்சிக் காலம் முடிவடைந்து தேர்தல் நடைபெறும் காலம் வரை மக்கள், சபையின் தீர்மானத்தைக் கடைப்பிடிக்கவில்லை. (ம-9)

## கேரளா கஞ்சாவுடன் கைதானவருக்கு 14 நாள்கள் விளக்க மறியல்

வவுனியா.செப்.13
வவுனியாவில் கேரளகஞ்சாவுடன் ஒருவரை பொலிசார்கைது செய்துள்ளனர் இவரை இன்று நீதி மன்றில் முன்னிலைப் படுத்தியவேளை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.
குறித்தசம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்:
பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் யாழில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற பேருந்தை நேற்று இரவு 10 மணியளவில், வவுனியா நொச்சிமோட்டை பாலத்தடியில் வழிமறித்த வவுனியா போலிஸார், சோதனை மேற்கொண்டதுடன், அதிலிருந்த இரண்டு கிலோ கேரளகஞ்சாவை கைப்பற்றினர். அதனை உடமையில்வைத்திருந்தார் என்றசந்தேகத்தின்பேரில் மிகிந்தலை பகுதியை சேர்ந்த ஒருவரையும் கைதுசெய்துள்ளனர்.
கைதுசெய்யபட்டவர் இன்றையதினம் நீதிமன்றில் முற்படுத்தியவேளை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (110)



சுவிஸ் நாட்டினைச் சேர்ந்த தவம் சசி இணையரின் திருமணநாளை முன்னிட்டு, பரமன்கிராய் பூனகரியில் வசிக்கும் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நேற்றைய தினம் வாழ்வாதாரமாக 50 கோழிக்குஞ்சுகளும், தேவையான உபகரணங்கள், உணவுகள் மற்றும் 8 ஆயிரத்து 990 ரூபா நிதி உட்பட 25ஆயிரம் ரூபா பெறுமதியான உதவி வழங்கப்பட்டது. (222)



# வட்டுவாகல் கடல் நீர் ஏரியில் உயிரிழந்து மிதக்கும் மீன்கள்

முல்லைத்தீவு ,செப் .13

முல்லைத்தீவு மாவட்டம் வட்டுவாகல் கடல் நீர் ஏரியில் கடந்த இரண்டு நாட்களாக கடல் வாழ் உயிரினங்கள் உயிரிழந்து மிதந்து காணப்படுகின்றன. வட்டுவாகல் கடல் நீர் ஏரியினை நம்பி வாழ்கின்ற 240 மீனவ குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை வட்டுவாகல் கடலினை ஆழப்படுத்தி தருமாறு மீனவர்கள் கடந்த காலங்களில் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்ட போது வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளபோதும், அதற்கான நடவடிக்கைகள் எவையும் எடுக்கவில்லை என்றும் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.
இந்த நிலையில் கடந்த இரண்டு நாட்களாக வட்டுவாகல் கடல் நீர் ஏரியில் உள்ள மீன் இனங்கள் உயிரிழந்த நிலையில் மிதந்து காணப்படுவதால் , பாலத்தால் செல்லும் போது துர்நாற்றம் வீசுகின்றது. இந்த இறந்த மீன்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.
இது தொடர்பில் கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரியிடம் கேட்டபோது கடந்த ஆண்டும் நீர்வற்றி வறட்சியால் மீன்கள் உயிரிழந்துள்ளன. அதேபோல் இந்த ஆண்டும் உயிரிழந்துள்ளது.
இதுதொடர்பில் கடந்த ஆண்டும் நாரா கடற்தொழில் ஆய்வு நிறுவனம் பரிசோதனை மேற்கொண்டு மீன்களுக்கான ஒட்சிசன் இல்லாத காரணத்தால் மீன்கள் உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.
அதுபோல்தான் இந்த ஆண்டும் உயிரிழந்திருக்கலாம் என்றும் என்று தெரிவித்துள்ளார்.
அத்தோடு கடந்த ஆண்டு நீர் நிலையை ஆழப்படுத்த வரவு செலவுத்திட்டத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் ,வட்டுவாகல் பகுதி வன ஜீவராசிகள் திணைக்களத்தின் ஆளுகைக்குள் உள்ளதால், அவர்களின் முறையான அனுமதி இதுவரை கிடைக்கவில்லை .தற்போது அந்த அனுமதியைப்பெறுவதற்கு உரிய முறைப்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது .இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற பிரதேச சபை கூட்டத்தில் இது தொடர்பாக பேசப்பட்டது . மிகவிரைவில் வட்டுவாகல் பகுதியில் உள்ள சகதி அள்ளப்பட்டு கடலோடு இணைப்புச்செய்யப்படும் என்றுகடற்தொழில்நீரியல்வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.
வட்டுவாகல் கடல்நீர் ஏரியினை சுற்றி உள்ள 250 வரையான மீனவகுடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வறட்சி காரணமாக வாழ்வாதாரத்தினையும் இழந்துள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.
தங்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்என்றும் இது தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றும் மீனவர்கள் தெரிவித்துள்ளார்கள். (ரி-3)

## பாடசாலைக்கான நிதியுதவி வழங்கல்

வவுனியா,செப் ,13
வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவினால் குறித்தொதுக்கப் பட்ட பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து வவுனியாவடக்கு வலய தவசியாகுளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு தளபாடம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட ஐம்பது ஆயிரம் ரூபாவிற்கான தளபாடங்கள் பாடசாலை அதிபரிடம் வழங்கிவைக்கப்பட்டது.

## மணல் ஏற்றியவருக்கு ரூ.50 ஆயிரம் தண்டம்

சாவகச்சேரி,செ.12
அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
தென்மராட்சி தெற்குப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி மணல் எற்றிவந்த வாகனச் சாரதிக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.
இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிவான், மணலைப் பறிமுதல் செய்யுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (9)

# ஓய்வுநிலை மதிப்பீட்டாளர்களை நியமித்து மதிப்பீட்டு பணிகளை துரிதப்படுத்தவேண்டும்

## மாகாண சபை உறுப்பினர் சத்தியலிங்கம் வேண்டுகோள்



வவுனியா ,செப் ,13
ஓய்வுநிலை மதிப்பீட்டாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து மதிப்பீட்டு பணிகளை துரிதப் படுத்த வேண்டும், இதன் மூலம் பிரதேச சபைகள் போதிய வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடியும் என வடக்கு மாகாண சபை. உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
உள்ளூராட்சி மன்றங்கள் குறிப்பாக பிரதேச சபைகள் போதிய வருமானமின்றி பொது மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளைமேற்கொள்ளமுடியாமல் உள்ளது. இதற்குக் காரணம் ஆதனவரி அறவீடு சரியாக நடைபெறுவதில்லை. நீண்டகாலமாக பிரதேசசபைகளின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் ஆதனமதிப்பீட்டு பணிகள் மேற் கொள்ளப்படவில்லை. போதிய மதிப்பீட்டாளர்கள் பணியில் இல்லையென்பதாகக்காரணம்கூறப்படுகின்றது.
எனவே கடந்த10ஆம்திகதி வவுனியா பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேசஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் வடக்குமாகாண சபை உறுப்பினர் மருத்துவர்ப.சத்தியலிங்கத்தினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளாக :

1. வீட்டுத்திட்டம் வழங்கலில் வீடற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். அதற்கு அடுத்ததாக ஏற்கனவே அரச ,அரச சார்பற்ற நிறுவனங்களால் நீண்ட காலத்திற்கு முன்னர்வழங்கப்பட்டஅரை நிரந்தரவீடுகள் சேதமடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல்வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களின் வருமானத்தை அதிகரிக்க ஆதனவரி மதிப்பீட்டுப் பணிகளை துரிதப் படுத்தல் வேண்டும். மதிப்பீட்டாளர்கள் பற்றாக்குறையை போக்க ஓய்வுபெற்றவர்களைப் பணிக்கு அமர்த்த வேண்டும்.
3. ஓமந்தையில் அரச அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் இதுவரை எந்தவிதமான அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளாதவர்களுக்கு குறிப்பிட்ட கால அவகாசம் வழங்கி காணிகளை அபிவிருத்தி செய்ய பணிப்புரை வழங்கப்படல் வேண்டும். தவறும் பட்சத்தில் காணிக்காக காத்திருப்போர் பட்டியலில் பொருத்தமான பயனாளிகளை தெரிவுசெய்து அவர்களுக்கு காணிகளை பகிர்ந்தளிக்க வேண்டும்.
4. காணியற்றவர்களுக்கு புதிதாக காணிகள் வழங்கும்போது குடியிருப்பதற்காக வழங்கப்படும் மேட்டுக்காணிகளுக்கு மேலதிகமாக அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக கைவிடப்பட்ட குளங்களை சீரமைத்து வயல்காணிகள் பகிர்ந்தளிக்கப்படல்வேண்டும். இதற்கு வனவளத் திணைக்களம் ஒத்துழைப்புவழங்குதல் வேண்டும்.

மேற்படி முன்மொழிவுகள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதுடன் நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு துறைசார்ந்த திணைக்களங்களுக்கு தீர்மானங்கள் அனுப்பிவைப்பதாக முடிவெட்டப்பட்டது. (110)

## சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காதோருக்கு அபராதம்

சுகாதார விதிமுறைகளுக்கு முரணான வகையில் நடமாடும் பாண் விற்பனையில் ஈடுபட்ட முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கும், காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகர் ஒருவருக்கும் நீதிவான் 15 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துள்ளார்.
முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் நடமாடும் பாண் விற்பனையில் ஈடுபட்ட முச்சக்கரவண்டியைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சுரேஸ் ஆனந்தன் மறித்துச் சோதனை செய்தபோது விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் இருந்தமை தெரியவந்தது.
இதையடுத்து, முச்சக்கரவண்டிச் சாரதிக்கு எதிராக மருத்துவச் சான்றிதழ் இல்லாமல் உணவைக் கையாண்டமை, திகதி குறிப்பிடப்படாத பொதி செய்த இனிப்பு பாணை விற்பனைக்கு வைத்திருந்தமை, கையுறை அணியாமல் உணவை வழங்கியமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு கடந்த 4 ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று முன்தினம்விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டபோது வியாபாரி குற்றத்தை ஏற்றுக் கொண்டமையையடுத்து ரூபா 8 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.
பொதுமக்களின் முறைப்பாட்டை அடுத்து முல்லைத்தீவு கள்ளப்பாட்டிலுள்ள வர்த்தக நிலையத்தைச் சோதனைக்கு உட்படுத்திய பரிசோதகர் காலாவதியான பொருள்களை வைத்திருந்தமையைக் கண்டுபிடித்துள்ளார். இதையடுத்து வர்த்தகருக்கெதிராகக் கடந்த 4 ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த 11 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது வர்த்தகர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து நீதிவான் இவருக்கு ரூபா 7 ஆயிரத்து 500 அபராதம் விதித்துள்ளார். (115)

# மக்களின் வேண்டுகோள் விரைவில் பரிசீலிக்கப்படும்

## மன்னார் மாவட்டச் செயலர் மோகன்றாஸ் தெரிவிப்பு

மன்னார் ,செப் .13

கூராய் பறங்கியாற்று மணல் அகழ்வை மட்டுப்படுத்தி அங்கு மணல் அகழும் உரிமத்தை தமது கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்குத் தந்து, அதனூடாக தமது மக்களின் வறுமையை போக்க வேண்டும் என்று மாவட்ட செயலரிடம் அந்த கிராமத்து மக்கள் கேட்டுக்கொண்டனர். கூராய் மக்களின் வேண்டுகோள் விரைவில் பரிசீலிக்கப்படும் என மாவட்டச் செயலர் மோகன்றாஸ் தெரித்துள்ளார்.

மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கூராய் மற்றும் சீது விநாயகர்குளம் கிராமங்களை அண்மித்து இருக்கும் பறங்கியாற்றில் தினமும் இரவுபகலாக நூற்றுக்கும் மேற்பட்ட பாரவூர்திகளில் மணல் ஏற்றி வெளியிடங்களில் விற்பனை செய்யப்படுகிறது.

இதனால் சூழல் பாதிக்கப்பட்டு நல்ல தண்ணீர் உப்பு தண்ணீராகி உள்ளது. ஏற்கனவே வறட்சி, வறுமையால் பாதிக்கப்பட்ட மக்கள் மென்மேலும் பாதிப்படைகின்றனர்.

அத்துடன் இந்த செயற்பாட்டின் காரணமாகவே வீதிகள் குன்றும் குழியுமாகி மிக மோசமாகிவிட்டது.


இங்கு மணல் அகழ்வு செய்வதை தடைசெய்ய வேண்டும் அல்லது மட்டுப்படுத்தி மணல் அகழும் பொறுப்பினை எமது கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்குத் தந்து அதனூடாக எமது மக்களின் வறுமையைப் போக்கி எமது கிராமங்களை அபிவிருத்தி செய்ய மாவட்டச் செயலர் முயற்சி செய்ய வேண்டும் என்று கூராய் மக்கள் விடுத்த வேண்டுகோளை மன்னார் மாவட்டச் செயலருக்கு வேண்டுகோள் விடுத்தனர்

இது சம்பந்தமாக மாவட்டச் செயலர் மோகன்றாஸ் அவர்களிடம் கேட்டபோது:

நான் மன்னார் மாவட்டத்தை பொறுப்பேற்று சில மாதங்கள் ஆகின்றது ஒவ்வொரு நிர்வாக அலகுகளாகவே சரிப்படுத்த முடியும். கூராய் மக்கள் பறங்கியாற்று மணல் அகழ்வு அனுமதியை, தமது கிராமத்து அபிவிருத்தி சங்கங்களுக்கு தருமாறு கேட்பதும், ஒவ்வொரு கிராம அபிவிருத்தி சங்கங்களும் தமது பகுதியில் உள்ள வளங்களை பயன்படுத்தி கிராமங்களை அபிவிருத்தி செய்து கொள்வதானது புதிய விடயமல்ல.

இவை ஏற்கனவே நடைமுறையில் உள்ள விடயம் தான். இது தொடர்பாக ஆராயப்படுவதோடு மணல் அகழும் பிரச்சனையை மிக இறுக்கமாக கையாண்ட போதிலும்,சிலர் அதை தளர்த்தி விடுவதாக அறிய முடிகிறது. தமது வளங்களை பாதுகாக்க மக்கள்தான் முன்வரவேண்டும் கடிதங்களை மட்டும் அனுப்பி விட்டு வீட்டிலிருந்தால் எதிலும் தீர்வு கிடைக்காது. மீண்டும் உரிய அதிகாரிகளுடன் பேசி மக்களின் வாழ்வாதாரத்திற்காக பொலிஸாரின் உதவியுடன் பறங்கியாற்று மணல் அகழ்வை கட்டுப்படுத்தவும் ஏற்பாடு செய்யப்படும் என்று மாவட்ட செயலர் தெரிவித்தார்.

(213)



# முகமாலை மக்கள் வறட்சியால் பாதிப்பு

கிளிநொச்சி,செப் .13

கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள முகமாலை கிராமம் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி பொது அமைப்புக்கள் மற்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக பருவ மழை பொய்த்துபோனதன் காரணமாக குறித்த பிரதேசத்தில் கிணறுகளில் தண்ணீர் வற்றியுள்ளதையும், வாழ்வாதாரப் பயிர்கள் அழிவடைந்துள்ளமையையும் மக்கள் சுட்டிக்காட்டினர் . அத்துடன் கால்நடைகளிற்கும் தண்ணீர் இன்மையால் கால்நடைகள் இறப்பதாகவும் தெரிவிக்கின்றனர். குறித்த பகுதிக்கு பயணம் செய்த வடக்குமாகாண சபை உறுப்பினர் குருகுலராசா மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், உறுப்பினர் வீரவகுதேவரிடம் மக்கள் இப்பிரச்சனை தொடர்பில் தெரியப்படுத்தினார்கள்.

இதுதொடர்பில் சபை, செயலர், தவிசாளர் ஆகியோரிடம் கேட்டபோது:

241 குடும்பங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். 10 குடும்பங்களுக்கு உடனடியாக தண்ணீர்த்தேவை தீர்த்துவைக்கப் பட்டுள்ளதாக, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலரும், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளரும் தெரிவித்தனர்.

# கிளிநொச்சி பொதுச் சந்தையில் திடீர் பரிசோதனை



கிளிநொச்சி செப். 13

கிளிநொச்சி, கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று கிளிநொச்சி பொதுச் சந்தையில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

சந்தையில் பொதுமக்கள் பாவனைக்கு உதவாத கடலுணவுகள் பழவகைகள் போன்றவற்றைக் கைப்பற்றி அழித்துள்ளனர்.

எதிர்காலத்தில் இவ்வாறான பொதுமக்களின் சுகாதாரத்திற்கு பங்கம் விளைவிக்கும் வகையிலான உணவுப் பொருள்கள் சந்தையில் விற்பனை செய்யப்படுமாயின் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவீர்களென வியாபாரிகளை எச்சரிக்கை செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (9)



# கனகராயன்குளத்தில் விபத்து ஐந்துபேர் காயம்

கிளிநொச்சி,செப்.13

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த மூடுந்து வாகனம் விபத்துக்குள்ளாகி உள்ளது.

சாரதியின் நித்திரை தூக்கத்தினால், அதிகாலை 5.45 மணியளவில் கனகராயன்குளத்திற்கு அருகாமையில் மின்சார சபையின் மின்கம்பத்தில் மோதியுள்ள வாகனம் கடுமையான சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது.

விபத்தில் வாகனத்தில் பயணித்த 5 பேர் சிறிய காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

சாரதியும் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது .காயமடைந்தவர்கள் உடனடியாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் .

(222)

# இனம் சார்ந்த அரசியல்வாதிகளே சமூகத்தின் பின்னடைவுக்குக் காரணம்

மன்னார்,செப்.12

தமது இனம் சார்ந்த அரசியல்வாதிகளே தமது சமூகத்தின் பின்னடைவுக்கு காரணம் என முசலிபிரதேச மக்களும் பாடசாலை சமூகத்தினரும் குற்றம் சாட்டுகின்றனர்.

மன்னார் முசலிப்பிரதேசத்தில் அமைந்துள்ளது வேப்பங்குளம் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை உயர்தரம் வரை உள்ள பாடசாலையாகும்.

இந்தப் பாடசாலை 2010 ஆம் ஆண்டின் பின் மீள்குடியேற்ற பாடசாலையாக இயங்குகின்றது . கிட்டத்தட்ட நானூறுக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையில் கலைப்பிரிவு சிறப்பாக பயிற்றப்படுகிறது.

இந்த பாடசாலையானது போர்க்காலத்தில் இருப்பதை விட வும் மோசமாக எந்த ஒரு அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

பௌதீக மற்றும் அடிப்படை வசதிகள் செய்து முடிக்க வேண்டிய தேவைகள் அதிகமாக உள்ளது .சுமார் நூற்று ஐம்பது மாணவர்கள் வகுப்பறை வசதிகளின்றி தற்காலிக கொட்டகைகளிலும், மரநிழல்களிலும் கல்வி கற்கும் சூழ்நிலையில் உள்ளார்கள்.

அதிபர் அலுவலகம் ஆசிரியர் ஓய்வறை, சிறப்பு பாட அலகுகள், ஒன்று கூடல் மண்டபம், சிற்றுண்டிச் சாலை, நூலகம், ஈருருளிக்காப்பகம் ஆசிரியர் விடுதி போன்ற தேவைகள் உள்ளன.

நிறுவனம் ஒன்றினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட, எண்சதுர வடிவ வகுப்பறைகள் பொருத்தமானதாக இல்லை .காரணம் அவை சுற்றுலா விடுதிகளில் உள்ள சிறு கொட்டகைகள் ஒன்று தொடக்கம் முப்பத்தைந்து மாணவர்கள் கற்பதற்கு இடவசதியற்றதாக உள்ளது.

இந்தப் பாடசாலைக்கான கட்டட ஒதுக்கீடுகள் வேறு வளங்களினாலோ அண்மித்த காலங்களில் வழங்கப்படவில்லை என்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

யாழ்ப்பாணம் உட்பட தமிழ் சமூக ஆசிரியர்கள் ஐந்திற்கும் மேல் பணியாற்றுகின்றார்கள், இவர்களுக்கான தங்கும் விடுதிகள் இல்லை.

அத்துடன் தகரக் கூரை பொருத்தப்பட்ட தற்காலிக வகுப்பறைகளால் வெப்பம் அதிகரித்து தலையிடி ,மயக்கம் என்பன ஏற்படுவதாகவும் பாடசாலை நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை வளாகத்தினுள் அடிக்கல் நடுவதற்காக எப்போதோ கொட்டப்பட்டுள்ள கற்கள், அடித்தளத்திற்கும் சற்று உயரமாக கட்டப்பட்டு கைவிடப்பட்ட கட்டடங்கள், தகரத்தால் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகைகள், பலத்த காற்றினால் விழுந்து கிடப்பது ,பாடசாலை சுற்று வேலிகள் இல்லாமல் இருப்பது பற்றியும் பாடசாலையில் எந்த அபிவிருத்தியும் நடைபெறாமல் உள்ளது பற்றியும் வலயக்கல்வி அலுவலர் திருமதி சுகந்தி செபஸ்ரியனிடம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது :

முசலி வேப்பங்குளம் பாடசாலையில் சில குறைபாடுகளுடன் வகுப்பறை பற்றாக்குறை காணப்பட்டது உண்மை. அதற்கான வேலைத்திட்டங்கள் பூர்த்தியாகியுள்ளது. அடுத்தமாதம் அளவில் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்ற வரிடம் ஏற்கனவே அடிக்கல் நடப்பட்டு நிறுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக கேட்ட போது ,அங்கு உள்ள அரசியல் தலையீடுகள் பற்றி கருத்து கூறுவது நல்லதல்ல என்று கூறினார். மன்னார் மற்றும் மடுவலய கல்வி அலுவலர் திருமதி சுகந்தி செபஸ்ரியன் .

மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் பலம் மிக்க அமைச்சர்களை கொண்டிருந்த போதும், ஏன் இந்த பாடசாலை அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கின்றது என்று மக்கள் சிலரிடம் கருத்து கேட்ட போது,

முசலி பிரதேசத்தில் கிட்டத்தட்ட மூன்று அரசியல் தலைமைகள் செயற்படுகின்றார்கள்

அரசியல்வாதிகள் யார் பெரியவர்கள் என்று காண்பிப்பதற்காக மக்கள் அபிவிருத்தியில் விளையாடுகிறார்கள் அவரவர் தம் ஆதரவாளர்களை வைத்து ஒரு அரசியல்வாதியால் ஏதேனும் ஒரு திட்டம் கொண்டு வந்தால் மற்றவரால் அது தடுத்து நிறுத்தப்படும்.

மக்கள் ஆதரவை திரட்டுவதில் மட்டுமே செயற்பாடுகள் அதிகமாக உள்ளது .இப்படியான சூழலுக்குள் மாட்டிக்கொண்டதுதான் இந்த வேப்பங்குளம் பாடசாலை என்று முசலி வேப்பங்குளம் மக்கள் சிலர் கருத்து தெரிவித்தார்கள். (213)

### தமிழ் மக்களுக்கு ஏதாவது கிடைக்க வேண்டுமெனின்

# தொடர்ந்து ஓயாத அழுத்தத்தை கொழும்புக்கு வழங்க வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் கருத்து



யாழ்ப்பாணம், செப். 13

எமது மக்களுக்கு ஏதாவது கிடைக்க வேண்டுமால் நாம் ஒரு தடவையல்ல பல தடவைகள் கொழும்பைக் கேட்க வேண்டும். அழுத்தம் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்று தெரிவித்தார் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

திக்கம் வடிசாலையை சீரமைப்பதற்கு நேற்றுமுன்தினம் அடிக்கல் நடப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

“2015ஆம்ஆண்டுமுதல்திக்கம் வடிசாலையை மீளத்திறப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளைமேற்கொண்டதன்விளைவாக அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ரூபா 250 மில்லியனை ஒதுக்கித்தந்தமைஎமக்குப்பெருமகிழ்ச்சியை அளிக்கிறது. ஒன்பது மாதங்களில் பணிகளை முழுமையாக நிறைவு செய்து வழங்க வேண்டும். இந்தத் தொழிற்சாலையின் மூலம் சுமார் ஆயிரம் மக்கள் வேலை வாய்ப்பைப் பெறுவார்கள்'' என்று ஈ.சரவணபவன் மேலும் தெரிவித்தார். (ம-173,50)



## சாலை சீரமைப்பு

சாவகச்சேரி, செப். 12

சாவகச்சேரியில் போக்குவரத்துச்செய்ய முடியாத அளவுக்குக்கற்களாகக்காணப்பட்ட சாலை வட்டார உறுப்பினர்களின் முயற்சியினால்சாவகச்சேரிநகரசபைத் தவிசாளரின் பணிப்பின் பேரில் கிரவல் சாலையாக மாற்றப்பட்டது.

சாவகச்சேரி தனங்களப்பு சாலையில் கடலுணவு விற்பனைப் பிரிவு கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட வேளையில்கோயிற்குடியிருப்பு கடற்றொழிலாளர் சங்கத்தினர் தம்மால் பிடிக்கப்படும் கடலுணவுகளை குறுகிய பாதையில் கொண்டு செல்ல கடற்கரையோரமாக சாலை அமைத்து வழங்குமாறு கேட்டிருந்தனர். இதையடுத்து தற்காலிகச் சாலையொன்று அமைக்கப்பட்டது. கடந்த 2014ஆம் ஆண்டு இந்தச் சாலையை தார்ச் சாலையாக அமைத்துத்தருமாறுநீரியல்வளத்திணைக்களத்தினரிடம் நகரசபையினர்கோரியிருந்தனர். அண்மைக்காலமாக சாலை மிகவும் மோசமாகச் சேதமடைந்திருந்தது. இதையடுத்தே சாவகச்சேரி நகர சபையால் சாலை சீரமைக்கப்பட்டது. (ம-9)



## திண்மக்கழிவகற்றல்விழிப்புணர்வு

சாவகச்சேரி, செப். 13

சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகத்தினர் சபை எல்லைக்குட்பட்டசிறார்களுக்கானசெயன்முறைமூலமானதிண்மக்கழிவகற்றல் தொடர்பான செயற்பாடுகளை வாராந்தம் நடத்திவருகின்றனர்.

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையச் சிறார்களுக்கான செயற்பாடுகள் பொது நூலக மண்டபத்தில்நேற்றுநடைபெற்றன. நூலகப்பணியாளர்திருமதி இ.சதானந்தராசா சிறார்களுக்கு செயன்முறை மூலம் திண்மக்கழிவகற்றல்தொடர்பானவிளக்கங்களைவழங்கினார். (ம-9)

## யாழ்ப்பாணகுடாநாட்டுக்குவருகிறார் தமிழக அமைச்சர்செங்கோடையன்!



யாழ்ப்பாணம், செப். 13

தமிழகக் கல்வி அமைச்சர் செங்கோடையன் எதிர்வரும் 16ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார். தனதுபயணத்தின் ஒருபகுதியாகபாடசாலைகள், யாழ்ப்பாணப் பொதுநுலகம் என்பனவற்றுக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கைக்கு வருகைதரும் தமிழ்நாடு கல்வி அமைச்சர் செங்கோட்டையன் கண்டியில் இடம்பெறும்நிகழ்வுஒன்றில்பங்குகொள்கிறார். அதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கும் வரவுள்ளார். இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கு பயணிக்கும் தமிழ் நாடு கல்வி அமைச்சர் யாழில் உள்ள நூலகத்திற்குஒருலட்சம்புத்தகங்களை அன்பளிப்புச்செய்யவுள்ளார். அத்துடன்சிலபாடசாலைகளுக்கும்செல்லவுள்ளார். (ம-105)

### வடமராட்சியில் கடலட்டை பிடிப்பவர்களுக்கு எதிரான வழக்கில்

# எதிர்வரும் 25ஆம் திகதியன்று வருகிறது நீதிமன்றின் கட்டளை



யாழ்ப்பாணம், செப். 13

“வடமராட்சி கிழக்குப் பகுதியில் அரச காணியில் அத்துமீறி வாடி அமைத்து கடலட்டை பிடிப்ப வர்களிற்கு எதிரான வழக்கில் எதிர்வரும் 25ஆம் திகதி கட்டளை பிறப்பிக்கப்படும்'' என கிளிநொச்சி மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் கடலட்டை பிடிப்பதற்கு நீரியல் வளத்திணைக்களம் அனுமதி வழங்கியுள்ள நிலையில் கரையோர அரச நிலங்களை அடாத்தாகப் பிடித்து வாடி அமைத்தே பிற மாவட்ட மீனவர்கள் கடலட்டைத் தொழில் புரிகின்றனர். இவ்வாறு அரச நிலத்தினை அடாத்தாகப் பிடித்து வாடி அமைத்துள்ளதொழிலாளர்களையும். அவர்கள்சார்ந்தநிறுவனங்களையும்அங்கிருந்துவெளியேற்றுமாறு மருதங்கேணிப் பிரதேச செயலாளர் கடந்த ஜூலை மாதம் 3ஆம் திகதியன்று கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த வழக்கு இடம்பெற்று வந்த போதே நிறுவனமொன்று அங்கிருந்து தானாக வெளியேறியது. ஏழுதரப்பினர்அங்குதொடர்ந்தும் தங்கியிருந்துதொழில்செய்துவருகின்றனர். குறித்த வழக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. குறித்த வழக்கின் எதிராளிகள் ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதியுடன் அங்கிருந்து வெளியேற இணக்கம் தெரிவிப்பதால் அதுவரை அங்கு தங்கியிருக்க அனுமதி கோரினார்கள்.

எனினும்வழக்காளியானபிரதேச செயலாளர் அதற்கு மறுப்புத் தெரிவித்ததோடு அவ்வாறு சந்தர்ப்பம் வழங்குவதனால்ஏற்படும்பாதிப்பினையும் உள்ளூர் மீனவர்கள் எதிர்நோக்கும் பாதிப்பினையும் சுட்டிக்காட்டினார். இவற்றினை ஆராய்ந்தநீதிபதிமா.கணேசராஜா இதற்கான கட்டளை எதிர்வரும் 25ஆம்திகதிவழங்கப்படும்எனத் தெரிவித்து வழக்கை ஒத்தி வைத்தார். (ம-105)

## டெங்குக்கு ஏதுவான சூழல் இருந்தால் மிகத்தீவிரமான சட்ட நடவடிக்கைகள்

### காரைநகர் பிரதேச சபை கடும்பிடி

யாழ்ப்பாணம்,செப் 12

காரைநகர் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் உள்ள பாவனை அற்ற காணிகளில் டெங்கு பெருகுவதற்கு ஏதுவான காரணிகள் கண்டறியப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபை அறிவித்துள்ளது.

“டெங்கு நுளம்பின் தாக்கம் இனி வரப்போகும் மழைக் காலங்களில் அதிகமாக இருக்கும். ஆகவே நுளம்பு பெருகாமல் சுற்றாடலைப் பாதுகாப்பது ஒவ்வொருவரினதும் கடமை. இது தொடர்பாக சுகாதார மருத்துவ அதிகாரியின் பணிமனையினர் கண்காணிப்பு நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளனர். ஆனால் பயன்படுத்தப்படாமல் உள்ள வெறும் காணிகளில் டெங்கு பெருக்குவதற்கான சாதகங்கள் அதிகமாக உள்ளன. அத்தகைய காணிகளின் உரிமையாளர்கள் பலர் வெளிநாட்டில் உள்ளனர். அவ்வாறான காணிகள் இங்கு பராமரிக்கப்படுவது இல்லை. இது தொடர்பில் பல முறை அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. ஆனால் அது தொடர்பில் உரிமையாளர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை.

ஆகவே அவர்களுக்கு எதிர்வரும் 20ஆம் திகதி வரை துப்பரவு செய்வதற்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அதையும் மீறி டெங்கு பெருகும் அபாயமான இடங்களை வைத்திருப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் காணிகள் சபையின் ஆளுகைக்குக் கொண்டு வரப்பட்டு குற்றத்துக்கான தண்டப் பணமும் அறவிட நேரிடும்" என்று காரைநகர் பிரதேச சபை மேலும் அறிவுறுத்தியுள்ளது. (ம-7)







யாழ்ப்பாணம், கைதடி கிழக்கு கள்ளிநகர் அருள்மிகு வீரபத்திரர் ஆலயத்தின் குடமுழுக்கு நேற்றுப் புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (159)

# வதிரி உல்லியனொல்லை அம்மனின் தேர்த்திருவிழா

வதிரி, செப். 13

வடமராட்சி வதிரி உல்லியனொல்லை அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலயத்தின் தேர் தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

காலை 6 மணியலவில் கிரியைகள் ஆரம்பமாகி காலை 8 மணியளவில் வசந்தமண்டப வழிபாடுகள் இடம்பெற்று 10 மணியளவில் தேர்த் திருவிழா இடம்பெறும்.

மறுநாள் (நாள்ள) ஆலயத்தில் காலை 10 மணியளவில் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (ம-124)

# அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சை அரசுடன் உடன் ஆரம்பியுங்கள்

## சம்பந்தனிடம் வலியுறுத்துகின்றது

## அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான தேசிய அமைப்பு

**யாழ்ப்பாணம், செப். 13**

**அரசியல் தீர்வை எதிர்பார்த்து கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு நல்லிணக்கத்தின் அடையாளமாக அரசியல் கைதிகளை நிபந்தனை யின்றி விடுதலை செய்வதற்கான அரசியல் ரீதியான பேச்சை உடனடியாக ஆரம்பித்து இழுத்தடிப்பின்றி காலவரையறைக்குள் விடு தலைக்கு வழிவகுக்குமாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்புக் கேட்டுக்கொண்டுள்ளது.**

இது தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசியல் கைதிகள் விடயமாகத் தங்களின் அழைப்பின் பேரில் கடந்த ஜீலை 17ஆம் திகதி தங்களை நாடாளுமன்றத்தில் சந்தித்தோம். எமது சந்திப்பின்போது தாங்கள் கேட்டு கொண்டதற்கிணங்க அரசியல்கைதிகளின் விவரங்களடங்கிய தொகுப்பு ஒன்றைக் கையளித்தோம்.

இந்தச் சந்திப்பின்போது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத்தீர்மானத்தைத் தோற்கடிக்கவும், தமிழ் மக்களின் எரியும் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாகவும், அரசியல் கைதிகளின் விடுதலை உட்பட தாங்கள் முன் வைத்த பத்து கோரிக்கைகளை தலைமை அமைச்சர் ஏற்றுக் கொண்டதாகவும், அரசியல் கைதிகளின் விடுதலை விடயமாக அரச தலைவர் நாடு திரும்பியதும், தாங்களும்(சம்பந்தன்) தலைமை அமைச்சரும், அரச தலைவரும் அவசர சந்திப்பை மேற்கொள்ள உள்ளதாகவும் குறிப்பிட்டீர்கள்.

இச்சந்திப்பு நிகழ்ந்ததா? அரச தலைவர் கடந்த ஓகஸ்ட் 21ஆம் திகதி மீண்டும் வெளிநாடு சென்று திரும்பி விட்டார். அவசர சந்திப்பு என்பது அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையில் கிழமைகளையும் மாதங்க்ளையும் கடந்ததா?

வடக்கு முதலமைச்சரின் நூல் வெளியீட்டில் கலந்துக் கொண்ட நீங்கள் அங்கு உரையாற்றிய போது, "தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் நியாயமானது" எனப் பகிரங்கமாகக்கருத்துதெரிவித்தீர்கள். கூட்டமைப்புத் தோற்றம் பெறுவதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பே காரணம். அதைச் சிதைத்துவிட வேண்டாம் எனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் குறிப்பிடுகின்றனர்.

கூட்டாட்சியில் இணக்க அரசியல் நடத்தி அவ்வாட்சியில் எதிர்க்கட்சி தலைமைப் பதவியை அலங்கரித்துக் கொண்டிருக்கும் நீங்கள் அரசியல் தீர்வை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு நல்லிணக்கத்தின் அடையாளமாக அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்வதற்கான அரசியல் ரீதியான பேச்சை உடனடியாக ஆரம்பித்து இழுத்தடிப்பின்றிக் காலவரையறைக்குள் விடுதலைக்கு வழிவகுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எதிர்வரும் வருடத்தில் கட்சிகள் தேர்தலுக்காக முன் ஆயத்தத்தில் அரச தலைவருடனான் அவசர சந்திப்பை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்" என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் மகப்பேற்று நிபுணரின் இடமாற்றத்தை நிறுத்தவும்

*மாகாண சுகாதாரத் திணைக்களம் மத்திய சுகாதார அமைச்சிடம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், செப்.13

மன்னார் மாவட்ட மருத்துவமனையில் இருந்து பாதுகாப்புக்காரணங்களைகாட்டி வெளியேறிய மகப்பேற்று நிபுணரின்இடமாற்றுகோரிக்கையைநிராகரித்துமீண்டும் மன்னாருக்கே அனுப்பி வைக்குமாறு மாகாண சுகாதாரத் திணைக்களம் மத்திய சுகாதாரஅமைச்சிடம்அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

மன்னார் மாவட்ட மருத்துவமனையில் மகப் பேற்றின் போது குழந்தை ஒன்றின் இறப்பைச் சுட்டிக்காட்டி மகப்பேற்றுமருத்துவர்தாக்கப்பட்டார். இந்த நிலையில்மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதனையடுத்து இருவர்கைதுசெய்யப்பட்டு நீதி மன்ற உத்தரவின் பிரகாரம் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மருத்துவமனையில்இருந்த இரு மகப்பேற்று நிபுணர்களில்ஒருவரானதென்னிலங்கையைச்சேர்ந்தமருத்துவர் பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்து மருத்துவமனையில் இருந்து வெளியேறி வேறு இடத்துக்கான மாற்றலை மத்திய சுகாதார அமைச்சிடம்கோரியுள்ளார்.

இருப்பினும் மன்னார் மருத்துவமனையில் இடம்பெற்ற அசம்பாவிதத்தின் பின்னர் பாதுகாப்புநிலமைகள்பலப்படுத்தப்பட்டுள்ளமையினால் குறித்தமருத்துவரின்சேவை மாவட்டத்துக்குத் தொடர்ந்தும் தேவை என்பதனைக் கருதி மீளவும் மன்னாருக்கு அனுப்பி வைக்குமாறு மாகாணசுகாதாரத்திணைக்களம்அவசரகோரிக்கையை மத்திய சுகாதார அமைச்சின் கவனத்துக்குக்கொண்டுவந்துள்ளனர்.

இதேநேரம் மன்னார் மருத்துவமனையில் இருந்த இரு மகப்பேற்று நிபுணர்களில் ஒருவர் தனது ஒருவார கற்கை விடுமுறைக் காலம் நிறைவுற்று கடந்த திங்கட்கிழமை தொடக்கம் பணிக்குத் திரும்பியுள்ளதனால் குறித்தசிகிச்சைஓரளவுதடைகள் இன்றி இடம்பெறும் எனவும்தெரிவிக்கப்பட்டது. (105)

# சித்த மருத்துவம் பாரம்பரிய பிரதேசங்களில் இருந்து மறைந்துக் கொண்டிருக்கின்றது

*வடமாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் தெரிவிப்பு*



கொழும்பு,செப்12

பாரம்பரிய சித்த மருத்துவம் பாரம்பரிய பிரதேசங்களில் இருந்து மறைந்துகொண்டிருப்பதோடு,பாரம்பரிய சித்த மருத்து வத்தின் மகத்துவம் மற்றும் தூயத் தன்மையும் அழிவடைந்து செல்லுகின்றது என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவ கலாநிதி ஜீ. குணசீலன் தெரி வித்தார்.

வடக்குமாகாணசுதேசமருத்துவத்திணைக்களத்தின்ஏற்பாட்டில் சித்த மருத்துவத்தின் பாரம்பரியம், சித்த மருத்துவத்தின் வளர்ச்சியும், அடைவுகளும் தொடர்பாக தயாரிக்கப்பட்ட 'அகத்தியன் அவிழ்தம்' ஆவணப் படம் வெளியீட்டு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனவே சித்த மருத்துவத்தின் மகத்துவத்தின் முக்கியத்துவத்தை அறிந்து பாரம்பரிய சித்த மருத்துவத்தைக் கட்டிக் காக்க அனைவரும் முன் வர வேண்டும்-என்றார். (56)

# விபத்துக்களைத் தவிர்க்க வீதிகளில் குவிவுவில்லை கண்ணாடிகள்

## உப தவிசாளர் இ.ஜெயகரன் கோரிக்கை

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வீதிகளின் முக்கிய சந்திகளில் இடம்பெறும் வீதி விபத்துக்களைக் குறைக்கும் வகையில் மக்கள் எதிரில் வரும் வாகனங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ள குவிவுவில்லை கண்ணாடிகளைப் பொருத்துவதற்கு ஆவணம் செய்ய வேண்டும்என உப தவிசாளர் இ.ஜெயகரன் கோரிக்கை விடுத்தார்.

நல்லூர்ப் பிரதேச சபையின் அமர்வு சபா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் தவிசாளர் தியாகமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.இதன்போது உப தவிசாளர் இ.ஜெயகரனால் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

முதன்மை வீதிகளில் வேகத்தடை,வீதி குறியீட்டுப் பலகைகள் அமைக்கப்பட்டு இருக்கின்றது. மேலும் போக்குவரத்துப் பொலிஸ் கடமையில் ஈடுபடுகின்றனர்.குற்றச் செயல்களில் ஈடுபடுவோர்,வாகன அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனங்கள் ஒட்டுபவர்கள், வீதி ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்காது பிரதேச சபை எல்லைக் குட்பட்ட உபவீதிகளை,குறுக்கு ஒழுங்கைகளையும் அதிகம் பயன்படுத்துகின்றனர். இதனால் அந்தப் பிரதேசத்தில் வாழ்கின்ற அதிகமாக மக்கள் வீதி விபத்துக்களில் மாட்டிக்கொள்கின்றனர். ஆகவே வீதி விபத்துக்களைக் குறைக்கவும், மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க எதிர் வருகின்ற வாகனங்களை முன்கூட்டியே பார்த்து அறிந்துகொள்ளவும் குவிவுவில்லை கண்ணாடிகளைப் பொருத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார். இதனைச் சபை உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். இந்தக் குவிவுவில்லை கண்ணாடிகளைப் பொருத்தும் நடவடிக்கை யாழ்ப்பாண மாநகர சபை அமர்வில் முன்மொழியப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இது தொடர்பில் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலனிடம் தொடர்புகொண்டு கேட்போது,

சபைக்குட்பட்ட வீதிகள் சிலவற்றில் குவிவுவில்லை கண்ணாடிகள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் இடம்பெறும் வீதி விபத்துக்கள் குறைவடைந்துள்ளன- என்றார். (8)

## மகனுக்குச் சாவுத் தண்டனை நிறைவேற்றுங்கள்

*நீதிமன்றுக்குக் கடிதம் எழுதிவிட்டு துறவறம் பூண்ட தாய்*

கொழும்பு, செப் 13
மாணவியைக் கொலை செய்த எனது மகனுக்கு சாவுத்தண்டணை வழங்க நான் எதிர்க்கவில்லை எனக் கூறி நீதிமன்றத்துக்குக் கடிதம் ஒன்றை எழுதிக் கொடுத்துவிட்டு பெண்ணொருவர் பௌத்த பிக்குனியாகத் துறவறம் பூண்டுள்ளார்.
ஆர்.கே.குசுமாவதி என்ற இந்த பெண், கிரியால, பளுகொல்ல குண்டகல பிக்குகள் ஆராண்யத்தில் ராஜாங்கனயே தம்மதின்னா என்ற பெயரில் நேற்றுமுன்தினம் துறவரம் பூண்டுள்ளார்.
கிரிபாவ பொலிஸ் பிரிவின் வசித்து வந்த 17 வயதான மதுஷானி என்ற மாணவியை கொலை செய்த குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள நபரின் தாயே இவ்வாறு துறவரம் பூண்டுள்ளார்.
துறவரம் பூண தனக்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த மதுஷானியின் வீட்டுக்குச் சென்று, அந்த மகளுக்குப் புண்ணிய ஏற்கை வழிபாடு செய்து, தர்ம உபதேசம் செய்வதே தனது பெரிய எதிர்பார்ப்பு எனவும் தெரிவித்துள்ளார்.
இந்த மாணவியின் சாவு தனக்கு வாழ்க்கை தொடர்பில் பெரிய வெறுப்பை ஏற்படுத்தியது எனவும் ராஜாங்கனயே தம்மதின்னா பிக்குனி தெரிவித்தார்.

## இந்தியக் குடும்பங்கள் நெடுங்கேணியில் குடியமர்வு உண்மைக்கு புறம்பானது

*அரசதகவல் திணைக்களம் தெரிவிப்பு*

கொழும்பு, செப்13
வடக்கு மாகாண சபையின் அரசியல் அதிகாரத்திலுள்ளவர்கள் 250 இந்திய குடும்பங்களை நெடுங்கேணியில் குடியமர்த்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இதுதொடர்பாக அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
வடக்கு மாகாண சபையின் அரசியல் அதிகாரத்திலுள்ளவர்கள் 250 இந்திய குடும்பங்களை அந்த மாகாணத்தின் கிராமமான நெடுங்கேணியில் குடியமர்த்தியுள்ளதாகப் பொதுமக்களால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
குறித்த இந்தியக் குடும்பங்கள் நாட்டின் எந்தபாகத்திலும்குடியமர்த்தப்படாததன் காரணத்தால், அரச தகவல் திணைக்களம் இந்தக் குற்றச்சாட்டை ஆதாரமற்றவை எனக் குறிப்பிட விரும்புகின்றது.
2009ஆம் ஆண்டில் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர், இந்தியாவுக்குப் போரின்போது அகதிகளாக சென்ற 10 ஆயிரத்து 675 இலங்கைக் குடிமக்கள் இன்று வரை தமது சொந்த விருப்பத்தின்பேரில்இலங்கைக்குநாடு திரும்பியுள்ளனர்.
**இந்த அனைத்துநபர்களும் இலங்கைக் குடிமக்கள் ஆவதுடன், அவர்களது குடியுரிமை நிலை முறையாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.**

# மகிந்தவே அடுத்த அரசதலைவர்

*சுப்ரமணியன் சுவாமியின் கீச்சகத்தில் பதிவு*

> **Subramanian Swamy** ✓ @Swamy39
>
> Today Fmr President of Sri Lanka and probably the next President is arriving in New Delhi at the invitation of Virat Hindustan Sangam(http://www.vhsindia.org ). He will address a public meeting (admission by invitation ) on 12th on "Indo-Srilanka Relations : The Way Forward".
>
> 4:12 AM - Sep 10, 2018

கொழும்பு, செப். 13
மகிந்த இராஜபக்சவே அடுத்த அரச தலைவர் என்று பாரதீயஜனதாக்ட்சியின் மூத்த தலைவரும் மானிலங்கள் அவை உறுப்பினருமாக கலாநிதி சுப்ரமணியம் சுவாமி தெரிவித்ததார். முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச, சபாநாயகர் கரு ஜயசூரிய உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சிலரும் பிரதிநிதிகளும் தற்போது இந்தியாவுக்குப் பயணம் செய்துள்ளனர்.
இந்தியாவுக்கான மூன்று நாள்கள் பயணம் மேற்கொண்டு புதுடெல்லி வானூர்திநிலையத்தைச் சென்றடைந்த மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட குழுவினரைப் பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவரும் மாநிலங்கள் அவை உறுப்பினருமான கலாநிதி சுப்ரமணியன் சுவாமி வரவேற்றார்.
மகிந்த ராஜபக்சவை வரவேற்ற சுப்ரமணியன் சுவாமி தனது கீச்சகப் பக்கத்தில், "விராத் கிந்துஸ்தான் சங்கத்தின் அழைப்பை ஏற்று இலங்கையின் முன்னாள் அரசதலைவர், பெரும்பாலும் அடுத்த அரசதலைவர் புது டெல்லி நகரை வந்தடைந்தார். அவர் 12ஆவது இந்திய - இலங்கைஉறவுகள்மற்றும்எதிர்காலநோக்குதொடர்பிலானபகிரங்கக் கூட்டத்தில் உரையாற்றவுள்ளார்" எனப் பதிவிட்டுள்ளார்.
இதேவேளை தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவும் எதிர்வரும் 19 ஆம் திகதி இந்தியாவுக்குப் பயணமாகவுள்ளார்.

# தலவாக்கலைப் போராட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு

**கொழும்பு, செப் 13**
**பெருந்தோட்டத்துறைத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை வழங்குமாறு வலியுறுத்தி எதிர்வரும் 23ஆம் திகதி தலவாக்கலையில் நடைபெறவுள்ள போராட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது.**

கடந்த முறைபோல் தோட்டத் தொழிலாளர்கள் ஏமாற்றப்படாமல், வாழ்க்கைச் சுமையைச்சமாளித்து சிறப்பான முறையில்வாழ்வதற்கு வழிசமைக்கக்கூடியவகையிலான சம்பள உயர்வு இம்முறை வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.
அதேபோல் அபிவிருத்தி மட்டுமல்லாது, மலையக மக்களுக்கு அரசியல் ரீதியிலான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் எனவும் இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாகவே நிற்கின்றது என்றும் அவர் தெரிவித்தார். 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தமானது அடுத்த மாதத்துடன் காலாவதியாகின்றது. அதை புதுப்பிப்பதற்குரிய பேச்சுகள் இம்முறை முன்கூட்டியே ஆரம்பமாகினாலும் முதல் சுற்றுப் பேச்சுடனேயே அது தேக்க நிலையை அடைந்துள்ளது.
இந்தநிலையிலேயே தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை கோரியும், தோட்ட நிறுவனங்களுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலும் தமிழ் முற்போக்குக்கூட்டணியின் பங்காளியான தொழிலாளர் தேசிய சங்கத்தால் மேற்படி போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இலங்கை – வியட்நாமிடையே நேரடி வானூர்தி சேவை

கொழும்பு, செப்13
இலங்கை - வியட்நாமிடையில் நேரடி வானூர்தி சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. வியட்நாமில் நடைபெற்று வரும் உலகப் பொருளாதார மாநாட்டில் கலந்துக் கொள்வதற்காக அங்கு சென்றுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அந்த் நாட்டு தலைமை அமைச்சர் குயென் சுன் புக்கிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.
இதன்போதே இரு நாடுகளுக்குமிடையிலான வானூர்தி சேவை குறித்து கவனம் செலுத்தப்பட்டிருந்ததாகத் தலைமை அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இந்த நேரடி வானூர்தி சேவையை ஆரம்பிப்பதற்கு, தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதற்கு தாம் தயாராகவுள்ளதாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
அத்துடன், வியட்நாமில் இருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவதற்கு எதிர்பார்த்துள்ள தாக வியட்நாம் தலைமை அமைச்சர் இதன் போது தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

*உணவுப் பொருள்களில்*

## கொள்ளை இலாபமீட்டுவதை தடுக்க வெளிநாட்டு இறக்குமதிக்குத் தடை

### அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்கிறார் மைத்திரி

நாட்டில் உற்பத்தி செய்ய முடியுமான உணவுப் பொருள்களைக் கொள்ளை இலாபமீட்டுகின்றவர்களுக்குத் தேவையான வகையில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதை உடனடியாக நிறுத்தும் முறையான செயற்றிட்டம் தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
அம்பாந்தோட்டை மாகம்புர ருகுணு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற விவசாய சமூகத்துடனான சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தேசிய அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு தேவையான கைவிடப்பட்ட வயல் நிலங்களை மீண்டும் விளைச்சல் நிலங்களாக மாற்றும் தேசிய வேலைத்திட்டம் தொடர்பாக விவசாய சமூகத்துக்கு அறிவூட்டுவதற்காக நாடளாவிய ரீதியில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டதொடரின் ஆரம்பநிகழ்வு அரசதலைவர் தலைமையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. விவசாயத் துறையில் எழுச்சி ஒன்றை ஏற்படுத்தி விவசாய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அரசு முன்னெடுத்துள்ள விரிவான திட்டங்கள் குறித்தும் அரச தலைவர் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்.
விவசாய சமூகத்தின் பிரச்சினைகள் உள்ளடங்கிய அறிக்கையொன்று அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டது.
அமைச்சர் மகிந்த அமரவீர, பிரதிய மைச்சர் லசந்த அழகியவன்ன, தென் மாகாண விவசாயத்துறை அமைச்சர் யூ.ஜீ.பீ. ஆரியதிலக்க உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் விவசாய அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரசஅதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# அனுமதியின்றி கால்நடைகளை ஏற்றிச் சென்ற இருவர் கைது

யாழ்ப்பாணம், செப் 13
அனுமதிப்பத்திரமின்றி கால்நடைகளை ஏற்றிச் சென்ற இருவரை காங்கேசந்துறை சிறப்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.
அச்சுவேலி அச்செழு பகுதியில் வைத்து நேற்று மதியம் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
இதன் போது இரண்டு ஆடு ஒரு மாடு என்பவற்றை பட்டா ரக வாகனத்தில் ஏற்றிச் சென்றபோதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் பொம்மைவெளி பகுதியை சேர்ந்த 42,38 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் விசாரணைகள் இடம்பெற்றுவருக்ன்றப (26)

# நாம் மீண்டும் ஆட்சிக்கு வருவது உறுதி

## இந்தியாவுடன் நெருக்கத்தைப் பேணுவோம் டில்லியில் வைத்து மகிந்த தெரிவிப்பு

**கொழும்பு, செப் 13**

**2019 ஆம் ஆண்டு எமது கட்சி ஆட்சிக்கு வருவது 100 வீதம் உறுதி. தாம் பதவிக்கு வந்ததும், பொருளாதார விவகாரங்கள் உள்ளிட்ட இந்தியாவுடனான எல்லாப் பிரச்சினைகளை யும் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்று முன்மொழியப்படும் என்று இலங்கையின் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.**



'த இந்து' ஆங்கில நாளிதழுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தப்பொறிமுறை, 2008-2009 காலப்பகுதியில், விடுதலைப் புலிகளுடனான போரின்போது, இந்திய இலங்கை உறவுகளை ஒருங்கிணைப்பதற்காக, இந்தியத் தரப்பில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம். கே. நாராயணன், வெளிவிவகாரச் செயலர் சிவசங்கர் மேனன், பாதுகாப்புச்செயலர்விஜய்சிங்ஆகியோரையும், இலங்கைத் தரப்பில் பசில் ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச, லலித் வீரதுங்க ஆகியோரையும் கொண்டு உருவாக்கப்பட்ட மூவரணியைப் போன்றதாக இருக்கும்- என்றார். இந்தச் செவ்வியின்போது சில முக்கியமான கேள்விகளும், அதற்கு மகிந்த ராஜபக்ச அளித்துள்ள பதில்களும் வருமாறு:

**கேள்வி:** இந்தியாவுடன் இறுக்கமானஉறவைவைத்திருக்கிறீர்கள். உங்களின் இந்தப் பயணம், 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் மோடி அரசுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான சமிக்ஞையா?
**பதில்:** ஆம், 2015 ஆம் ஆண்டுத் தேர்தல்களுக்கு முன்னரும், பின்னரும், நரேந்திர மோடி அரசுக்கும் எமக்கும் நிறையத் தவறான புரிதல்கள் இருந்தன. தற்போது அதனை நகர்த்துவதற்கான நேரம் வந்துள்ளது.

**கேள்வி:** 2015 மார்ச்சில், 'த இந்து' வுக்கு அளித்திருந்த செவ்வியில், உங்களின் தோல்விக்குக் காரணம் என்று, றோ புலனாய்வுப் பிரிவை குற்றஞ்சாட்டியிருந்தீர்கள். சில வாரங்களுக்குமுன்னர், இலங்கையின் அரசியல் விவகாரங்களில் இந்தியா தலையிடக் கூடாது என்று கூறியிருந்தீர்கள். அது குறித்துக் கவலைப்படுகிறீர்களா?
**பதில்–** அது இந்தியாவை மாத்திரமல்ல, நான் இந்தியாவைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. வேறு எந்தத் தேர்தல்களிலும், வேறு எவருமே தலையீடு செய்யக் கூடாது என்று தான் கூறினேன்.
இதுஒருநாட்டின்உள்நாட்டுவிவகாரம். யாரை அதிகாரத்துக்குக் கொண்டு வருவது என்பது மக்கள் முடிவு செய்ய வேண்டிய விடயம். அது தான் எனது மனதில் உள்ளது. அந்தநேரத்தில்என்னசெய்தார்கள், என்ன தவறு நடந்தது என்று இப்போதுஅவர்கள்உணர்ந்துகொண்டிருக்கிறார்கள்எனநினைக்கிறேன். எனவே, நாங்கள் கடந்த காலத்தை மறக்க வேண்டும். இது முன்நோக்கிச்செல்வதற்கான நேரம்.

**கேள்வி:** உங்களின்கட்சிஆட்சிக்கு வந்தால், இந்தியாவுடனானவிடயத்தில்எதற்குமுன்னுரிமைகொடுப்பீர்கள்?
**பதில்–** எமதுமுன்னுரிமைக்குரிய விடயமாக முதலீடு தான் இருக்கும் என்றுநான் நினைக்கின்றேன்.
விடுதலைப்புலிகளுடனானபோரின் போதுநாங்கள்ஒருமூவரணிஎன்ற பொறிமுறையை வைத்திருந்தோம். இரண்டு தரப்பிலும் தலா மூன்று பேர் கொண்ட அந்த அணி, நள்ளிரவிலும் கூட விடயங்கள் குறித்துக் கலந்துரையாடியது.
அதுபோன்றதொரு பொறிமுறை பொருளாதார நோக்கங்களுக்காகவும் தேவைப்படுகிறது- என்றார்.


### றியூனியன் தீவுக்குச் செல்ல முயன்ற 90 இலங்கையர் கைது

கொழும்பு, செப். 13
றியூனியன் தீவுக்குச் செல்ல முற்பட்ட இலங்கையர் 90 பேர் நீர்கொழும்புக்கு அருகில் உள்ள கடலில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நீர்கொழும்பில் இருந்து 40 கடல் மைல் தொலைவில் படகு ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த 90 பேரையும் இலங்கைக் கடற்படையின் இரண்டு அதிவேக தாக்குதல் ப்டகுகள் மூலமாகக் கொழும்புத் துறைமுகத்துக்கு கொண்டு வந்தன. கைது செய்யப்பட்ட 90 பேரில் பெண் ஒருவர் இருப்பதாக இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் லெப். கொமாண்டர் தினேஸ் பண்டார தெரிவித்தார்.
ஆரம்ப விசாரணைகளில் இவர்கள் மட்டக்களப்பு, உடப்பு, சிலாபம், அம்பாறை, மன்னார், மாத்தளை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

### ஆஸ்திரேலியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட 9 இலங்கையர் சி.ஐ.டியினரால் கைது

கொழும்பு, செப். 13
ஆஸ்திரேலியாவில் இருந்து சிறப்பு வானூர்தி மூலம் நாடுகடத்தப்பட்ட 9 இலங்கையர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.
ஆஸ்திரேலியாவில் பல்வேறு காலகட்டங்களில் புகலிடம் கோரிய, 9 இலங்கையர்கள் நேற்றுமுன் தினம் அதிகாலை 2 மணியளவில் பேர்த் வானூர்தி நிலையத்தில் இருந்து சிறப்பு வானூர்தி ஒன்றின் மூலம் பலவந்தமாக நாடு கடத்தப்பட்டனர்.
இந்த வானூர்தி கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தை வந்தடைந்ததை அடுத்து, ஆஸ்திரேலிய அதிகாரிகளால் இந்த 9 பேரும் இலங்கை அதிகாரிகளிடம், ஒப்படைக்கப்பட்டனர்.
இந்த நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இந்த 9 பேரையும் கைது செய்து தடுத்து வைக்கப் பட்டு விசாரணை செய்து வருகின்றனர்.
கைது செய்யப்பட்டவர்கள் முந்தல், கொச்சிக்கடை, உடப்பு, சிலாபம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களைச்சேர்ந்த 27, 29, 36, 48 ஆகிய வயதுகளை உடையவர்கள் என்று இலங்கைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கேலிச்சித்திரம்




(நன்றி: நாமல் அமரசிங்க)

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவுக்கு இலங்கை அமைச்சரவை அனுமதி

கொழும்பு, செப். 13
தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக உருவாக்கப்பட்டுள்ள, பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவுக்கு இலங்கை அமைச்சரவை நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியுள்ளது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவை இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன நேற்றுமுன்தினம் அமைச்சரவையில் சமர்ப்பித்தார் இந்தச் சட்டவரைவில் கூறப்பட்டுள்ள மூன்று விடயங்கள் தொடர்பாக அமைச்சர் விஜேதாச ராஜபக்ச கடும் எதிர்ப்பை வெளியிட்டார். இதனால் அமைச்சரவையில் கடுமையான வாக்குவாதங்களும் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டன.
இறுதியில், இந்தச் சட்டவரைவு மீது நடத்தப்படும் குழு நிலை விவாதத்தின் போது திருத்தங்களை முன்வைப்பது என்ற இணக்கப்பாட்டின் அடிப்படையில் அமைச்சரவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இலங்கை அரசு பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாகவும், அனைத்துலக நியமங்களுக்கு ஏற்ப, புதிய பயங் கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உருவாக்குவதாகவும், அனைத்துலக சமூகத்திடம் வாக்குறுதி அளித்திருந்தது. எனினும், நீண்ட காலமாக இந்தச் சட்ட வரைவைச் சமர்ப்பிக்கும் நடவடிக்கை இழுபறியாக இருந்து வந்துள்ளது.

# மாதாந்த எரிபொருள் விலையேற்றத்தை 6 மாதங்களுக்கு ஒரு முறையாக மாற்றுக

## பேருந்து உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் தெரிவிப்பு

கொழும்பு,செப். 13
நாட்டில் மாதாந்தம் முன்னெடுக்கப்பட்டு வரும் எரிபொருள் விலையேற்றத்தை ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாக மாற்றியமைக்க வேண்டும் என்று பேருந்து உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இந்த நடைமுறையால் நாட்டில் பொருளாதார நிலை உறுதியில்லாமல் போவதாக ஒன்றிணைந்த மாகாணங்களின் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சரத் விஜித குமார சுட்டிக்காட்டினார்.
பேருந்து உரிமையாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்றுமுன் தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எரிபொருள் விலை நாட்டிலுள்ள அனைத்து விடயங்களுடனும் தொடர்புபடுகின்றது. எரிபொருள் விலை அதிகரிக்கும் போது பேருந்துக் கட்டணம் அதிகரிக்கின்றது. மரக்கறி வகைகளின் விலை அதிகரிக்கப்படுகின்றன.
அத்துடன், அத்தியாவசியப்பொருள்கள் அனைத்தினதும் விலைகளை அதிகரிக்க வேண்டி ஏற்படுகின்றது. மக்களின் வாழ்க்கைச் செலவு ஒவ்வொரு மாதமும் அதிகரித்துச்செல்லும்ஒரு நிலைமையை நாடு எதிர்கொள்ள வேண்டியுள்ளது.
கடந்த நான்கு மாதங்களுக்குள் பெற்றோலின் விலை 32 ரூபாவால் அதிகரித்துள்ளது. இந்த விலை அதிகரிப்பு மாதாந்தம் மாற்றப்படுவதனால் மக்கள் பாரிய இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது.
அரசு என்று ஒன்று காணப்படுவது மக்களுக்குச் சலுகைகளை வழங்குவதற்கே. உலக சந்தையில் விலை அதிகரிக்கப்படினும், மக்களுக்கு அந்த சுமையை செல்ல விடாமல் முகாமை செய்வதுதான் அரசின் பணியாக இருக்க வேண்டும். இதுவரையில் அரசில் உள்ள அமைச்சர்கள் கூட இதனை அறியாதவர்களாக உள்ளனர் - என்றார்

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நுண் நிதிக் கடன் தொல்லையைக் கட்டுப்படுத்துங்கள்

இலங்கையின் நுண் நிதிக் கடன் நிறுவனங்களின் தொல்லை விவகாரம் ஐக்கிய நாடுகள் அவை வரைக்கும் எட்டியுள்ளது. ஐ.நாவின் சிறப்பு வல்லுனரான ஜுவான் பப்லோ பொஹோஸ்லவ்ஸ்கி நுண்கடன் நிறுவனங்களால் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து சுட்டிக்காட்டியிருக்கிறார். கடன்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக ஐ.நாவில் பணியாற்றும் சிறப்பு வல்லுநர் அவர். நீண்ட காலமாக வடக்கு, கிழக்கில் உள்ளவர்களால் குறிப்பாகப் பெண்களால் சுட்டிக்காட்டப்படும் பிரச்சினைகள் குறித்து ஐ.நா. வல்லுநரும் இப்போது சுட்டிக்காட்டியிருக்கிறார்.

30 ஆண்டுகாலப் போரால் கடுமையான பாதிப்பைச் சந்தித்த வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் அதிலிருந்து மீள்வதற்கும், உலகமயமாக்கலுக்கும் நுகர்வுப் பண்பாட்டு வேகத்துக்கும் ஈடுகொடுப்பதற்குமாக கடன் பெறுகிறார்கள். தமது வாழ்வாதாரத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதற்கு நடுத்தர வர்க்கத்துக்கும் நடுத்தரத்துக்கும் குறைந்த வர்க்கத்தினருக்கும் கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை. இதனை நன்கு உணர்ந்துள்ள நுண் நிதிக் கடன் நிறுவனங்கள் வீடு வீடாகச் சென்று தேனொழுகப் பேசி கடன்களை வழங்கிவிட்டுச் செல்கின்றன.


இந்த நிதி நிறுவனங்கள் சம்பளத்துக்கு நியமித்துள்ளவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் இலக்குகள் முடிவு செய்யப்படுகின்றன. அதாவது குறிப்பிட்ட தொகையை அவர்கள் ஒவ்வொரு மாதமும் கடனாக யாருக்காவது வழங்கியாகவேண்டும். தமது இலக்கை எட்டுவதற்காக எதையெதையோ மறைத்தும் திரித்தும் பிரச்சினைகள் ஏதும் வராது என்று பொய்யுரைத்தும் கடன்களைத் திணித்துவிட்டுச் செல்கிறார்கள் பணியாளர்கள். மாதாந்தச் சம்பளம் பெறுபவர்கள் அல்லாது ஒரு குழுவாகப் பெண்களே தங்களுக்குள் மாறி மாறி பிணை நிற்பது இந்தக் கடன் திட்டத்தின் பலமும் பலவீனமும் கூட.

கடன்களைப் பெற்றாலும் அதனைத் திரும்பச் செலுத்துவதற்கான போதிய வருமானம் இன்மையால் குடும்பங்கள் சிக்கல்களில் மாட்டிக்கொள்கின்றன. சிறு தொகைக் கடன்தான் என்றாலும் தவணைக் கட்டணத்தைத் திரும்பச் செலுத்த முடியாத நிலையில் அவர்கள் பொறிக்குள் அகப்பட்டுக்கொள்கின்றனர். கடன் வசூலிக்க வருபவர்கள் ஒரு கட்டத்திற்கு மேலே தொல்லை தருபவர்களாக மாறிவிடுகின்றனர். கடனை வசூலிப்பதற்கு அவர்கள் சாம, தான, தண்ட வழிகள் அனைத்தையும் உபயோகிக்கிறார்கள்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் குமாரசுவாமி வடக்குக்கு வந்திருந்தபோதும் இந்தப் பிரச்சினை முக்கியமாக அவரிடம் சுட்டிக்காட்டப்பட்டது. நுண் நிதிக் கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. ஆனால், அப்படிச் செய்யப்படவில்லை.

இப்போது அதிர்ச்சியூட்டும் வகையில் இந்த நுண் நிதிக் கடன் நிறுவனங்களின் தவணைக் கொடுப்பனவு வசூலிப்பாளர்களால் பெண்களுக்கு பாலியல் துன்புறுத்தல்கள் இருப்பதாக ஐ.நா. வல்லுநர் தெரிவித்திருக்கிறார். ''போரால் பாதிக்கப்பட்ட மற்றும் வறுமையில் வாடும் பெண்கள் இந்த நுண் நிதி நிறுவனங்களால் இலக்குவைக்கப்படுவதாக அறிகின்றேன். எனவே பெண்களுக்கு எதிரான அநீதிகளுக்கு எதிரான பன்னாட்டுச் சாசனத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துமாறு அரசைக் கோருகின்றோம். இது பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவுவதாக இருக்கும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

ஒரு காலத்தில் மக்களின் வாழ்க்கைத் தர உயர்வுக்கு இந்த நுண் நிதிக் கடன் பெரிதும் உதவியது. அப்போது அது கூட்டுறவுத்துறையூடாகச் செயற்படுத்தப்பட்டு வந்தது. எப்போது அது பெரு வணிக நிறுவனங்களிடம் கைமாற்றப்பட்டதோ அப்போதே பிரச்சினையும் ஆரம்பமாகிவிட்டது. லாபம் ஒன்றே குறிக்கோள் என்று செயற்படும் பெருவணிக நிறுவனங்கள் எத்தகைய சுரண்டல்களுக்கும் தயாராக இருப்பதன் காரணத்தால் இந்தப் பிரச்சினை பாலியல் தொல்லை வரை விரிவாக்கம் கண்டுள்ளது. அரசு இதன் மீது உடனடிக் கவனம் செலுத்தி இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணவேண்டும். பாதிக்கப்படுபவர்கள் வடக்கு கிழக்கிலேயே அதிகம் உள்ளனர் என்கிற அடிப்படையில் வழக்கம்போல இந்த விடயத்தையும் கண்டுகொள்ளாமல் விடாமல், உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.



# எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்கள் கூட்டு எதிரணியினர்?

இந்துமதி

எந்த வகையிலேனும் அரசைக் கவிழ்த்து, ஆட்சியைக் கைப்பற்ற வேண்டிய அவசியம் கூட்டு எதிரணிக்கு எழுந்துள்ளது. மகிந்த தலைமையில் ஆட்சி அமையுமேயானால், பிரச்சினைகள் பலவற்றிலிருந்து தாம் தப்பிவிட முடியுமென இதில் அங்கம் வகிப்பவர்கள் நினைப்பதே இதற்கான முக்கிய காரணமாகும். கொழும்பில் பொதுமக்களைத் திரட்டி அரசுக்கு எதிரான பெரும் பேரணியொன்றைக் கூட்டு எதிரணி நடத்தியது. இதன் மூலமாக அரசை முற்றாகவே முடக்கப் போவதாக மகிந்த தரப்புக் கூறிய போதிலும், அவ்வாறு எதுவுமே இடம்பெறவில்லை. பேரணி தமக்குப் பெருவெற்றியென கூட்டு எதிரணியும், அது படுதோல்வியில் முடிந்துவிட்டதாக அரசு தரப்புக் கூறுவதையும் அவதானிக்க முடிகின்றது. இவையிரண்டையும் பக்கம் சாராது நன்கு சீர்தூக்கிப் பார்க்கும் போதுதான் உண்மை தெரியவரும்.

ஆட்சி மாறுவதென்பது முக்கியமானதல்ல. மக்களுக்கு நன்மை தரக்கூடிய ஆட்சி அமைவதுதான் முக்கியமானதாகும். மகிந்த தரப்பினர் மக்களுக்கு நல்ல சேவையை ஆற்றவேண்டும் என்பதற்காக ஆட்சிக்கு வருவதற்குத் துடிக்கவில்லை. தமது சுயஇலாபம் கருதியே தற்போதைய ஆட்சியைக் கலைத்துவிட்டுத் தாம் பதவியில் அமர்வதற்குத் துடிக்கின்றனர். மக்களில் பெரும்பாலானவர்களுக்கு இது தெரிவதில்லை. அரசியல்வாதிகளின் பசப்பு வார்த்தைகளை நம்பி அவர்களுக்கு ஆதரவு காட்டவே அவர்களால் முடிகின்றது.

**பிசுபிசுத்துப் போன அரசுக்கு எதிரான கூட்டு எதிரணியின் ஆர்ப்பாட்டம்**

மகிந்த தரப்பினரின் பெரிய அளவிலான பரப்புரையுடன் நடத்தப்பட்ட அரசுக்கு எதிரான பேரணி, அந்த ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்த்த இலக்கை எட்ட முடியாமல் தோல்வியில் முடிவடைந்துள்ளதாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன. பேரணிக்கென நாட்டின் பிற இடங்களிலிருந்து கொழும்புக்கு அழைத்து வரப்பட்ட பொதுமக்கள், பேரணியை ஏற்பாடு செய்தவர்களின் கோரிக்கையை நிராகரித்துவிட்டு இடை நடுவில் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றுவிட்டதாக அறியமுடிகின்றது. இதனால், விடிய விடியப் போராட்டத்தை நடத்துவதற்குத் திட்டமிட்டவர்களின் எதிர்பார்ப்பு பிசுபிசுத்துப் போனது. மக்கள் தாமாகவே விரும்பி பேரணியில் கலந்து கொண்டிருந்தால் இவ்வாறு நடந்திருக்க மாட்டாது.

**மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளுக்கு கூட்டு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளத் தவறியது**

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தற்போதைய அரசு உரியவகையில் நடவடிக்கை எடுத்திருந்தால், மகிந்த தரப்பினர் இந்த அளவுக்கு அரசுக்கு சவால் விடுக்கும் விதத்தில் கிளர்ந்தெழுந்திருக்க மாட்டார்கள். அரசுக்குச் சவால் விடுத்திருக்கவும் மாட்டார்கள். அரசின் பலவீனமே பின்னடைவுகள் சகலதுக்கும் காரணமாகிவிட்டது. இந்த நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ்மக்கள் மிகவும் மோசமான பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகிறார்கள் என்பதைக் கூறத்தேவையில்லை. தமது மொழியைக் காப்பாற்றுவதற்காகவும், உரிமைகளைப் பெறுவதற்காகவும் அவர்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் 2015ஆம் ஆண்டு வரை மாறிமாறி ஆட்சிக்கு வருவதே வழக்கமாக இருந்துள்ளது.

**தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு சிங்கள அரசுகள் உரிய தீர்வு வழங்கப்போவதில்லை**

ஆனால் ஆட்சி மாறினாலும் தமிழர்களுக்குத் தீர்வு கிடைப்பதென்பது குதிரைக்கொம்புக்கு ஒப்பானதாகவே காணப்படுகின்றது. ஆட்சியில் இருப்பவர்கள் எதையாவது செய்வதற்கு முற்பட்டால், அதைக் கண்மூடித்தனமாக எதிர்ப்பதுதான் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருப்பவர்களின் வழமையாக இங்கு மாறிவிட்டது. இதனால் தமிழர்களது பிரச்சினைகளுக்கான தீர்வு என்பது எட்டாக் கனியாக மாறிவிட்டது.

இன்றைய நிலையில் மக்கள் சகல வகையிலும் பொருளாதார ரீதியான நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். தமது உணவுப் பொருள்களிலிருந்து தமது வேறு அத்தியாவசியத் தேவைகள் அனைத்துக்கும் அதிகளவில் செலவு செய்ய வேண்டிய நிலைக்கு அரசு அவர்களைத் தள்ளிவிட்டுள்ளது. இதனால் அரசின்மீது இயல்பாகவே அவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளது. கூட்டு எதிரணி, அரசின் மீதான இத்தகைய மக்களின் வெறுப்பை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்குத் தீர்மானித்திருப்பதை, கொழும்பில் இடம்பெற்ற பேரணி உறுதி செய்கின்றது. ஆனால் இவர்கள் ஆட்சிக்கு வந்தாலும், நாட்டில் இதே நிலைதான் நீடிக்கப்போகின்றது. வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடன்கள் மக்களின் தலையை நெரித்துக் கொண்டிருக்கும்வரை, பொருளாதார மீட்சி இந்த நாட்டுக்கு கிடைக்கப்போவதில்லை. மகிந்த தரப்பின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகளும், வெளி நாடுகளிலிருந்து பெற்ற கடன்களும் நாட்டின் பொருளாதார அத்திபாரத்தையே ஆட்டம் காணவைத்துவிட்டன. இவற்றுக்கெல்லாம் தீர்வு என்ன என்பதை மக்கள் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கடும் இனவாதப்போக்குடைய தலைவர்களை அதிகளவில் கொண்ட கூட்டு எதிரணியினர் நாட்டின் இனப்பிரச்சினைக்கு ஒருபோதுமே தீர்வைக் காணமாட்டார்கள். இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட்டால், அவர்களால் அரசியலை மேற்கொண்டு நடத்தவே முடியாது. இனவாதம் பேசிப் பேசியே பெரும்பான்மையின மக்களின் ஆதரவைப் பெறுவது இவர்களின் இராஜ தந்திரமாகவுள்ளது. ஆனால் அந்த மக்கள் உண்மையைப் புரிந்து கொள்ளும்போது இவர்கள் காணாமல் போய்விடுவார்கள். மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றமுடியாது என்பதை கூட்டு எதிரணியினர் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். கொழும்பில் அவர்களின் திட்டம் பிசுபிசுத்துப் போனதற்கு கூட்டு எதிரணியினர் குறித்த மக்களது வெறுப்பே காரணமாகும்.

# முத்துவைத் தனது கலைத்துறை வாரிசாக திரைத்துறையில் அறிமுகம் செய்தார்






## தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி-30

கருணாநிதியின் மனைவி, துணைவி சர்ச்சைகள் மெல்லத் தணிந்தன. பின்நாளில் அவர் கலந்து கொள்ளும் பொது நிகழ்வு களில் மனைவி, துணைவி என்ற விதத்தில் இருவரும் கலந்து கொண்டார்கள். இருப்பினும் ஜெயலலிதா தமது தேர் தல் பரப்புரைகளில், தான் தமிழக மக்களுக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளதாகவும், கருணாநிதி தமது குடும்பத்துக்காகத்தான்எல்லாவற்றையும் செய்வதாகவும்குறிப்பிடுவார். அதற்கேஅவருக்கு நேரம் போதாது என்றும் குறிப்பிடுவார். கடந்த ஏப்ரல் மாதம் கருணாநிதியின் துணைவியாரின்மகள்கனிமொழிகுறித்து சர்ச்சை கிளம்பியது. தற்போது மத்தியில் ஆட்சிசெய்கின்றபாரதியஜனதாக்கட்சியின் தேசியத் தலைவர்களில் ஒருவரான தமிழகத்தைச் சேர்ந்த ஹெச்.ராஜா தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. ஒரு கல்லூரியின் பேராசிரியர் ஒருவர், அந்தக் கல்லூரியில் கற்கும் மாணவிகளுக்குப் பாலியல் வலை விரித்த விடயம் அம்பலத்திற்கு வந்தது. அது குறித்து ஒரு சந்தர்ப்பத்தில்தமிழ்நாடுஆளுநர்பன்வாரிலால் புரோஹித்திடம் செய்தியாளர்கள் காரசாரமாக கேள்விகளை எழுப்பினர். அந்தச்சந்திப்பின்முடிவில், "தி வீக்" ஆங்கில இதழின் செய்தியாளர் லட்சுமி சுப்பிரமணியத்தின் கன்னத்தில் ஆளுநர் தட்டிவிட்டுச் சென்றார். அது பின்னர் சர்ச்சை ஆனது. அப்போது, இந்திய மாநிலங்கள் அவை உறுப்பினர்கனிமொழிஇந்தவிவகாரத்தில் ஆளுநருக்குஎதிராக பத்திரிகையாளருக்கு ஆதரவு தெரிவித்தார். இதையொட்டி பாரதியஜனதாக்கட்சித்தேசியத்தலைவர்களில் ஒருவரான ஹெச்.ராஜா தனது கீச்சகப் பக்கத்தில் இவ்வாறு தெரிவித்தார்,

தமது கள்ள உறவில் பெற்றெடுத்த கள்ளக் குழந்தையை (illegitimate childd) மாநிலங்களவை உறுப்பினராக்கிய தலைவரிடம், ஆளுநரிடம் கேட்டது போல் நிருபர்கள் கேள்வி கேட்பார்களா. மாட்டார்கள்தானே, என்று பதிவிட்டிருந்தார். இது குறித்து பல்வேறு தரப்பினரும் கண்டனங்களைத் தெரிவித்தனர். காங்கிரஸ் மூத்த தலைவரான ப.சிதம்பரம் தனது கீச்சகப் பதிவில், கள்ளக் குழந்தை என எவரும் இல்லை. எல்லாக் குழந்தைகளுமே நல்ல குழந்தைகள்தான். பா.ஜ.க இதில் தனது நிலையைத் தெளிவுபடுத்துமா? எனக் கேள்வி எழுப்பியிருந்தார். இதன் வழி, தனது 94 வயதிலும் கருணாநிதனது திருமணத்திற்குப் பிறம்பான உறவு பற்றிய சர்ச்சைகளைஎதிர்கொள்ளவேண்டியிருந்தது. இந்தியாவிலேயே மத்தியிலும், மாநிலத்திலும் பொறுப்பான பதவிகளை அதிகம் பேர் வகித்த ஒரே குடும்பம் என்றால், அது கருணாநிதி குடும்பம் மட்டுமே.

கருணாநிதியின் சகோதரியின் மகன் முரசொலி மாறன், தன்னுடைய வாரிசுக்கள் மு.க. முத்து, மு.க.ஸ்டாலின், அழகிரி, கனிமொழி, தமிழரசி, செல்வி தொடங்கி மூன்றாம்தலைமுறையானதயாநிதிமாறன்என நீண்ட வாரிசு அரசியல் தொடர்கிறது. இப்போது மு.க.ஸ்டாலின் மகன் உதயநிதி ஸ்டாலின் வரை இந்த வாரிசு அரசியல் கொடிபோலப் படர்ந்து வருகிறது.

கருணாநிதியின்மூத்தமனைவிபத்மாவதி. இவர்களதுமகன் மு.க.முத்து. தந்தையின் கலையுலகவாரிசாகதிரைத்துறையில்கால் பதித்தார். 1972ஆம்ஆண்டில்தனதுமகன் மு.க.முத்துவை "பிள்ளையோ பிள்ளை" திரைப்படத்தின்மூலம்கலையுலகுக்குஅறிமுகம் செய்து வைத்தார் கலைஞர். "அஞ்சுகம் பிக்சர்ஸ் தயாரிப்பில் "கிருஷ்ணன் பஞ்சு" இயக்கத்தில் உருவான இந்தப் படத்தின்சிறப்புக்காட்சியில்பங்குபெறஎம்.ஜி.ஆர் வந்திருந்தார்.



கருணாநிதியின்
மூத்த மகன் முத்து

அப்போது, "புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்தான் என் ஆசான்" என்றுமு.க.முத்து பேசினார். அந்தவிழாவில்பேசியகருணாநிதி, "துரோணாச்சாரியாரை ஆசானாகக் கொண்டு ஏகலைவன் வில் வித்தையிலே தேர்ச்சிப் பெற்றதைப் போல, இங்கே எம்.ஜி.ஆரை ஆசான் என்று கூறிய முத்து அப்படிப்பட்ட புகழையும் சிறப்பையும் பெற வாழ்த்துகிறேன்" என்றார்.

இறுதியாகமு.க.முத்துவைவாழ்த்திப்பேசினார் எம்.ஜி.ஆர், "என்னை ஆசானாக ஏற்றுக் கொண்டிருப்பதாக தம்பி மு.க. முத்து பேசினார். அதைக் கேட்டுப் பெருமைப்படுகிறேன். ஆனால் முத்து ஒரு நாள் கூட என்னிடம் நடிப்புக்காக வந்ததில்லை. ஏகலைவன் மானசீகமாகக் குருவை எண்ணி வித்தையில் தேர்ந்தான் என்பது போல, என் படங்களைப் பார்த்து அதன்படி நடிக்க விரும்புகிறார் முத்து என்று எண்ணுகிறேன். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு தனித்தன்மை நடிப்பு இருக்கிறது. அதில் தான் செல்ல வேண்டும். முத்து தனக்கென்றுதனிவழியைநடிப்பதற்குவகுத்துக் கொண்டுநடிகராக, வளரவேண்டும்என்று வாழ்த்துகிறேன் என்றார் எம்.ஜி.ஆர். பின்னர் கருணாநிதியின் மூத்த மகன் முத்து, பூக்காரி, பிள்ளையோ பிள்ளை, சமையல் காரன், அணையா விளக்கு என பல படங்களில் நடித்தார். அப்போது அவர் தி.மு.க வில்இருந்தார். எம்.ஜி.ஆரின் நடை உடை பாவனைகளை நடிப்பில் பிரதிபலித்தார். அதைத்திட்டமிட்டுக்கொடுத்ததும்கருணாநிதிதான் எனக்கூறப்படுகிறது. தனதுமகன் மூலம்தனதுபுகழுக்குபங்கம்விளைவிக்க கருணாநிதி எடுக்கும் அஸ்திரம் தான் அது என எம்.ஜி.ஆர்உணர்ந்திருக்கிறார். பின்னர் எம.ஜி.ஆர் தனிக்கட்சி தொடங்க இதுவும் ஒரு காரணம் என்கிறார்கள். ஆனால் பின்னாளில்கருணாநிதிக்கும்அவர் மகன் முத்துவுக்கும் இடையே கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டன. ஒரு தடவை முத்து, ஜெயலலிதாவைச் சந்தித்து. வறுமையில் தான் வாடுவதாகச்சொல்லிஐந்துஇலட்சம்பணத்தைப்பெற்றுக்கொண்டார்!. இது கருணாநிதிக்கு பெருத்த அவமானமாக இருந்தது. நான்அடைந்ததிலேயேமிகக்கேவலமான அவமானம் அது என்றார் கருணாநிதி.

(தொடரும்)

## ஆசிரியருக்கான கடிதம்

# ஓட்டுத் தொழிற்சாலை அபிவிருத்தி புறக்கணிக்கப்படுவது ஏன்?

வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி தொடர்பாக அண்மையில் அரசதலைவரது தலைமையில் நடைபெற்ற செயல் அமர்வின்போது, வடக்கு கிழக்கு மாகாணங்களது அபிவிருத்தி தொடர்பாகப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட போதிலும், அங்கே முல்லைத்தீவு மாவட்டம் சம்பந்தமாக எதுவும் பேசப்பட்டதாகத் தெரியவில்லை.

குறிப்பாக, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத்தொழிற்சாலை, வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை என்பவற்றின் அபிவிருத்தி தொடர்பாகபல்வேறுவிடயங்கள்அலசிஆராயப்பட்டன. ஆனால்ஒட்டுசுட்டானில்அமைந்துள்ள ஓட்டுத்தொழிற்சாலைசம்பந்தமாக அங்கே எதுவும் பேசப்படவில்லை. 1961ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1971ஆம் ஆண்டு மட்பாண்டக்கூட்டுத்தாபனத்தால்இந்தத்தொழிற்சாலை பொறுப்பேற்கப்பட்டு 200க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி வந்தது. வன்னிமாவட்டத்திற்கும், யாழ்மாவட்டத்திற்கும்தேவையான ஓடு, செங்கல் போன்ற உற்பத்திப் பொருள்களை வழங்கி தன்னிறைவு கண்ட இந்தத் தொழிற்சாலை, 1990ஆம் ஆண்டு யூன் மாதம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக மூடப்பட்டது.

இந்தத் தொழிற்சாலையில் கடமை ஆற்றிய தொழிலாளர்கள் அனைவரும் அன்றிலிருந்து இன்றுவரையான கடந்த 28 வருடங்களாக வருமானம் எதுவுமின்றி படும் துன்பங்கள்குறித்து எமது அரசியல்வாதிகள் அக்கறை காட்டாதது ஏன்? அண்மையில் இடம்பெற்ற செயலமர்விலாவது இது பற்றி கதைக்காதது ஏன்?

வடக்கு கிழக்கு மாகாணங்களில் செயற்பட்ட ஏனைய தொழிற்சாலைகள் மூடப்பட்ட போதிலும், சகலதொழிலாளர்களுக்கும் வழமைபோன்று மாதாந்த வேதனங்கள் அனைத்தும் வழங்கப்பட்டன. இதுபற்றி எமது அரசியல்வாதிகள் அறிந்திருப்பார்கள் தானே? ஆனால் இந்தத் தொழிற்சாலையின் ஊழியர்கள் தமது நிலை தொடர்பாக உயர்மட்டத் தரப்பினர்களை நேரில் சென்று சந்தித்து விளக்கிக் கூறியும், கடிதங்கள் எழுதியும் பலன் எதுவும் கிடைத்ததாக தெரியவில்லை. மேலும் இதுவிடயமாக இந்தப் பத்திரிகையில் வெளியாகிய செய்திக் கட்டுரை ஒன்றின்பிரகாரம், வடமாகாணசபை உறுப்பினர் எஸ். ரவிகரனால் இது தொடர்பாக மாகாணசபையில் பிரேரணை ஒன்றுநிறைவேற்றப்பட்டிருந்தது. அதில்ஏதாவது நன்மைகள் ஏற்பட்டதா? என்பது குறித்து எதுவும் தெரியவரவில்லை.

அண்மையில் நடைபெற்ற அரசதலைவர் செயல் அமர்வில் ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை அபிவிருத்தி தொடர்பாக யாழ் . மாவட்ட அரசியல்வாதிகள் வழமை போன்று பு அக்கறை காட்டாதிருந்த போதிலும் எமது வன்னி மாவட்ட அரசியல்வாதிகளும் சம்மந்தப்பட்ட அமைச்சரும் மௌனமாக இருந்தது ஏன்?

வே.ம.இந்திரநாதன், முள்ளியவளை

# ஜெயலலிதாவுக்கு வாரிசு உள்ளதா?



சென்னை.செப்.13

ஜெயலலிதாவுக்கு சட்டப்படியான வாரிசுகள் எவராவது உள்ளனரா? என்பது குறித்து ஆராயுமாறு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா 1997மற்றும் 1998ஆம் ஆண்டளவில் தனக்கு 4.67கோடி ரூபாய் மதிப்புடைய அசையும், அசையாத சொத்துகள் இருப்பதாக வருமான வரித்துறையிடம் கணக்கறிக்கை வழங்கியிருந்தார். அதன் அடிப்படையில் 7.27இலட்சம் ரூபாய்களை வரியாக மதிப்பிட்டது வருமான வரித்துறை.

இந்த நிலையில் ஜெயலலிதா வீட்டில் சோதனை நடத்திய இலஞ்ச ஒழிப்புத்துறை, ஜெயலலிதாவிடம் ரூ.3.83 கோடி விலை மதிப்புடைய தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் இருந்ததையும், வரிக் கணக்கை ஜெயலலிதா முறையாகக் காண்பிக்கவில்லை என்றும் வருமான வரித்துறைக்கு அறிக்கை அளித்தது. அதன் அடிப்படையில், வருமான வரித்துறை அதிகாரிகள் ஜெயலலிதாவின் சொத்துக்களை மறுமதிப்பீடு செய்து குறிப்பிட்ட தொகையை வரியாகச் செலுத்துவதற்கு ஜெயலலிதாவுக்கு உத்தரவிட்டனர். இதை எதிர்த்து, ஜெயலலிதா வருமான வரித்துறை மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் வழக்குத் தாக்கல் செய்தார். அவரது வழக்கை ஏற்றுக்கொண்ட தீர்ப்பாயம், வருமான வரித்துறை அதிகாரிகளின் திருத்திய மதிப்பீட்டை நீக்கம் செய்தது. தீர்ப்பாயத்தின் இந்தச் செயலை எதிர்த்து வருமான வரித்துறை சென்னை உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தது. ஜெயலலிதா இல்லாத நிலையிலும் இந்த வழக்குத் தொடர்கின்றது. இதனால், இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் "ஜெயலலிதாவுக்கு சட்டப்படியான வாரிசுகள் எவராவது உள்ளனரா? அல்லது அவர் தனது சொத்துக்கள் தொடர்பாக உயில் எதுவும் எழுதி வைத்துள்ளாரா? என்பது குறித்து வருமான வரித்துறை தெரிவிக்க வேண்டும்" என்று உத்தரவிட்டிருக்கின்றனர்.

# போதைப் பொருள்கள் ... நாடுகளில் இந்தியாவு...



நியூயோர்க்.செப்.13


சட்டவிரோதமாகப் போதைப் பொருள்களை உற்பத்தி செய்கின்ற நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். அண்மையில் வெள்ளை மாளிகையில் நடந்த கூட்டம் ஒன்றில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பங்கேற்றுப் பேசியிருந்தார். அதன்போதே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

'சட்டவிரோதமாகப் போதைப் பொருள்களை உற்பத்தி செய்து அவற்றைப் பிற நாடுகளுக்குக் கடத்தும் 21நாடுகளை உள்ளடக்கிய பட்டியலுக்குள் இந்தியாவும் உள்ளடங்கியுள்ளது. போதைப் பொருள்கள் கடத்தும் ஆசிய நாடுகளில் பாகிஸ்தான், மியான்மர், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகள் முக்கிய நாடுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. பகாமஸ், பெலிஸ், போல்வியா, கொலம்பியா, கோஸ்டோரிக்கா, ஈக்குவேடார், எல்சர்வேடார், கௌதமாலா, ஹைதி, ஹோண்டுரஸ், ஜமேக்கா, லாவோஸ், மெக்சிக்கோ, பனாமா, பெரு, நிகராகுவா, வெனிசுவெலா ஆகிய நாடுகளும் போதை பொருள்களைச் சட்டவிரோதமாகக் கடத்தும் நாடுகளின் பட்டியலில் இடப்பெற்றுள்ளன.

கொலம்பியா, மெக்சிகோ, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் சட்டவிரோதமாகப் போதைப் பொருள்கள் உற... ரித்து வருவது ஆழ்ந்த் கவலையை ஏற்ப... தெரிவித்திருக்கிறார் ட்ரம்ப்.

மேலும், 'மெக்சிகோவிலிருந்து வரும் ஹெரா... பியாவிலிருந்து வரும் கோகைன் மூலமும் அ... டுதோறும் ஆயிரக்கணக்கான உயிர்கள் பறி... ரிக்கா தொடர்ந்து பன்னாட்டு அளவில் போதை...

# தேர்தலில் வென்றவர் பதவி ஏற்பதற்கிடையில் சாவு!



லண்டன்.செப்.13

பாகிஸ்தான் நாட்டின் முன்னாள் தலைமை அமைச்சர் நவாஸ் ஷெரிப்பின் மனைவி குல்ஸூம் லண்டன் மருத்துவமனையில் நேற்று முன்தினம் காலமானார். அவருக்கு வயது 68. கணவர் பதவி இழந்ததால் பாகிஸ்தானின் இடைத் தேர்தலில் போட்டியிட்ட குல்ஸூம் அந்தத் தேர்தலில் வெற்றிபெற்றிருந்தார். ஆயினும் அவர் பதவி ஏற்கவில்லை.


வெளிநாடுகளில் சட்டவிரோதமாகச் சொத்துச் சேர்த்ததாகத் தொடரப்பட்ட வழக்கின் காரணமாக நவாஸ் ஷெரிப்பைத் தலைமை அமைச்சர் பதவியிலிருந்து பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் கடந்த ஆண்டு நீக்கம் செய்தது.

நவாஸ் பதவி இழந்ததால் அடுத்து வந்த தேர்தலில் அவரது தொகுதியான லாகூரில் தேர்தலுக்காக மனைவி குல்ஸூம் போட்டியிட்டார். பரப்புரைகள் நடந்த போது அவருக்குத் திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது. தேர்தல் நடந்து முடிந்ததும் குல்ஸூம் நவாஸுக்குத் தொண்டையில் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது. சிகிச்சைக்காக லண்டன் சென்றார். இவ்வேளையில் தேர்தல் முடிவுகள் வெளியாகின. அதில் அவர் வெற்றி பெற்றார். ஆனால் பதவி ஏற்கவில்லை. தொடர்ந்து லண்டனில் சிகிச்சை பெற்று வந்தார்.

அண்மையில் அவருக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அறுவை சிகிச்சைக்குப் பின்னர் அவரது உடல் நிலை மிகவும் மோசமடைந்தது. பின்னர் திடீர் மயக்கம் ஏற்பட்டு ஒருமாதகாலமாகச் சுயநினைவின்றி இருந்தார்.

தொடர்ந்து, அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

பாகிஸ்தான் - காஷ்மீர் பகுதியைச் சேர்ந்த குல்ஸூம், லாகூர் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்தவர். பின்னர் நவாஸைத் திருமணம் செய்தார். நவாஸ் - குல்ஸூம் தம்பதிக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர்.



உலக வர்த்தகமையக் கட்டடங்கள் தாக்கப்பட்ட ஆண்டு நிறைவை அமெரிக்கர்... பலரும் துயரத்துடன் கடைப்பிடித்திருக்கிறார்கள். 2001ஆம் ஆண்டு செம்ரெம்... 11ஆம் திகதியன்று பயணிகள் விமானங்கள் நான்கைக் கடத்தி, அதைக் கொண்டுபோ... குறித்த கட்டடங்களில் மேதியதில் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டிருந்தனர். அ... கொய்தா அமைப்பு இதற்கு உரிமைகோரியிருந்தது. இதற்குப் பின்னரான அமெரி... இராணுவ நடவடிக்கையில் அல்கொய்தா அமைப்பின் தலைவர் ஓசாமா பின்லேட... தேடியறியப்பட்டுக் கொல்லப்பட்டார். உலக வர்த்தக மையத் தாக்குதலில் கொல்ல... பட்ட 3ஆயிரம் வரையிலான பொதுமக்களை நேற்று முன்தினம் முழு அமெரிக்காவ... நினைவுகூர்ந்தது .

# செய்தியாளர்களை விடுவிப்பதற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்!



நியூயோர்க்.செப்.13

'ரெய்டெர்ஸ்' செய்திச் சேவையின் இரண்டு செய்தியாளர்களை மியன்மார் அரசு சிறையிலடைத்து வைத்துள்ளது. மியன்மாரின் ராக்கைன் மாகாணத்தில் வசிக்கின்ற முஸ்லிம்களை இனச் சுத்திகரிப்புச் செய்யும் வகையில் அந்தப் பகுதியில் வசிக்கின்ற பௌத்த பெரும்பான்மையினருடன் இணைந்து மியன்மார் அரச படைகள் செயற்பட்டன என்பதை உறுதிப்படுத்தும் செய்திகளை 'ரெய்டெர்ஸ்'இன் இவ்விரு செய்தியாளர்களும் வெளிப்படுத்தியிருந்தனர். இந்த இரண்டு செய்தியாளர்களையும் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது மியன்மார் அரசு. குறித்த செய்தியாளர்களை விடுவிக்கக்கோரிப் பல பாகங்களில் இருந்தும் குரல்கள் எழுந்தவண்ணமிருக்கின்றன. ஆனால், மியன்மார் நாட்டுத் தலைவரான ஆங்சாங்சூகி இது பற்றி எவ்விதத்திலும் அலட்டிக்கொள்ளாமல் இருக்கிறார். இந்த நிலையில் மியன்மாரில் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கின்ற செய்தியாளர்களை விடுவிப்பதற்கு மியன்மார் அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு அமெரிக்க செனற்சபை உறுப்பினர்கள் கோரியிருக்கின்றனர். அமெரிக்காவின் குடியரசுக் கட்சி, மற்றும் ஜனநாயகக் கட்சியின் அமைச்சர்கள் பலரும் குறித்த செய்தியாளர்களை விடுவிக்கவேண்டி மியன்மார் அரசுக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று கோரியிருப்பதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# குடியேறிகள் ...

திரிபோலி.செப்.13

இந்த மாதத்தின் ஆரம்பத்தில் லிபியக் கடற்பகுதியில் படகு ஒன்று உடைந்து மூழ்கியதில் 100க்கு மேற்பட்ட லிபிய நாட்டவர்கள் இறந்திருப்பதாகப் பன்னாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. செப்ரெம்பர் முதலாம் திகதியன்று லிபியாவிலிருந்து இத்தாலி நோக்கிப் பயணத்தை ஆரம்பித்த 2பிளாஸ்ரிக் படகுகளில் ஒன்றே உடைந்து முழ்கியிருக்கிறது. இதில் உயிர் தப்பிய 276 பேர் தலைநகர் திரிபோலியின் தென்கிழக்கில் சுமார் 100கிலோமீற்றர்கள் தொலைவிலுள்ள கோம்ஸ் துறைமுக நகருக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள் உட்பட இதில் உயிர் தப்பியவர்களுக்கு ஏற்பட்ட தீகாயங்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இத்தாலி உட்பட்ட ஐரோப்பாவின் அயல்நாடுகளில் குடி

# ள் உற்பத்தி செய்யும் ...வும் ஒன்று - ட்ரம்ப்



...ள்கள் உற்பத்தி செய்வது அதிக ...யை ஏற்படுத்தியுள்ளது' எனத்

...ரும் ஹெராயின் மற்றும் கொலம் ... மூலமும் அமெரிக்காவில் ஆண் ...யிர்கள் பறி போகின்றன. அமெ ...வில் போதைப் பொருள் உற்பத்தி

மற்றும் போதை பொருளகள் கடத்தலுக்கு எதிராகக் குரல் கொடுக்கும்' என்று ட்ரம்ப் மேலும் தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் குறிப்பிட்டதற்கமைய இந்தியாவில் சட்டவிரோதமான போதைப் பொருள், உற்பத்தி மற்றும் அதைச் சட்டவிரோதமாகக் கடத்துவது எனப் பலபிரச்சினைகள் உச்ச அளவில் இருப்பதாலேயே இந்தியா இத்தகையதொரு பட்டியலுக்குள் சேர்க்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் அயல்நாடுகள் கடத்துகின்ற போதைப் பொருள்களால் அமெரிக்கர்கள் பாதிப்படைவதாக ட்ரம்ப் குறிப்பிடுவதைப்போன்றே, இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாகவும், ஆங்கீகாரத்துடனும் இலங்கைக்குள்(குறிப்பாக வடபகுதிக்குள்) நுழைக்கப்படுகின்ற போதைப் பொருள்கள் காரணமான இலங்கையும் பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பது தெரிகிறது.

ட்ரம்ப் சுட்டிக்காட்டியிருப்பதை, போதைப் பொருள்கள் மூலம் இலங்கையில் இடம்பெறும் குற்றங்களுக்குச் சாவுத் தண்டணை அளிப்பதற்கு அரசதலைவர் மைத்திரிபால உத்தேசித்து வருவதுடனும், யாழ்ப்பாணத்தில் தினமும் நடக்கின்ற அநீதிச் செயல்களுடனும் பொருத்திப் பார்க்கையில் ட்ரம்ப் கூறியதிலுள்ள உண்மைத் தன்மை வெளிப்படுகின்றது என்று குறிப்பிடுகின்றனர் அரசியல் புலத்தினர்.



# கட்டலோனியா வீதிகளில் குவிந்த மக்கள்

கட்டலோனியா.செப்.13

கட்டலோனியாவின் தேசிய நாளைக் குறிக்கும் வகையில், பார்சிலோனா நகர வீதிகளில் ஏறக்குறைய 10இலட்சம் வரையான மக்கள் திரண்டு கட்டலோனியாவின் விடுதலைக்குத் தங்கள் ஆதரவை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஸ்பெய்ன் நாட்டில் ஒரு மாகாணமாக இருக்கின்ற கட்டலோனியா தனி நாடாகப் பிரிவதற்கு கடந்த ஆண்டு முயற்சித்திருந்தது. ஸ்பெய்ன் நாட்டில் இருந்து தனி நாடாகப் பிரிவதற்குக் கட்டலோனிய ஆதரவாளர்கள் பலரும் பல முயற்சிகளை எடுத்திருந்தனர். அந்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. அது நிகழ்ந்து ஓர் ஆண்டு நிறைவடைந்துவிட்டது. அந்த நினைவையொட்டித் தற்போது வீதிகளில் பேரணி ஒன்று நடந்திருக்கிறது. அது கடந்த ஆண்டு திரண்ட மக்கள் கூட்டத்தை நினைவுபடுத்துவதாக இருந்தது.





# ஆப்கனிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல்: 32 பேர் பலி; 130 பேர் காயம்!

நாங்கர்ஹார்.செப்.13

ஆப்கானிஸ்தானில் ஆயுததாரிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 32பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 130க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்திருக்கிறார்கள். ஆப்கானிஸ்தானின் நாங்கர்ஹார் மாகாணத்தில் உள்ள அசின் மாவட்டத்தில் பள்ளி ஒன்றின் அருகே கடந்த வியாழக்கிழமையன்று இந்தத் தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. கொல்லப்பட்ட அனைவரும் பொதுமக்கள் ஆவர்.

மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள காயமடைந்த பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் சாவு எண்ணிக்கை அதிகரிக்கும் என்று கருதப்படுகின்றது. இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இதற்கு முன்னர், ஆப்கனிஸ்தானின் தாஸ்சித் மற்றும் வடக்குப் பகுதியில் பாதுகாப்புப் படையினரைக் குறிவைத்துத் தலிபான் ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் 37பேர் கொல்லப்பட்ட நிலையில் இந்தத் தாக்குதல் நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

...மெரிக்கர்கள் ...செம்ரெம்பர் ...ாண்டுபோய் ...ந்தனர். அல் ... அமெரிக்க ... பின்லேடன் ...ல் கொல்லப் ...மெரிக்காவும்

# அலைபேசிகள், ஆடம்பரக் கார்களுக்குத் தடை! பாகிஸ்தானின் புதிய அரசு அதிரடி!

இஸ்லாமபாத்.செப்.13

அலைபேசிகள், ஆடம்பரக் கார்களுக்குத் தடை விதிப்பதற்குப் இம்ரான்கான் தலைமையிலான பாகிஸ்தானின் புதிய அரசு முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானில் நடைபெற்ற தேர்தலில் முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கான் தலைமையிலான பி.டி.ஐ. கட்சி அமோக வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக ஆட்சியைமைத்திருக்கிறது. இதைத் தொடர்ந்து அந்தக் கட்சியின் தலைவர் இம்ரான்கான் பாகிஸ்தானின் தலைமை அமைச்சராகப் பதவி ஏற்றார். பதவி ஏற்றது முதல் அவர் பாகிஸ்தானின் பல பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளிலும் ஆர்வம் செலுத்தி வருகிறார்.

கடந்த வாரம் அந்த நாட்டின் இராணுவ அணிவகுப்பு ஒன்றின்போது உரையாற்றிய அவர் "பாகிஸ்தான் இனி எந்த நாட்டுடனும் போரிடாது" என்றும் "மக்களின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தும் என்றும் தெரிவிவித்திருந்தார். இந்த நிலையில்தான் பாகிஸ்தானில் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கு அலைபேசிகள் மற்றும் ஆடம்பரக் கார்களின் இறக்குமதிகளுக்குத் தடைவிதிப்பதற்கு இம்ரான் கான் தலைமையிலான அரசு ஆலோசித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக பாகிஸ்தான் அரசின் பொருளாதாரக் குழு இம்ரான்கானிடம் ஆலோசனையில் ஈடுபட்டதாகவும், இதற்கு அவர் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அலைபேசிகள் மற்றும் ஆடம்பரக் கார்கள் போன்ற பொருள்களின் இறக்குமதியைத் தடை செய்வதன் மூலம் ரூ.33ஆயிரம் கோடிவரையில் பொருளாதாரப் பற்றாக்குறையைச் சீர்செய்ய முடியும் என்று பாகிஸ்தான் கணக்கிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.



# ...தொகை அதிகரிப்பு: கல்லறையாகும் லிபியக் கடல்



...ததியில் ...ற்பட்ட ...நாட்டுச் ...ாம் திக ...ிப் பய ...ஒன்றே ...ய 276 ... துறை ... சமார் ... கப்பி ... உட்பட ...காயங் ...ளில் குடி

யேறும் நோக்குடன் மத்தியதரைக் கடல்வழியாகச் சட்டவிரோதமாகப் பயணிப்பவர்களின் தொகை அதிகரித்துவருகின்றது.

அத்துடன் மத்திய தரைக் கடலைக்கடக்கின்ற அவர்களின் கடற்பயணம் ஆபத்துக்கள் பலவற்றைக் கொண்டுள்ளது.

இவ்வாறு மத்திய தரைக் கடலைக் கடந்து சென்றவர்களில் ஆயிரத்து 500க்கு மேற்பட்ட குடியேறிகள் இந்த ஆண்டு இறந்துள்ளதாகக் குடியேற்றத்துக்கான பன்னாட்டு நிறுவனம் ஒன்று கூறுகின்றது. இதில் லிபிய நாட்டவர்களே அதிகம். லிபியாவில் இருந்து வெளியேறுகின்ற குடியேறிகள் சென்றடையும் பகுதியாக இத்தாலி இருக்கிறது. குடியேறிகளின் கப்பல்கள் நுழைவதற்கு அது அனுமதி மறுத்திருந்தாலும், கடல் ஆபத்தில் சிக்கிக்கொள்கின்ற அகதிகள் பலர் இத்தாலியால் மீட்கப்பட்டுள்ளனர்.

மத்திய தரைக்கடலைக் கடந்து செல்வோரின் எண்ணிக்கை 2015ஆம் ஆண்டில் பத்து இலட்சத்துக்கு மேற்பட்டதாக இருந்தது. தற்போது அது குறைந்துள்ளது. ஆனால், இந்தப் பயணம் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துவதாகும். சிலரின் இறப்புக்களே தெரிய வருகின்றன. ஐரோப்பாவுக்கு வந்து சேர்வோரைவிட அதிக சதவீத மக்கள் இறந்துவிடுகின்றனர்.

லிபியாவை நீண்டகாலமாக ஆட்சி செய்து வந்த தலைவர் மௌமார் கடாபியின் ஆட்சி 2011ஆம் ஆண்டில் நிறைவுக்கு வந்தது. அன்றிலிருந்து லிபியாவின் உள்நாட்டு அரசியல் ஸ்திரமில்லாத நிலையிலேயே காணப்படுகிறது. கடந்த ஓகஸ்ட் மாதம் திரிபோலியில் கடும் மோதல் வெடித்திருந்தது. இந்த நிலையில் லிபியாவிலிருந்து கடல்வழியாக வெளியேறுகின்ற அகதிகளின் தொகை அதிகரித்துக்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.



# சிறைச்சாலையின் மறுபக்கங்கள்

புலோலியூர் காவியா

அண்மைக்காலமாக அனைவராலும் பேசப்பட்டுவரும் ஒரு விடயமாக சிறைச்சாலைகள் விளங்குகின்றன. அதில் முதன்மை இடத்தில், சாவுத்தண்டனையைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும், இரண்டாவது இடத்தில் சிறைத்துறையின் நிர்வாகத் திறனின்மை பற்றியுமாக முதன்மைக் கருப்பொருள் அமைந்திருந்தது. மேற்சொன்ன இரு விடயதானங்களையும் விவாதத்திற்குட்படுத்தாத இந்தப் பத்தியாளர் வரையறுக்கப்பட்ட 4 சுவர்களுக்குள் வாழ்நாளைக் கழித்துவரும் சாதாரண கைதிகள் பக்கம் சற்றுத் திரும்பிப் பார்க்கிறார்.

"கைதிகளும் மனிதர்களே" என்ற கட்டுக்கோப்பான வாசகம் எழுதப்படாத சிறைச்சாலைகளே எமது நாட்டில் இல்லை என்று சொல்லலாம். ஆனாலும் அங்கெல்லாம் கைதிகள் மனிதர்களாக நடத்தப்படுகிறார்களா? சிறைச்சாலைகளில், விளக்கமறியல் கைதிகள், தண்டனைக் கைதிகள், மேன்முறையீட்டுக் கைதிகள் என சட்டரீதியாக 3 வகையினர் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். எனினும் அவர்களை அரசியல் அதிகாரபலம் மிகுந்த கைதிகள், பணபலமுள்ள பாதாள உலகக்கைதிகள், கீழ்நிலை சாதாரணக் கைதிகள் எனப் பிரித்தெடுத்து, முறையாகப் பார்க்கப்பட்டு சிறைக்குள் கைதிகள் நடத்தப்படுகிறார்கள். இது இன்று நேற்று அல்ல பல தசாப்தங்களாகப் பின்பற்றப்பட்டு வரும் ஒரு "எழுதப்படாத சிறைவிதியாகவே" காணப்படுகின்றது. இருந்தாலும் அதிகாரிகள் மேடைப் பேச்சுக்களின் போது மட்டும் "சட்டத்தின் முன் அனைவரும் சமம்" என்று சொல்லிக்கொள்வார்கள்.

ஏனோ தெரியவில்லை, அரசியல் பலம் பொருந்தியவர்கள் சிறைச்சாலை அடைந்ததுமே அவர்களுக்கு வியாதிகள் தொற்றிவிடுவதனால் வைத்தியசாலைகளில் தடுத்து வைக்கப்படுகிறார்கள். அதாவது, தங்கவைக்கப்படுகிறார்கள். அவர்களுக்கென சேவைச் சுகபோகங்கள் அனைத்தும் கையூட்டுக்கலையின் பெயரில் சிறப்பாகச் சென்றடைந்து விடுகின்றன. பணபலமுள்ள பாதாள உலகக் கைதிகள் சிறைக்குள்ளும் தாதாக்களாக வலம் வருகிறார்கள். இவர்களது கைக்கூலிகளாகவே அனேகமான சிறை அலுவலர்கள் தமது கடமையை முறையாக நிறைவேற்ற முற்படுகின்ற போது "நாளை உன் தலையை தெருநாய் நக்கவேண்டுமா?" என அச்சுறுத்தும் நிலை தொடர்கிறது.

இப்போது கடைநிலையில் உள்ள சாதாரண கைதிகள் பக்கம் திரும்பிப் பார்க்கலாம். இவர்கள் பண்ண அடிமைகள் போன்றே சிறைக்குள் பராமரிக்கப்படுகிறார்கள். சிறைச் சோற்றை நம்பியிருக்கும் இவர்கள் மீது மட்டும்தான், இறுக்கமான அனைத்துச் சிறைச் சட்டங்களும், பாய்ச்சப்படும். "சிறு தவறு கண்டாலும், சிறைத்தடிகள் பதில் சொல்லும்" என்ற வகையில் மன்னிப்பு என்ற வார்த்தைக்கு அப்பாற்பட்டவர்களாகவே இவர்கள் மதிக்கப்படுகிறார்கள். சிறை அலுவலர்களுக்குப் பிரத்தியேக சேவகம் செய்வது மட்டுமன்றி, சிறைக்குள் இருக்கும் மூத்த கைதிகளுக்கும் கூட பணிவிடை செய்யப் பழக்கப்படுகிறார்கள்.

சாதாரண கைதிகள் தடுத்து வைக்கப்படுகின்ற சிறை விடுதிகளில் உணவு, நீர், கழிப்பறை, படுக்கை வசதி போன்ற அடிப்படைத் தேவைப்பாடுகளின் போதாமைகள் எவராலும் கண்டுகொள்ளப்படுவதில்லை.

**தண்டனைகள் கடுமையாக்கப்படுவதன் மூலம் குற்றங்களைக் கட்டுபடுத்தலாமா?**

தண்டனைகளைக் கடுமையாக்குவதன் மூலம் மட்டும் குற்றங்களையும் குற்ற வாளிகளையும் கட்டுப்படுத்த முடியுமென்று பொது மக்கள் மத்தியில் ஒரு பொதுமைக்கருத்து நிலவுகின்றது. உதாரணமாகப் போதைப் பொருள் குற்றச்சாட்டின் கீழ் ஒருவருக்கு நெடுநாள் சிறைத்தண்டனையோ அல்லது ஆயுள் தண்டனையோ அல்லது சாவுத்தண்டனை விதிக்கப்படும் பட்சத்தில், அந்தக்கைதியின் குடும்பங்களும் பிள்ளைகளும் எவ்வாறு சீவிக்க முடியும் என்றொரு கேள்வி மேலெழுகிறது. அதற்கு அரசிடம் இதுவரை பதில் ஏதும் இல்லை. பல வருடங்கள் தண்டனைக் கைதிகளாகச் சிறையில் உள்ளவர்களின் மனைவி, பிள்ளைகள், பெற்றோர் எதிர்கொள்ளும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அரசிடம் தீர்வுப்பொறிமுறைகளும் இல்லை. இவ்விடத்தில் தான் இன்னுமொரு குற்றம் அல்லது குற்றவாளி உருவாக்கப்படுகிறார். அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவில் இருந்து தம்மை தற்காத்துக்கொள்ளும் பொருட்டு சிறைத் தண்டனை அனுபவித்து வரும் கணவனின், தந்தையின் பிள்ளைகளின் அதே குற்றப்பாதையில் குடும்பமும் பயணிக்க வேண்டிய பரிதாப நிலை காணப்படுகிறது. குற்றவாளிகள் நீதியின் பால் தண்டிக்கப்படவேண்டும் என்பதில் பத்தியாளருக்கு மாற்றுக்கருத்தில்லை மறுபக்கம் புதிய பல குற்றவாளிகள் உருவாகாமல் தடுப்பதும் அரசின் கடமை என்பதே இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது. ஆகவே சிறைச்சாலைகளில் உள்ள தண்டனைக் கைதிகளின் குடும்ப வாழ்வாதாரம் தொடர்பில் அரசு சிந்திக்கத் தலைப்படவேண்டும்.

**சிறைக்கூடங்களுக்குள் கைபேசி பாவனையைக் கட்டுப்படுத்த முடியுமா?**

ஒப்பந்தக் கொலைகளும் போதைப்பொருள் வியாபாரங்களும் பாதுகாப்பு மிக்க சிறைக் கூடங்களில் இருக்கும் பாதாள உலக நபர்களால் கைபேசி ஊடாகத் திட்டமிடப்பட்டு வெளியில் உள்ள அவர்களின் சகாக்களால் செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகிறது என காவல்துறை தெரிவிக்கின்றது. உண்மை தான்; அதனைக் கட்டுப்படுத்த சிறைத்துறை எத்தகைய நடவடிக்கைகளை எடுத்துள்ளது? சிறைச்சாலைகளைச் சோதனையிடுவதற்கென விசேட ஆள் அணிகளை மறுசீரமைத்துள்ளது. "ஸ்கானர்", "ஜாமர்" போன்ற அதிநவீன கருவிகளைச் சிறைக்குள் பொறுத்தியது. அதற்கும் அப்பால் சென்று பல சிறை அதிகாரிகளையும் காவலர்களையும் அதிரடியாக இடமாற்றம் செய்தது. ஆனாலும் மேற்சொன்ன குற்றங்களைக் கட்டுப்படுத்த முடிந்ததா? இல்லை. அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்ட முன்னாள் சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு காவலர் ஒருவரிடம் கதை கொடுத்த போது அவர் "எமது சம்பளத்தை அதிகரிக்காமல் இலஞ்சம் வாங்குவதை ஒரு நாளும் கட்டுப்படுத்த முடியாது அத்துடன் நாம் வேலை நிறுத்தங்களைச் செய்து தொழிற்சங்கப் போராட்டங்களில் ஈடுபட்டு சம்பள அதிகரிப்பைக் கோர முடியாத பணியாளர்களாக இருக்கின்றோம்" - என்றார். அரசாங்கம் இது தொடர்பில் பரீட்சித்துப் பார்க்கலாம். நகரத்தை அண்டியுள்ள சிறைச்சாலைகள் புறநகர் பிரதேசங்களுக்கு மாற்றுவதன் ஊடாகப் பல்வேறு நன்மைகள் அடைய முடியும். சிறைச் சாலைக்குள் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த சிறைத்துறை இதய சுத்தியுடன் செயற்படுவதாக இருந்தால் கைதிகளை அவர்களின் குற்றப்பின்னணிக்கு அமைய வெவ்வேறாக வகைப்படுத்திப் பராமரிக்க முடியும். அதன் மூலம் போதைப்பொருள் பாவனையாளர்களையும் வியாபாரிகளையும் தடுத்து வைத்திருக்கக் கூடிய விடுதிகள் மீது சிறப்புக் கவனஞ் செலுத்திக் கண்காணிப்புக்களை மேற்கொள்ள முடியும்.

கைதிகள் தமது உறவினர்களைப் பார்த்து பேசுவதற்கென அமைக்கப்பட்டுள்ள மிகக் குறுகிய அறைக்குள் கண்ணாடி அல்லது 3க்கும் மேற்பட்ட நெற்றுக்களால் தடுப்பமைக்கப்பட்ட நிலையில் அளவுக்கதிகமானவர்களை உள்ளீர்த்து வெறும் 10,15 நிமிடங்கள் மட்டும் கதைப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றது. இது போதுமா? என்னதான் குற்றவாளிகளாகவோ, சந்தேக நபர்களாகவோ இருந்தாலும் அவர்களும் மனிதர்கள் அல்லவா? அவர்களுக்கென்றும் மனைவி பிள்ளைகள் பெற்றோர் என உற்ற உறவுகளைப் பார்த்துப் பேச வேண்டுமென்ற உணர்வு இருக்கும் அல்லவா? இவ்விடத்தில் மிக நீண்ட காலமாகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கொழும்பு, கண்டி, அனுராதபுரம் போன்ற சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் நிலை பரிதாபத்திற்குறியது.

வடக்கு கிழக்கு, மலையகப் பகுதிகளைச் சேர்ந்த இவர்களது உறவினர்கள் 34 மாதங்களுக்கொரு தடவையே தமது உறவுகளைப் பார்க்கச் சிறைக்குச் செல்கிறார்கள். சிறைக் கூடங்க ளுக்குள் கை பேசிப் பாவனையைத் தடுக்கவேண்டும் குற்றங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் எனப் பாசாங்கு செய்யும் சிறைத்துறையினர், கடைநிலைக் கைதிகளின் உணர்வுகளைக் கண்டுகொள்ளாதது ஏனோ?. வகைப்படுத்தப்பட்ட கைதிகளின் வசதிக்கேற்ப சிறைச்சாலைகள் தோறும் கண்காணிப்புப் பொறி முறையுடன் கூடிய பொதுஅலை பேசிக் கட்டமைப்புக்களை ஏற்படுத்தி கட்டுப்பாட்டு அடிப்படையில் கைதிகளுக்கு பாவனைக்கு அனுமதிக்கமுடியும். கைதிகளை அவரவர் வாழ்விடங்களுக்கு அண்மையில் உள்ள சிறைச்சா லைகளுக்கு மாற்றுவதன் மூலம் அனேகமானபிரச்சனைகளுக்குத் தீர்வை வழங்க முடியும்.

அண்மையில் சிங்கராசா என்ற ஓ்ரு அரசியல் கைதி தனது தண்டனைக் காலத்தைப் முழுமை செய்து 23ஆண்டுகளின் பின்பு விடுதலை பெற்றுச் சென்றுள்ளார். அவர் வெளியுலக வாழ்க்கைக்குச் செல்லும்போது சமயலறையில் காய்கறி வெட்டுவதைத் தவிர வேறெந்தப் பயிற்சிகளையும் சிறை அவருக்கு போதித்திருக்கவில்லை.

ஆகையால் கைதிகளின் செயற்றிறனுக்கு ஏற்ப, அவர்களுக்கு தொழிற்பயிற்சிகளையும் முறைசாராக் கல்விச் செயற்பாடுகளையும் மேற்கொண்டு, சிறையில் இருந்து விடுதலை ஆவோரின் ஆளுமைத்திறனை அதிகரிக்கக் கூடிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டும் அப்போதுதான் விடுதலைபெறும் கைதியொருவன் மீண்டுமொரு குற்றச்செயலுக்குள் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாது தன் இயல்புவாழ்வை தகவமைத்துக்கொள்ள முடியும். ■

> கைதிகளும் மனிதர்களே என்ற கட்டுக்கோப்பான வாசகம் எழுதப்படாத சிறைச்சாலை களே எமது நாட்டில் இல்லை என்று சொல்லலாம். ஆனாலும் அங்கெல்லாம் கைதிகள் மனிதர்களாக நடத்தப்படுகிறார்களா? சிறைச்சாலை களில் விளக்கமறியல் கைதிகள், தண்டனைக் கைதிகள், மேன்முறையீட்டுக் கைதிகள் என சட்டரீதியாக 3 வகையினர் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். எனினும் அவர்களை அரசியல் அதிகாரப்பலம் மிகுந்த கைதிகள், பணபலமுள்ள பாதாள உலகக்கைதிகள், கீழ்நிலை சாதாரனக் கைதிகள்பிரித்தெடுத்து. முறையாகப் பார்க்கப்பட்டு சிறைக்குள் கைதிகள் நடத்தப்படுகிறார்கள்.இது இன்று நேற்று அல்ல பல தசாப்தங்களாகப் பின்பற்றப்பட்டு வரும் ஒரு "எழுதப்படாத சிறைவிதியாகவே காணப்படுகின்றது.

# மாட்டைப்போல...



சிறுவனாக இருந்த வேளையில் அந்தரே என்ற பையன் துடுக்குத்தனமானவனாக இருந்தான். அவனைக் கட்டுப்படுத்துவது மிகவும் சிரமம். ஒருநாள் அந்தரேயின் பக்கத்து வீட்டில் ஒரு கல்யாணம் நடைபெற்றது. அந்தரேயின் குடும்பத்தினரை அந்த வீட்டார் விருந்துக்கு அழைத்திருந்தார்கள். பெற்றோர் அந்தரேயை அழைத்துக்கொண்டு கல்யாண வீட்டுக்குப் போக ஆயத்தமானார்கள். அந்தரே அங்கேயும் குறும்பு செய்வான் என்பது தாய்க்குத் தெரியும். இதனால் தாய் மகனை அழைத்து "மகனே நீ கல்யாண வீட்டில் மாடு மாதிரி வாய் திறக்காமல் மிக அமைதியாக இருக்க வேண்டும்" என்று புத்திமதி கூறினாள். "நல்லதம்மா அப்படியே இருக்கிறேன்" என்றான் அந்தரே.

கல்யாண வீட்டில் வெகு விமரிசையாக விருந்து நடைபெற்றது. விருந்துக்குப் பின் மகிழ்ச்சி பொங்க அமர்ந்திருந்த எல்லா விருந்தினர்களும் கதைகள் சொல்லி நேரத்தை இன்பமாகக் கழிக்க எண்ணி ஆளுக்கொரு கதைசொல்ல ஆரம்பித்தார்கள். எப்போதும் சபைகளில் கதை சொல்ல முன்னுக்கு நிற்கும் அந்தரேக்கு தாயின் சொற்படி வாய் பொத்தி அமைதியாக இருப்பதென்பது தாங்கிக்கொள்ள முடியாத கஷ்டமாக இருந்தது. ஆனால் தாயின் வேண்டுகோளையும் மீறக்கூடாது. ஆகவே அந்தரே ஒரு உத்தியைக் கையாண்டான்.


விருந்தாளிகளின் மத்தியில் கையையும் காலையும் ஊன்றி மாட்டைப் போல நடக்க ஆரம்பித்தான். குனிந்த தலையுடன் முட்டிக்கால்போட்டு மாடு மாதிரியே அசைய ஆரம்பித்த அந்தரே, பக்கத்தில் இருந்த ஒருவரைஒரு முட்டு முட்டினான். அடுத்து மற்றொருவரைப் பலங்கொண்ட மட்டும் முட்டினான்.

அந்தரேயின் இந்தச் சுட்டித்தனத்தைக் கண்டதாய், கலங்கிப்போய் "அந்தரே என்ன செய்கிறாய்?" என்று சற்றுக் கோபத்தோடு கேட்டாள். "ஏனம்மா நீ தானே கல்யாண வீட்டில் மாடுமாதிரி இருக்கச் சொன்னாய். இப்போது என்ன கோபிக்கிறாயே!" என்று குறும்புச் சிரிப்புடன் கூறினான் அந்தரே. தாய் மகன் ஏன் இப்படி செய்கிறான் என்ற விடயம் புரிந்து போனது. அவளும் வெகுசாவதானமாக அப்படியானால் பொல்லாத்தனம் செய்கிற மாட்டைக் கட்டிப்போட வேண்டியதுதான் என்று சொல்லிக் கொண்டே அந்தரேயின் அண்மையில் நெருங்கினாள்.

இப்போது அந்தரே பயந்து ஒழுங்காக நடந்து கொண்டான்.

## வர்ணம் தீட்டுவோம்






## குறள்

நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகை என்ப வாய்மைக் குடிக்கு

(953)

முக மலர்ச்சி, தாராள குணம்,
இனிமையாகப் பேசுதல்,
மற்றவர்களை மட்டம் தட்டாமல்
பழகுதல் ஆகிய நான்கு
குணங்களும் நல்ல குடியில்
பிறந்தோருக்கு அடையாளங்கள்.



# கடலிலிருந்து ஒருபுதிய உரம்

கடற்பாசிகளை முதலில் ஒன்று சேர்த்து ஒரு பாத்திரத்தில் திரவக் கரைசலாக மாற்றிக்கொள்ள வேண்டும். பூமியில் எந்த எந்த மாதிரியான காய்கறி மற்றும் பூச்செடி விதைகளையும் இந்தக் கரைசலில் பதினைந்து நிமிடங்கள் போட்டு வைத்துப் பிறகு எடுத்து விதைக்கலாம். அப்படி விதைத்தால், அந்த விதைகள் நன்கு முளைக்கச் செய்யக்கூடிய ஆற்றலை இந்த கடல் பாசிக் கரைசல் உண்டாக்குகிறது. அப்படி என்ன இந்தக் கடல் பாசிக் கரைசலில் இருக்கிறது.

பொட்டாசியம், ஸோடியம், பரஸ்பஸ் போன்றவை கடல் பாசியில் இருப்பதால் அவற்றில் 15நிமிடங்கள் வைத்திருந்த விதைகளும் நன்கு முளைக்கும் தன்மையைப் பெற்றுவிடுகின்றன. மேலும் இந்தக் காய்கறி, பூச்செடி விதைகளைப் பயிரிடும் நிலங்களில் வேறு எந்த உரத்தையும் விட கடற் தாவரங்களிலிருந்து கிடைக்கும் தாது உப்புக்களையே உரமாகப் போட்டால் அபாரமான விளைச்சலையும் உண்டாக்கும்.

இந்த இரண்டு உண்மைகளும் சர்வதேச அளவில் நிரூபிக்கப்பட்டுவிட்டன. எனவே எல்லா விதைகளும் நன்கு முளைக்க கடல் பாசிக் கரைசல்களும் விதைகள் நல்ல உரத்தில் விளைந்து பயன்தரக் கடல் தாவரங்களின் தாது உப்பும் எல்லா நாட்டு விவசாயப் பண்ணைகளிலும் இப்போது நடைமுறைக்கு வந்துள்ளன.

# ஒருநாள் முதல்வர்

வரலாறு மறக்காத அமெரிக்க அரச தலைவர்களுள் ஆச்சிஸன் என்பவரும் ஒருவர். இத்தனைக்கும் அவர் ஒரே ஒரு நாள் மட்டும்தான் அரச தலைவராக இருந்தார். 1849 மார்ச் மாதம் 3ஆம் நாள் அமெரிக்க காங்கிரஸ் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது. ஏனெனில் மார்ச் 4ஆம் நாள் அரச தலைவர் ஜேம்ஸ்.கே.போக் தனது பதவியிலிருந்து இறங்க வேண்டும். புதியவர் ஸக்கேரி டெய்லர் அரச தலைவர் பதவி ஏற்க வேண்டும். ஆனால் மார்ச் 4ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையாயிற்றே. டெயிலர் அந்த நாளில் பதவி ஏற்க மறுத்துவிட்டார். மறுநாள் திங்கட்கிழமை அவர் பதவி ஏற்கத் தயார். ஆனால் ஞாயிறு அன்று அரச தலைவர் யார்?

நாட்டின் உயர்ந்த பதவியில் யாருமில்லாமல் ஒருநாள் விடுபட்டுப் போகக்கூடிய நிலமை ஏற்பட்டு விட்டதே. பழைய அரச தலைவர் போக் மேலும் ஒருநாள் பதவியில் நீடித்திருக்க முடியாதா? முடியவே முடியாது. அவர்களது அரசியல் சட்டம் அதற்கு இடமளிக்கவில்லை. சரியாக நாலாண்டுகள் மட்டுமே ஒருவர் பதவியிலிருக்க முடியும்.

இது ஒரு பிரச்சினைதான் என்றாலும் இதற்கு மற்றொரு மாற்று வழியும் இருந்தது. அப்போதிருந்த சட்டப்படி பதவி நீக்கம், இறப்பு, பதவி விலகல் அல்லது அரச தலைவர் துணை அரச தலைவர் ஆகியோரின் இயலாமை காரணமாக அரச தலைவர் பதவி வெற்றிடமாகினால் நிவர்த்தி செய்யப்படும்வரை அல்லது புதிய அரச தலைவர் தேர்ந்தெடுக்கப்படும்வரை செனட் சபையின் தலைவராயிருப்பவர் அரச தலைவராக ஆட்சி செய்ய வேண்டும் என்ற வசதி இருந்தது.

மிஸௌரியைச் சேர்ந்த டேவிட் ரைஸ் ஆச்சிஸன் என்பவர் அப்போது செனட்டின் தலைவராயிருந்தார்.

4.3.1849அன்று 24மணி நேரத்துக்கு அமெரிக்க நாட்டின் அதிகார பூர்வமான அரச தலைவராக்கினார்கள். ஆச்சிஸனை அவரது ஆட்சிக்காலம் ஒரே ஒரு நாள்தான் என்றாலும் மற்ற பிரபலமான அரச தலைவர்களைவிட இவரது பெயரில் நிரந்தரமான நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டன. இன்றும் நினைவு கொள்ளப்படுகிறார். ஒரு கிராமமும் ஒரு தலைமையகமும் ஒரு ரயில் பாதையும் இவரது பெயரைத் தாங்கி நிற்கின்றன.

இவரது நினைவாக பிளாட்பர்க் என்ற இடத்தில் மிஸோரியின் 54ஆவது பொதுக்குழுவினர் ஒரு சிலை எழுப்பினார்கள். அதை வெகு ஆடம்பரமாக 1928ஒக்டோபர் 27இல் திறந்து வைத்து அந்தச் சிலைக்கு அடியில் டேவிட் ரைஸ் ஆச்சிஸன் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஒருநாள் அரச தலைவர் என்று மறக்காமல் பொறித்து வைத்தார்கள்.

பதவிக்கு மதிப்புக் கொடுத்தார்கள்.

காரை எம்.பி அருளானந்தன்

# ஆவணிச் சதுர்த்தி

## சிவப் பரம்பொருள் துன்பங்களைப் போக்கிட விநாயகர் வடிவம் தாங்கிய திருநாள்



**சிறப்பு**

தமிழ் வருடப்பிறப்பின் முதல் மாதமான சித்திரையை சிறப்பாகக் கொண்டாடுவது போலவே, வருடத்தின் ஐந்தாவது மாதமான ஆவணியில் வருகின்ற விநாயகசதுர்த்தி விழாவைஇந்துக்கள்பக்திபூர்வமாக கொண்டாடி வருகின்றனர்.
இந்தத்திருநாளில் விநாய அடியவர்கள் அதிகாலையிலேயே எழுந்து நீராடி, வீட்டைக் கழுவி சுத்தம் செய்வர். வாசலிலே கோலமிடுவர். மாவிலை, தோரணம், தென்னங்குருத்துவாழை கொண்டு ஆலயங்களையும், வீடுகளையும் அலங்கரிப்பர்.
களிமண்ணால்செய்தபுதுப்பிள்ளையாரை பூஜை அறையில் உள்ள மரப் பீடத்தில் வைத்து மலர் மாலைகள், நகைகள் அணிவித்து, அலங்காரம்செய்து வழிபாடு இயற்றுவர். இந்த மரபு இந்துமக்களிடையேதொடர்ந்து இன்றும் நிலவி வருகிறது.

**அவதாரம்**

விநாயகப்பெருமானின் அவதாரம்குறித்துபலகதைகள் பேசப்படுகின்றன. அவற்றுள்யானைமுகம்பெற்றகதை அற்புதமானது. அருள் விற்பன்னமானது.
முன்னொரு காலத்தில் கஜமுகாசுரன் என்ற கொடிய அசுரன் ஒருவன் இருந்தான். இவன் மாகத முனிவருக்கும், வீபூதி என்ற அசுர மாதுக்கும் பிறந்தவன்.
சிவபெருமானை நோக்கிப் பல்லாண்டு காலம் தவம் புரிந்தான். அதன்பயன்கொண்டுசிவப்பரம்பொருளின் அருட்காட்சியைக் கண்டுகொண்டான். அந்தச் சந்தர்ப்பத்திலே சிவபெருமான் கஜமுகாசுரனை நோக்கி, "உனக்கு என்ன வரம் வேண்டும்..?" என்றுகேட்டார்.

**இறையருளின் சித்தம்**

கஜமுகாசுரன்பதிலுரைத்தான், "எனையாளும்பரம்பொருளே! தேவரும், மூவரும் எனக்கு அடங்கியிருக்க வேண்டும். எல்லோரையும்வெற்றிகொள்ளும்வீரமும் வலிமையும், மரணமில்லாத தகைமையும் வேண்டும்." என்றுவிழித்தான். இறைவரம்தனைதான்விரும்பியவிதமேபெற்றான். வரத்தைப்பெற்றுக்கொண்டவன் அமைதியாக இருக்கவில்லை. மிகுந்த ஆணவச் செருக்கோடு தேவர்களையும், முனிவர்களையும் துன்புறுத்தினான்.
அவர்களை வன்ம எண்ணங்கொண்டு அடக்கினான். மாலையனாதி வானவர்களைப் பிடித்து இழுத்துக் கொண்டு வருமாறு கட்டளையிட்டான். அவனுடைய ஏவலர்களும் கட்டளைக்குப் பணிந்தனர். திருமால், திசைமுகன், இந்திரன் முதலான இமையோர்களை ஆர்த்து ஈர்த்து வந்தார்கள்.

**துன்பங்களின் கனதி**

மனம் பூரித்து உள மகிழ்ந்தான் கஜமுகாசுரன். அவர்களை நோக்கி, "ஏ தேவர்களே! நீங்கள் என்முன் இரு காதுகளையும் பிடித்துக் கொண்டு அனுதினமும் காலை, உச்சி மாலை என மூன்று வேளையும் 1008 தடவைகள் தோப்புக் கரணம் போட வேண்டும்" என்று கட்டளையிட்டான். தேவர்கள் அச்சம்கொண்டனர். கட்டளைப்படியேமூன்றுவேளையும்1008தடவைகள்தோப்புக்கரணம் போட்டனர். களைப்படைந்து அயர்ந்து போயினர். மிக மனம் வருந்தி வாடினர்.

> விநாயகப் பெருமானுடைய திருவுருவம் முன்பாக தோப்புக்கரணம் இடுவதனால் அறிவு வளர்ச்சியும், உடல் உள விருத்தியும் மேம்படும். அவருடயை அருளுக்கும் பெருங்கருணைக்கும் உரித்துடையவர்களாக விளங்குவர். எனவே இத்தகு மகத்துவம் நிறைந்த ஆவணிச் சதுர்த்தி நன்னாளிலே அவதாரம் கொண்ட விநாயகப் பெருமானை வழிபாடு இயற்றுவோம். சைவ சமயிகளாகத் திருத்தொண்டுகளை நிறைவாகச் செய்திருப்போம்.

துயர மிகுதியால் திருக்கயிலை மலை சென்று சிவபெருமானைவணங்கினர். "அருட்பெருங்கடலே, கஜமுகாசுரனுடையகொடுமையால்நாங்கள் அதிகதுன்பங்களை அனுபவித்துவிட்டோம். எங்களைக் காத்தருள வேண்டும். அதுவே தேவரீரது கடன்" என்று முறையிட்டனர். "இனியும் எம்மால் இத்தகு துயரங்களைத் தாங்க இயலாது. எமைக் காத்தருளீர்" என அவன் தாள் பணிந்து வேண்டினர். கயிலை நாதர் வேண்டுதலை ஏற்றார். கருணை புரிந்தார்.

**அனுக்கிரகம்**

தனக்கு அருகாமையில் வீற்றிருந்த விநாயகப் பெருமானைக் கடைக் கண்ணால் பார்த்தருளினார் சிவப் பரம்பொருள். விநாயகரை யானை முகத்தோடும், மனித உடலோடும் தோற்றுவித்து கஜமுகாசுரனை அழித்து வரும்படி அனுப்பிவைத்தார். விநாயகப் பெருமான் மணித்தேர்மீது ஆரோகணித்தார். வில், வாள் முதலிய படைக்கலங்களைத்தரித்தபடி பூத கணங்கள் புடைசூழப்போருக்குப்புறப்பட்டார். போர்ப் பறைகள் முழங்கின. வானவர்கள் மகிழ்ந்தனர். விண்ணும் மண்ணும் அதிர்ந்தன. பூத கணங்களும், அசுர கணங்களும்போர்புரிந்தன. இறுதியில் விநாயகப்பெருமான்கஜமுகாசுரனோடுகடும்போர்புரிந்தார். விநாயகர் ஏவிய கணைகள்யாவும்கஜமுகன் மீது வீழ்ந்தன. பாறையில் வீழ்ந்த மழைத்துளிகள் போல கூர் மழுங்கின.
இந்த சந்தர்ப்பத்திலே "கஜமுகாசுரனை எப்படைகளாலும் அழிக்க முடியாது. அவன்அழியாதமாயாவரம்பெற்றவன்" என்ற அசரீரி எழுந்தது. அவ்வாறெனில் மாயாவரம்பெற்றகஜமுகாசுரனை தந்தத்தால் அழிப்பேன் என விநாயகர் திருவுளம் கொண்டார்.
தமது திருமுகத்தில் உள்ள வலக்கொம்பை முறித்தார். சிவமந்திரத்தைஉச்சரித்தபடிகொம்பைஏவினார். ஞான வடிவான தந்தம் கஜமுகாசுரனைப் பிளந்தது. மாயா வரம்பெற்றகஜமுகாசுரன்பெருச்சாளிவடிவம்பெற்றான். விநாயகரை எதிர்த்து மீண்டும் போர் புரிய வந்தான். விநாயகர் கருணைகூர்ந்தார். திருக்காட்சி கொடுத்தார். அவனுடைய அறியாமை அகன்றது. மெய்யுணர்வு பெற்ற கஜமுகாசுரன் விநாயகரை வணங்கி அவர் தாள் பணிந்தான். ஆம், மூஷிகமாகி நின்ற கஜமுகாசுரனை விநாயகர் தனது வாகனமாக ஏற்றருளினார். வானவர்கள் மலர் மழை பொழிந்தனர். விநாயகரைப் போற்றி வணங்கித் துதி பாடினர்.



**வரம் அருளல்**

விநாயகர் மாலயனாதி வானவர்களை நோக்கினார், "உமக்கு என்ன வரம் வேண்டும். கேளுங்கள்?" என்று கூறினார். அவர்களுக்கு அருள் இன்பம் தனை நிறைவாக அளித்தார்.
தேவர்கள்விநாயகப்பெருமானின்திருவருள்கருணை கண்டு பூரித்தனர். பின்பு விநாயகரை வேண்டிப் பணிந்து, "ஆனை முகத்து அண்ணலே! நாங்கள் இத்தனைகாலம்கஜமுகாசுரனுக்குக்காலை, உச்சி, மாலை என மூன்று வேளையும் ஆயிரத் தெட்டுத் தோப்புக்கரணங்கள் போட்டு சேவை புரிந்து வந்தோம். இனி எப்போதும் எங்களைக் காத்தருளிய தேவரீர் தங்கள் முன் அதனைச் செய்ய அருள்புரிய வேண்டும்" என்றனர்.
தேவர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட விநாயகப்பெருமான்புன்முறுவல்பூத்தார். பின்புதேவர்களை அழைத்து, "மூன்று முறை தோப்புக்கரணம் இட்டால் போதும்" எனக் கூறி அருள் உரை மொழிந்தார். அவ்விதமே தேவர்களும் சேவை புரிந்தனர்.
அன்றுதொட்டு அமரர்களும், அடியார்களும் விநாயகப் பெருமானுடைய எழுந்தருளல் கண்டு பக்தி செய்தனர். பெருமானுடைய திருமுகப் பொலிவின் செந்தளிப்பை வணங்கிஅருள்பெற்றனர். அவர்முன்பாகநின்றுதோப்புக்கரணம் இட்டு வழிபாடு செய்வதனை வழக்கப்படுத்திக்கொண்டனர்.

**திருத்தொண்டுகள் செய்து இன்பமாக வாழ்வோம்**

இங்குவிநாயகப்பெருமானுடையதிருவுருவம்முன்பாக தோப்புக்கரணம் இடுவதனால் அறிவு வளர்ச்சியும், உடல்உளவிருத்தியும்மேம்படும். அவருடயைஅருளுக்கும் பெருங்கருணைக்கும் உரித்துடையவர்களாக விளங்குவர். எனவே இத்தகு மகத்துவம் நிறைந்த ஆவணிச்சதுர்த்திநன்னாளிலே அவதாரம்கொண்ட விநாயகப்பெருமானைவழிபாடுஇயற்றுவோம். சைவசமயிகளாகத் திருத்தொண்டுகளை நிறைவாகச் செய்திருப்போம். வாழ்வில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று இன்பமாக வாழ்வோம்.

*ஐந்து கரத்தனை யானை முகத்தனை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினைப்*
*புந்தியில் வைத்து அடி போற்று கின்றேனே!*

## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் மேற்குபிரதேச சபை
### பிரமான அடிப்படையிலான மூலதன நன்கொடை வேலைத்திட்டம் (CBG Fund) – 2018

1. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி வேலைக்காக கேள்விகோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(1) இலக்க 16.03.2016 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும். மேலும் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் வேண்டப்படும் தரம் அட்டவணையில் குறிப்பட்டவாறு இல்லாதவிடத்து அதனிலும் கூடியதரம் சமர்ப்பித்த கேள்விகள் பரிசீலிக்கப்படலாம்.
3. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி பொருத்தமான தரத்தில் இக்ராட்/சீடா (ICTAD /CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக் குழுவலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் (தொலைபேசி : 0212250144, தொலைநகல் :021 2250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 14.00 மணிவரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் இடத்தில் 13.09.2018 ஆம் திகதியிலிருந்து 27.09.2018 ஆம் திகதி வரைகாலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு 28.09.2018 ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படவேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது–15.11.2018) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேசசபைக் கட்டடத்தில் 20.09.2018 அன்று பி.ப 14.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ளமுடியும்.

| தொ. இல | ஒப்பந்த எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்.ரு) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| 01 | NP/14/41(17)/02 /CBG/2018 -14 | அராலிமத்தி ஓடைக்காடு 2ஆம் ஒழுங்கை புனரமைத்தல் | 1.8 | 02 மாதம் | வீதி C9 | 18,000.00 | 13.12.2018 |

த.நடனேந்திரன்
தலைவர்,
பெறுகைக் குழு,
வலிகாமம் மேற்குபிரதேச சபை,
சுழிபுரம்.
13.09.2018 (10)

## கேள்வி அறிவித்தல்
### வலிகாமம் மேற்கு பிரதேச சபை சபை நிதி வேலைத்திட்டம் (Council Fund) – 2018

1. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி மற்றும் கட்டட வேலைகளுக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(1) இலக்க 16.03.2016 ம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப் போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் பொருத்தமான தரத்தில் இக்ராட்/சீடா. (ICTAD /CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் (தொலைபேசி : 0212250144, தொலைநகல் :021 2250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 மணி வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் இடத்தில் 13.09.2018ம் திகதியிலிருந்து 27.09.2018 ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2,000/- (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு 28.09.2018ம் திகதி பி.ப 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்து ஒன்பது – 15.11.2018) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ. இல | ஒப்பந்த எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன் ரூபா) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(17)/02/CF /12-2018 | அராலி குமுக்கன் குளம் வீதி புனரமைத்தல் | 1.733 Mn | 03 மாதங்கள் | C9 வீதி | 17,500.00 | 13.12.2018 |
| 02 | NP/14/41(17)/02/CF /13-2018 | வட்டுக்கோட்டை நவீன சந்தை திருத்த வேலை | 0.265 Mn | 02 மாதங்கள் | C9 கட்டடம் | 2,650.00 | 13.12.2018 |
| 03 | NP/14/41(17)/02/CF /14-2018 | சுழிபுரம் உப அலுவலக எல்லை மதில் அமைத்தல் | 0.499 Mn | 02 மாதங்கள் | C9 கட்டடம் | 5,000.00 | 13.12.2018 |

கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேச சபைக் கட்டடத்தில் **20.09.2018 அன்று பி.ப 14.30** மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்துகொள்ளமுடியும்.

10. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள் கேள்வி கோரவோ பெறுகைக் குழுத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**த.நடனேந்திரன்**
**தலைவர், பெறுகைக் குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.** **13.09.2018.**

உதயன்
விளம்பரத்தொடர்புகளுக்கு
advt@uthayan.com

### கார் விற்பனைக்கு
**NISSAN SUNNY, N -16 Car, NP HU -XXXX, Super Saloon, Silver Colour**
077 834 5164

### பெயர் மாற்றம்
மந்துவில் வடக்கு கொடிகாமத்தை சேர்ந்த **வசந்தி** ஆகியநான் இன்றிருந்து எனது பெயரை **கொங்கேஸ்வரி** என மாற்றம் செய்வதோடு இன்றிலிருந்து இது தொடர்பான சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என்பதையும் அறியத்தருகின்றேன்
**கொங்கேஸ்வரி**
(cs. 14684) (13.17)

## 23 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



### சிற்றம்பலம் தவராஜா
(உதவி பொலிஸ் அதிகாரி – S.I)

தோற்றம் 08.01.1947
மறைவு 13.09.1995

அன்பு உள்ளவரே உங்களால் நாம்
– கௌரவிக்கப்படுகின்றோம்
அரசினால் நீங்கள் துதிக்கப்படுகின்றீர்கள்
வரலாற்றில் நாயகனாக பெயர் பதித்து
– சென்றவரே
உங்கள் ஆன்மா சாந்தி அடைய
– பிரார்த்திக்கின்றோம்

தற்காலிக முகவரி :
**பளை வீமன்காமம் பாடசாலை அருகில் மாவிட்டபுரம்.** (c31864) (13.17)

**மனைவி, சகோதரர்கள், மைத்துனர்கள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்கள்

### அழகரத்தினம் மோகனாதன் (மதன்)



வவுனியா கனகராஜன்குளத்தைப் பிறப்பிடமாகவும் வேப்பங்குளத்தை வசிப்பிடமாகவும் தற்போது சுவிஸ் Genewa வில் வசித்தவருமாகிய அழகரத்தினம் மோகனாதன் 07.09.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அழகரத்தினம் - லோகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் மங்கயற்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும், ராதிகாவின் அன்புக் கணவரும், தயாநிதி, பாலநிதி, சற்குணநிதி, லைதின், புஸ்பநிதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமாரவேந்தன், மகேந்திரராஜா, சிவநேசன், கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அக்சயா, விசாலி, வாரகி, மதுசன், டினார்சனா, ரக்சனா, மதுசா, நிலோஸ், அஸ்மிதன் ஆகியோரின் அன்பு மாமனும், ராகவன், ராகுலன், ரேணுகா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2018) வியாழக்கிழமை முற்பகல் 11.45 மணியளவில் Crematioine et Centre Funeratione st - Georges, Chemin de 19 Batic 13,1213, Genewa, Switzerland இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாடசாமி கோயிலடி.**
**பண்டாரிக்குளம்,**
**வவுனியா.**

**தகவல் :**
**நேசன் - மைத்துனர்**
**வவுனியா.**

077 606 2738 (c12914)

### வைத்தியகலாநிதி
### திருமதி ஜெயராணி மனோகரி பொன்னுத்துரை



நல்லூர், நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி ஜெயராணி மனோகரி பொன்னுத்துரை கடந்த (10.09.2018) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திய கலாநிதி V.S. இராமநாதன் - வைத்திய கலாநிதி கமலா இராமநாதன் தம்பதிகளின் ஏக புதல்வியும் திரு. திருமதி அம்பலவாணர் பொன்னுத்துரை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற கிறிஸ்டி பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் பிறின்ஸ் டேவிற் கிருபாகரன் (Teacher Logos college, Colombo), சாம்சன் ஞானகரன் (DFCC Bank), ஜொனத்தன் ஜீவாகரன், கிறிஸ்ரீன் ஷிராணி (Freelancer) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நயனாமாலி (Ministry of skills devolopment and vocational training), கிரிஷாந்தி (Teacher Chundikuli Girls' College), ஜெகன் (Cargills Ceylon PLC) ஆகியோரின் அன்பு மாமியாரும் அடிக்காரம் ஷலோம் யோகஷ், நிசினி நயோமி, பெஞ்ஜமின் ஷெவான், டிலான் டானியல், பிறிசில்லா எலிஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஜெயசிங்கம் (ஆஸ்திரேலியா), ஜெயந்திரன் (ஆஸ்திரேலியா), ஜெயராஜகுமார் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (13.09.2018) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கம் பரி. யாக்கோபு ஆலய சேமக்காலையில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**276, கனகரட்ணம் வீதி,**
**நாயன்மார்கட்டு, நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: பிள்ளைகள்.**
**0777 582 996**

## சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

### திரு. தணிகாசலம் கணேசமூர்த்தி

(நிறைவேற்று உத்தியோகத்தர்)

(01.10.1981 - 12.09.2018)



முப்பத்தேழு ஆண்டுகள் நிறைவான
சேவைதனை வங்கிக்கு நல்கி
அகவை அறுபதில் பணி
நிறைவு காணும் தணிகாசலம்
கணேசமூர்த்தி அவர்கள் பல்லாண்டு
வாழ வாழ்த்துவதோடு இனிய
பிறந்தநாள் வாழ்த்துக்களையும்
மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

Congratulations Congratulation Happy Birthday

வாழ்த்துவோர்:
வங்கிக் குழாம்
BOC யாழ். 2ஆம் மேற்றரக்கிளை



## வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம்



## சப்ததள இராஜகோபுர அடிக்கல் நாட்டுவிழா

காலம் : 14.09.2018
நேரம் : காலை 6.21 - 8.07

மேற்படி ஆலயத்தில் இராஜகோபுர அடிக்கல் நாட்டு விழா இடம்பெறவுள்ளதால் ஆலய பக்தர்கள் உபயகாரர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் ஆசார சீலர்களாக வருகை தந்து அடிக்கல் நாட்டுதலில் தாங்களும் பங்குபற்றி அம்பிகையின் திருவருளைப் பெற்றுய்வீர்களாக.

கோபுர திருப்பணிச்சபை ஆலயபரிபாலன சபை

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 . 04 . 1936



உதிர்வு 25 . 08 . 2017

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

### அமரர் நாகலிங்கம் முத்துலிங்கம்

(பிரபல வர்த்தகர்)

திதி:- ஆவணிச்சதுர்த்தி (13.09.2018)

மலர் முகம் கண்டே உள்ளம் கனிந்தோம் - அப்பா
உங்கள் நிழலில் இருந்து வாழ்ந்ததை மறவோம் - அப்பா
நீங்கள் எம் வாழ்வின் வழிகாட்டி
பாசம் ஒன்றைத் தவிர வேறென்ன நாம் தந்தோம் - அப்பா

வந்தவர் எல்லாம் போவது உண்மை
விதியென ஒன்று உண்டென அறிந்தோம் - அப்பா
சிந்தனை எமக்குத் தோன்றியபோதும்
நெஞ்சில் செப்பிட முடியாத் துயரே மோசம்

உங்களை இழந்த உணர்வே மிஞ்சும் - என்றும்
உள்ளத்தில் உங்கள் நினைவே துஞ்சும்
வந்தனை செய்வோம் வாழும்வரையில் - எம்
சோகம் சொல்லவும் வார்த்தைகள் இல்லை - அப்பா...

இல.133/2, லக்சபானா வீதி,
தோணிக்கல், வவுனியா.

குடும்பத்தினர்.
077 410 8068

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு
தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

## யாழ் கலாலயா பயிற்சியகம்



இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியர்,
வெளிநாட்டுக்குச் செல்லவிருக்கும் மங்கையர்,
சொந்தமாக தொழில் புரிய விரும்பும் நங்கையர் மற்றும் ஆர்வமுள்ள
பெண்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!



- FACIALS (முக அழகுக்கலை)
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்
- BRIDAL DRESSINGS (மணப்பெண் அலங்காரங்கள்)





- கேக் ஐசிங்
- உணவு தயாரித்தல்

இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவிகளுக்கு
மேற்படி பயிற்சிகளின் கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்.

பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- பிளவுஸ், சாறி பிளவுஸ், சுரிதார்,
மற்றும் ஆடைகள் தைக்கும் சான்றிதழ்
அற்ற கிழமை நாள் தையல் பயிற்சிகள்.



பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால்
பயிற்சிகள் யாவும் பயிற்றுவிக்கப்படுகின்றன!

கிழமை நாள் பிரிவுகள் ஆரம்பம் - 14.09.2018 வெள்ளிக்கிழமை
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 16-09-2018 ஞாயிற்றுக்கிழமை
நேரம் 09.30மணி

மேலும் விபரங்களை நாள்தோறும் மு.ப 9.30 - பி.ப 5.30 வரை
நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-

## மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 05 . 1974



இறப்பு 11 . 09 . 2018

### திருமதி கேதாம்பிகை தவதாசன்

(ஆசிரியர் - மு/பனங்காமம் ஆரம்பப் பாடசாலை,
முன்னாள் ஆசிரியை - மு/பாண்டியன்குளம் ம.வி.)

யாழ். சுதுமலையைப் பிறப்பிடமாகவும் இல. 235, பாண்டியன்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கேதாம்பிகை தவதாசன் கடந்த (11.09.2018) காலமானார்.

அன்னார் கந்தையா - பத்மாவதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் தர்மலிங்கம் - மங்கையற்கரசி (கனகராயன்குளம்) தம்பதிகளின் அன்பு மருமகளும் தவதாசனின் அன்பு மனைவியும் ஜெகதாம்பிகை, நகுலகுமார் (சாரதி - பிரதேச வைத்தியசாலை, நட்டாங்கண்டல்), திருமதி கனகாம்பிகை, பரணிதரன் (மலேரியா தடை இயக்கம்), ஜெகதரன் (சுகாதார பணியாளர் - பிரதேச வைத்தியசாலை, நட்டாங்கண்டல்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் மற்றும் பாஸ்கரன், உஷாந்தினி, சுதாஜினி, சுரேக்கா, ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2018) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 3ஆம் வாய்க்கால் பாண்டியன்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

235, பாண்டியன்குளம்,
நட்டாங்கண்டல். 077 886 0958

தகவல்:
குடும்பத்தினர்.

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

### குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை நிதி – 2018

### வீதி விளக்குகளை கொள்வனவு செய்தல்

### கேள்வி இல :NP/14/41(14)/05/PSDG/05/2018

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) வடமாகாணம், தகுதிவாய்ந்த வழங்குனர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 04 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Sehedule) பகுதி 05 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) தொலைபேசி:- 0212241130, தொலைநகல்:- 0212243688 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் 13.09.2018 ஆம் திகதியிலிருந்து 27.09.2018 வரை காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக் குழு, வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) எனும் இடத்திலிருந்து 13.09.2018 ஆம் திகதியிலிருந்து 27.09.2018 வரை காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
07. கேள்வி இருபிரதிகளில் தயாரித்து **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)** எனும் முகவரிக்கு27.09.2018 திகதி 14.30மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் /பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 49 (நாற்பத்தொன்பது- நாள்கள் 15.11.2018) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்வி தொடர்பான இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவினால் எடுக்கப்படும்
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| 01 | NP/14/41(14) /05/PSDG/ 05/2018 | வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல் **(50Watt Single Eye High Power COB LED Street Light)** | 0.315 | 01 மாதம் | அங்கீகரிக் கப்பட்ட நிறுவனம் | 6,500.00 | 13.12.2018 |

11. கேள்வி கோரல் பற்றியமுன் கூட்டிய கூட்டம் 20.09.2018 ஆம் திகதி 15.00 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

திரு.சோ.சுகிர்தன்
தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)
13.09.2018

(IN/7786/10)


**கடை தேவை**

யாழ். நகரப்பகுதியில் நீர் வசதியுடன்கூடிய கடை தேவை. அல்லது பிரதான வீதியில் உள்ள சிறிய வீடுதேவை. 077 606 2716

**கடை வாடகைக்கு**

யாழ். ஐந்து சந்தியில் கடை வாடகைக்கு மாபிள், சீலிங், Temperglass, Tubewell உள்ளது. தொடர்பு - 077 884 8873

**விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு**



Wijitha Cinema - Hattan Proudly presents

**வடக்கு கிழக்கு**

Majestic Jaffna 10.30/1.30/4.15/7.00 pm
Chelva Jaffna 10.30/2.30/6.30
Raja Jaffna 10.30/2.30/6.30
Saru Cinema Point Pedro 10.30/2.30/6.30
Shanthi Batticaloa 10.30/2.30/6.30
Vijaya Batticaloa 10.30/2.30/6.30
G.K.Cinemax Kalmunai 10.30/2.30/6.30
Vasanthi Vavunia 10.30/2.30/6.30
Archana Akkaraipattu 10.30/2.30/6.30
Nelson Trinco 10.30/2.30/6.30
SELLAM PREMIER Chenkalady 10.30/2.30/6.30
Bala Chavakachcheri 10.30/2.30/6.30
SARASWATHY Trinco 10.30/2.30/6.30
SUGANTHI Batticaloa 10.30/2.30/6.30

**கொழும்பு**

Majestic Colombo 10.30/1.30/4.15/7.00 pm
Capital Armour Street 10.30/2.30/6.30
City Cinema Mt.Lavinia 9.00 pm
CONCORD Dehiwala 4.30/7.30/10.30pm
SAMANTHA Dematagoda 7.30 / 10.30 pm
EXCEL WORLD Maradana 4.15 pm
SAVOY 3D Wellawatta 9.30 pm
EROS Pamankada 10.30/2.30/6.30/9.30
Ruby Maligawatta 10.30/2.30/6.30/9.30

**மத்திய மாகாணம்**

Regal Nuwara Eliya 10.30/1.30/4.15/7.00
WIJITHA Hattan 10.30/2.30/6.30
Dinusha Nawalapitiya 10.30/2.30/6.30

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by:
Cinema Entertainments (Pvt) Ltd (CEL)





இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிப்போர், வரை. ஸ்டபர்ட் மோட்டார் (தனியார்) நிறுவனம் மற்றும் நாடளாவிய ஹொன்டா விற்பனையாளர் வலையமைப்புகளூடாக / Honda Sri Lanka

பிரதான காரியாலயம் : 718/7, மருதானை வீதி, கொழும்பு 10, தொ: 011-7607200. மோட்டார் சைக்கிள் காட்சியறை : 195, கொழும்பு வீதி, ரத்னபிட்டிய, போரலஸ்கமுவ. தொ: 011-7607705.

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு 021 493 1111

## மரண அறிவித்தல்

# ஐயாத்துரை துரைசிங்கம்



வாதரவத்தை புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சேகண்டி வாய்க்கால் இரண்டாம் ஒழுங்கை மட்டுவில் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட ஐயாத்துரை துரைசிங்கம் நேற்று (12.09.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - இராசமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைரவநாதர் - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் செல்வநாயகி லீலாவதி காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரமேஸ்குமார், கமலகுமார், ரவிக்குமார் ( உரிமையாளர் - R.S . செலக்சன், நவீன சந்தை சாவகச்சேரி) தீபகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதாசினி, வசந்தமாலா, சர்மிளா, நாளினி, சுயந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் மகிழ்ராஜ், சுசிராஜ், கபில்ராஜ், விமல்ராஜ், தனுராஜ், துசாயினி, தர்மிலன், லக்சிகா, கனிஸ்ரன், பிரியங்கா, சுடரோன், கயலக்சிகா, ஜெனிசன், சீராளன், டிஷானா, டதுஷன், டினோஜா ஆகியோரின் ஆகியோரின் அன்புப் பேரனும் குணபாலசிங்கம், சிவராசா, காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் கங்காதரன், நாகரத்தினம், காலஞ்சென்ற புனிதவதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 13.09.2018 ) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நுணாவில் கொல்லங்கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சேகண்டி வாய்க்கால், 2ஆம் ஒழுங்கை,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(C 7790/15/17)

## மரண அறிவித்தல்

பிறப்பு 06 . 10 . 1927



இறப்பு 12 . 09 . 2018

# கிறகோரி பிரான்சிஸ் (விக்டர் மாஸ்டர்)

யாழ்ப்பாணம், ஒடக்கரை வீதியைப் பிறப்பிடமாகவும் பாஷையூரை வசிப்பிடமாகவும் கொண்ட கிறகோரி பிரான்சிஸ் (விக்டர் மாஸ்டர்) நேற்று (12.09.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யாக்கோ கிறகோரி - விக்டோரியா கிறகோரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பர்னாந்து சேயோன் - சேயோன் மரிசித்தா தம்பதிகளின் அன்பு மருமகனும் பிரான்சிஸ் ஆஞ்சலம்மாவின் அன்புக் கணவரும் யோகேஸ்வரன், யோகேஸ்வரி, சிறிராஜேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அசன்சியா சூரியசிந்தா, சோமசுந்தரம், நாகலிங்கம், தர்சினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் இந்துமதி, மேரி மாதுலா, சியானா, யோவான்கிலபர், டியோன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற யோசெப் யோசெப்பின் மற்றும் கிறகோரி கிறிஸ்தோபர், வின்சன்ராஜா ரீற்றா, ஆனந்தராஜா மேரி மற்றலீன், காலஞ்சென்றவர்களான கிறகோரி அன்டனி, கிறகோரி யேசுதாசன் மற்றும் பற்றிக் அன்டனி, மேரி திரேசா, மரியதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆன்சலம், ஏபிரகாம் இசரெத்தம்மா, யோகராஜா தங்கம், சென்ஜேம்ஸ் பேளி, ஜெனரிக் (பற்றிக்கோன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (14.09.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிரான்சிஸ் யோகேஸ்வரன் (மகன்)
யோகேஸ்வரி (இந்தியா 0091 8056794710),
சிறீ (சுவிஸ் 0041 7680 27244), 077 908 4219,
076 236 5594, 076 7917549, 076 193 5306.

10/2, சென். செபஸ்ரியன் வீதி,
பாஷையூர்.

## மரண அறிவித்தல்



# திருமதி
# நேசம்மா திருநாவுக்கரசு

(இளைப்பாறிய P.T. ஆசிரியை -
சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

கொடிகாமம் கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசம்மா திருநாவுக்கரசு நேற்று (12.09.2018) புதன்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - நாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் குப்பிளானைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் பொன்னையா திருநாவுக்கரசுவின் (இளைப்பாறிய ஆசிரியர் - கொள்ளுப்பிட்டி சென். தோமஸ் கல்லூரி, யா / சென். ஜோன்ஸ கல்லூரி) அன்பு மனைவியும் துஷாந்தனின் (லண்டன்) அன்புத்தாயாரும் சுபாஷினியின் (லண்டன்) அன்புமாமியாரும் அபிராம், அபிநயா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற இராசம்மா, நாகம்மா, ஞானம்மா மற்றும் டாக்டர் தேவதாசன் (கண்டி) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பாலாவித்தாள் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 610 5906


தகவல்:
பொ. திருநாவுக்கரசு.

(C 7789/15/17)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 1000 | 1000 | 1000 |
| நண்டு | 500 | 500 | 600 | 600 |
| கணவாய் | 800 | 900 | 1000 | 1000 |
| பாரை | 600 | 950 | 800 | 1100 |
| சுறா | 600 | 900 | 1200 | 1200 |
| சீலா | 500 | 500 | 700 | 400 |
| விளை | 600 | 500 | 700 | 700 |
| முரல் | 400 | 400 | 600 | 500 |
| கும்பிளா | 500 | 350 | 500 | 300 |
| கிளக்கன் | 800 | 400 | 600 | 600 |
| ஓரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 250 | 300 | 300 | 250 |
| நகரை | 250 | 300 | 300 | 250 |
| சூடை | 150 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 300 | 300 | 400 | 400 |
| திருக்கை | 350 | 300 | 500 | 400 |
| மதனம் | 150 | 300 | 250 | 300 |
| கொய் | 150 | 100 | 100 | 100 |
| பாலை | 200 | 200 | 200 | 300 |
| வாளை | 150 | 300 | 500 | 200 |



# அத்திப் பழத்திலுள்ள நன்மைகள்

ஓர் உலர்ந்த அத்திப்பழமானது அன்றாடம் தேவைப்படும் கால்சியத்தில் 3 சதவீதத்தை வழங்குகிறது. இதைத் தினமும் உட்கொண்டு வந்தால், எலும்புகள் வலிமையுடன் இருக்கும்.

3 துண்டு உலர்ந்த அத்திப்பழத்தில் 5 கிராம் நார்ச்சத்து உள்ளது. இது அன்றாடம் தேவைப்படும் நார்ச்சத்துக்களின் அளவுகளில் 20 சதவீதத்தைத் தருகிறது. எனவே இவற்றைத் தினமும் காலையில் உட்கொண்டுவந்தால், செரிமானம் மேம்படுவதோடு, மலச்சிக்கல் பிரச்சினையும் நீங்கிவிடும்.

உலர்ந்த அத்திப்பழத்தில் இரும்புச்சத்து உள்ளது. அதிலும் ஓர் உலர்ந்த அத்திப்பழத்தின் அன்றாடம் தேவைப்படும் இரும்புச்சத்தில் 2% கிடைக்கிறது. உடலில் ஹீமோகுளோபினை எடுத்து செல்வதற்கு இரும்புச்சத்து மிகவும் இன்றியமையாதது.

அத்திப்பழத்தில் நார்ச்சத்துக்கள் அதிகம் மட்டுமின்றி, கலோரிகள் குறைவு. ஒரு துண்டு உலர்ந்த அத்திப்பழத்தில் 47 கலோரிகள் உள்ளன. மற்றும் 0.2 கிராம் கொழுப்புக்கள் உள்ளது. எனவே எடையைக் குறைக்க நினைப்போர் இதை உட்கொள்வது நல்லது.

தினமும் அத்திப்பழத்தைக் காலையில் சாப்பிட்டுவந்தால், அழகான மற்றும் மென்மையான சருமம் கிடைப்பதோடு, இளமையையும் தக்க வைக்கலாம்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 80 | 70 | 120 | 100 |
| முள்ளங்கி | 80 | 50 | 80 | 120 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 |
| பயிற்றை | 100 | 90 | 120 | 100 |
| பாகல் | 160 | 180 | 120 | 170 |
| க.கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 120 | 100 | 110 |
| சி.வெங்காயம் | 100 | 80 | 120 | 110 |
| பூசணி | 50 | 80 | 60 | 60 |
| தக்காளி | 100 | 100 | 60 | 120 |
| வாழைக்காய் | 70 | 100 | 100 | 80 |
| கீரை | 20 | 30 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 35 | 40 |
| ப.மிளகாய் | 120 | 160 | 140 | 180 |
| புடோல் | 110 | 80 | 80 | 100 |
| கோவா | 150 | 100 | 140 | 160 |
| வெண்டி | 100 | 80 | 60 | 80 |
| போஞ்சி | 120 | 200 | 180 | 250 |
| லீக்ஸ் | 150 | 120 | 120 | 180 |
| தேங்காய் | 70 | 50 | 70 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 70 | 60 | 60 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 15 | 20 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 | 120 |
| கரட் | 280 | 350 | 180 | 180 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 60 | 80 |

### மிக...

அன்டோனி கிர்பட் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் தன்னிச்சையாக தடுத்து வைத்தல் தொடர்பான ஐ.நா. செயற்குழுவின் அறிக்கையை நாங்கள் வரவேற்கின்றோம். அதன் பரிந்துரைகளையும் வரவேற்கின்றோம். இலங்கையில் சிறுபான்மை மக்களின் சுதந்திரம் இழப்பு மற்றும் அநீதிகள் தொடர்பில் ஆராயுமாறு நாம் ஐ.நா. செயற்குழுவை வலியுறுத்துகின்றோம்.

பயங்கரவாதத் தடைச்சட்டமானது இலங்கையில் மோசமான மனித உரிமை மீறல்களுக்குத் துணைபோயிருக்கின்றது. தமிழ் மக்களுக்கு எதிராக இந்த சட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இதன் ஊடாகத் தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுத்து வைத்தல்கள் இடம்பெற்றுள்ளன. சித்திரவதைகள் இடம்பெற்றுள்ளன. சட்டத்தரணி இன்றி பாதிக்கப்பட்டவரின் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படுகின்றது. இது அச்சுறுத்தலையும் சித்திரவதையும் அதிகரிக்கின்றது. அதுமட்டுமன்றி பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மாற்றும் செயற்பாடு தேங்கிக்கிடக்கின்றமை தொடர்பாக நாம் கவலையடைகின்றோம். பொறுப்புக்கூறல் மற்றும் அநீதிக்ளை தடுப்பதற்காக சட்டமறுசீரமைப்பை நாங்கள் வலியுறுத்துகின்றோம். சித்திரவதைகள் தொடர்பாக உடனடியாக விசாரணைகள் நடத்துமாறு அரசை வலியுறுத்துகின்றோம்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இடம்பெறுகின்ற கைதுகளை ஒவ்வொன்றான ஆராய்ந்து பார்க்குமாறு நாம் கோருகின்றோம். சாவுத் தண்டனை விவகாரம் தொடர்பில் இலங்கை அரச தலைவரின் அண்மைய அறிவித்தல் குறித்து நாம் கரிசனை செலுத்தியுள்ளோம். நாம் இந்த விடயத்தில் ஜெனிவா தீர்மானத்தைக் கவனத்தில் கொண்டு மனித உரிமைகளை மதிக்குமாறு அரசைக் கோருகின்றோம் என்றார். (உ5.61)

### பன்னாட்டு...

கொழும்பு, செப். 13

பயங்கரவாத தடைச்சட்டத்தை உடனடியாக நீக்குமாறு அரசைக் கோருகின்றோம். மேலும் அதற்குப் பதிலாக கொண்டுவரப்படும் புதிய சட்ட வரைவானது பன்னாட்டுத் தரங்களுக்கு அமைய இருக்கவேண்டும் என்று தன்னிச்சையாக தடுத்துவைத்தல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயற்குழு ஜெனிவா மனித உரிமைகள் சபையில் நேற்றுத் தெரிவித்தது.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 39 ஆவது கூட்டத் தொடரின் நேற்றைய அமர்வில் இலங்கைப் பயணம் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே த்ன்னிச்சையாக தடுத்துவைத்தல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயற்குழு பிரதிநிதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2017ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நாங்கள் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு நிலமைகளை ஆராய்ந்தோம். கொழும்பு, நீர்கொழும்பு, வவுனியா, அநுராதபுரம், திருமலை மற்றும் பொலன்னறுவை ஆகிய பகுதிகளுக்கு எமது செயற்குழு பயணம் மேற்கொண்டது.

பொலிஸ் நிலையங்கள், சிறைச்சாலைகள், இராணுவ மற்றும் கடற்படை முகாம்கள், மகளிர் மற்றும் முதியோருக்கான இல்லங்கள் போன்ற 30க்கு மேற்பட்ட இல்லங்களுக்கு எமது குழு பயணம் மேற்கொண்டது. இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் ஆரோக்கியமான மாற்றங்கள் தொடர்பில் எமது செயற்குழுவிற்கு அறிவிக்கப்பட்டது. எப்படியிருப்பினும் இலங்கையின் குற்றவியல் நீதிக்கட்டமைப்பின் சில சிக்கல்களை எமது செயற்குழு அடையாளம் கண்டது. குறிப்பாக தடுத்து வைத்தல் தொடர்பான விடயங்களைக் கண்டறிந்தோம்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இடம்பெறும் கைதுகள் குறைந்துள்ள நிலையிலும் இந்தச் சட்டம் பல கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. உடனடியாக இந்தச் சட்டத்தை நீக்குமாறு அரசைக் கோருகின்றோம். அதற்குப் பதிலாக கொண்டுவரப்படும் புதிய சட்டவரைவானது பன்னாட்டுத் தரங்களுக்கு அமைய இருக்கவேண்டும்.

அதுமட்டுமன்றி தற்போது இந்தச் சட்டத்தின் கீழ் கைதுகள் இடம்பெறுமாயின் அதுதொடர்பில் தேசிய மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

இலங்கையில் 18 வயதுக் குறைந்த 14 ஆயிரம் சிறுவர் மற்றும் சிறுமியர்கள் 371 சிறுவர் காப்பகங்களில் தமது சுதந்திரத்தை இழந்து இருக்கின்றனர். அவற்றில் 33 நிலையங்கள் மட்டுமே அரசினால் இயக்கப்படுகின்றன. இலங்கையின் சட்ட கட்டமைப்பானது சிறுவர்கள் விடயத்தில் பன்னாட்டு நியமங்களைக் கொண்டிருக்கவில்லை எனத் தெரிகிறது என்றார். (5.61)

### வாள்வெட்டுக்...

இளைஞனையும் இழுத்துக் கொண்டு வாள்வெட்டுக் குழுவினர் தப்பி ஓடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் புதுக் குடியிருப்பு மருதமடுக்குள வீதி கைவேலியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது,

இரண்டு உந்துருளிகளில் 6பேர் கொண்ட வாள்வெட்டுக் குழுவினர் வீடு புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். வீட்டில் நின்றிருந்த 21 வயது பெண் பிள்ளை மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வீட்டிலிருந்த குடும்பத் தலைவர் மற்றும் அவரது மனைவி, மகன் மீதும் வாள்வெட்டுக் குழுவினர் சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

வாள்வெட்டுக் குழுவினரின் தாக்குதல் தீவிரமடைந்திருந்த நிலையில், குடும்பத் தலைவர் வீட்டிலிருந்த கட்டுத்துவக்கை எடுத்து வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த இளைஞன் மீது சுட்டுள்ளார். அவரது இடதுபக்க நெஞ்சில் குண்டு தாக்கியுள்ளது.

இந்தத் தாக்குதலை சற்றும் எதிர்பார்க்காத வாள்வெட்டுக் குழுவினர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர். குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான இளைஞனையும் இழுத்துச் சென்றுள்ளனர். புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் வாசலில் குண்டடிபட்ட இளைஞனை போட்டுவிட்டு ஏனையோர் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் குடும்பத் தலைவரான செல்வகுமார் (வயது45), அவரது மனைவியான குசேலகுமாரி (வயது 43), மகன் செ.கோபிநாத், மகள் ஆகியோர் காயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தந்தை மற்றும் மகன் இருவரும் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர். குண்டுத் தாக்குதலில் காயமடைந்த கோம்பாவில் 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தி.கபிலன் (வயது22) புதுக்குடியிருப்பு மருத்துவமனையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் மேலும் இருவரைக் கைது செய்துள்ளதாகவும், காதல் விவகாரம் தாக்குதலுக்கு காரணம் என்று தமது முதல்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(5.105.ரி3)

















## மரண அறிவித்தல்



### செல்வராசா வாசுதேவன்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை நிரந்தர வசிப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா வாசுதேவன் நேற்று (12.09.2018) புதன் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2018) வியாழக் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

20/39, வைரவர் கோவில் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
077 987 3916

## எப்போதும்...

யத் தலைமை அமைச்சர் நரேந்திரமோடி தனக்கு உறுதியளித்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கை நாடாளுமன்றக் குழுவினர் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர். இந்தக் குழுவில் இரா. சம்பந்தனும். இடம்பெற்றிருந்தார். கடந்த திங்கட் கிழமை, இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியை இந்தக் குழுவினர் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர்.

சந்திப்புக்களை முடித்துக்கொண்டு நேற்று நாடு திரும்பிய எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம் சந்திப்புத் தொடர்பில் 'உதயன்' வினவியது.

அவர் உதயனுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில், இந்தியத் தலைமை அமைச்சருடனான சந்திப்பில் பல விடயங்கள் குறித்துப் பேசினோம். அதில் அரசியல் தீர்வு தொடர்பில் நான் அதிகம் பேசினேன்.

ஆங்கிலேயரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இலங்கையில் தொடரும் இனப் பிரச்சினைக்கு இன்னமும் அரசியல் தீர்வு கிடைக்கவில்லை. இனப் பிரச்சினை இனிமேலும் தொடரக் கூடாது. 70 ஆண்டுகளில் சுமார் 30 ஆண்டுகள் ஆயுதப் போராட்டம் நடைபெற்றது. இனப் பிரச்சினையால்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிலமைக்குத் தள்ளப்பட்டார்கள். இதன்போது மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள், பேச்சுகள் மூலம் மட்டுமே காலத்தை இழுத்தடித்தன. இதனால் அரசியல் தீர்வு எட்டாக்கனியாகவே இருந்தது. 30ஆண்டு கால ஆயுதப் போரால், எமது வடக்கு கிழக்கு மாகாணங்கள் சின்னாபின்னமாக்கப்பட்டன. தமிழர் தாயகம் அரச படைகளின் தாக்குதல்களினால் பேரழிவைச் சந்தித்தன. பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். ஆயிரக் கணக்கானவர்கள் அங்கவீனமாக்கப்பட்டார்கள். பலர் காணாமல் ஆக்கப்பட்டனர். போர் முடிவுக்கு வந்து 9 ஆண்டுகள் நிறைவடைந்த போதிலும், இன்னமும் தீர்வு கிடைக்கவில்லை. அபிவிருத்தி மாத்திரம் ஓரளவு இடம்பெற்று வருகின்றது. போரால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்வதில் இந்திய அரசு பெரும் உதவிகளை வழங்கி வருகின்றது. அதற்கு நன்றிகளைக் கூறுகின்றோம். அபிவிருத்தி நடவடிக்கைகள் மாத்திரம் இடம்பெற்றாலும் தீர்வைப் பெறும் முயற்சியில் தற்போதைய அரசு ஈடுபடுகின்றது என்பதைச் சொல்லி வைக்க விரும்புகின்றோம். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு இந்த முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது.

இதற்கு நாம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கி வருகின்றோம். எனினும் இனவாதிகள் இதனைக் குழப்பியடிக்க முயற்சிக்கின்றனர். புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான யோசனைகளை முன்வைப்பதற்கு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வழிநடத்தல் குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவில் நாமும் இடம்பெற்றுள்ளோம். தீர்வுக்கான தமிழ் மக்களின் நிலைப்பாடுகளை கூட்டமைப்பு சமர்ப்பித்துள்ளது. வழிநடத்தல் குழுவானது இடைக்கால அறிக்கையை அரசமைப்பு நிர்ணய சபைக்கு சமர்ப்பித்துள்ளது. இதன் பின்னர் வழிநடத்தல் குழுவுக்கு ஆலோசனை வழங்கும் வகையில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவானது சமர்பித்துள்ள அரசமைப்புக்கான நகல் வரைவு, திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமல் அரசியல் நிர்ணய சபையான நாடாளுமன்றத்துக்குச் சமர்பிப்பதற்கு இறுதியாக நடைபெற்ற வழிநடத்தல் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்பு உருவாகும் என்ற நம்பிக்கை எங்களிடம் இருக்கின்றது. எனினும் இந்த விடயத்தில் இலங்கை அரசுக்கு இந்தியா உள்பட பன்னாட்டுச் சமூகம் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கவேண்டும். அரசியல் தீர்வு விடயத்தில் இந்திய அரசு அதிக அக்கறை செலுத்த வேண்டும். வடக்கு கிழக்கு மக்கள் இந்தியாவை நம்பிக் கொண்டிருக்கின்றார்கள். நீங்கள் எங்களைக் கைவிடமாட்டீர்கள் என்ற நம்பிக்கை இன்னமும் இருக்கின்றது. புதிய அரசமைப்பில் நிரந்தர அரசியல் தீர்வையே எதிர்பார்க்கின்றோம். அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் அந்தத் தீர்வு அமையவேண்டும். அதாவது இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் புதிய அரசமைப்பு அமையவேண்டும். புதிய அரசமைப்பு முயற்சி தோல்வியடைந்தால் நாட்டில் மீண்டும் மோதல் ஏற்பட வாய்ப்புண்டு. இதைத் தவிர்க்க முடியாது. தடுக்கவும் முடியாது. எனவே தீர்வு விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த விடயத்தில் நாங்கள் உங்களை தொல்லைப்படுத்துகின்றோம் என்று நினைக்க வேண்டாம். நீங்கள் தலைமை அமைச்சராகப் பதவியேற்றவுடன் எனது தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குழு இங்கு வந்து உங்களை நேரில் சந்தித்தபோதும், அரசியல் தீர்வு விடயம் தொடர்பிலேயே அதிகம் பேசினோம். அதன் பின்னர் நீங்கள் இலங்கைக்கு இரு தடவைகள் வந்தபோதும், அரசியல் தீர்வு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தோம் என்று சொன்னேன்.

இதற்குப் பதிலளித்த இந்தியத் தலைமை அமைச்சர், இலங்கை எமது அயல்நாடு. அங்கு மீண்டும் போர் ஏற்படுவதற்கு இடமளிக்கமாட்டோம். எம்மை நம்புங்கள். நாம் எப்போதும் உங்களுடனேயே இருப்போம். இலங்கை அரசு காலதாமதமின்றி அரசியல் தீர்வைக் காணவேண்டும். இதில் இந்திய அரசு உறுதியாக உள்ளது. நான் தலைமை அமைச்சராகப் பதவியேற்று பின்னர் இரு தடவைகள் இலங்கைக்கு வந்தபோதும், அரச தலைவர் தலைமை அமைச்சரிடம், இதனை எடுத்துக் கூறியிருந்தேன். எனவே இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை இலங்கை உடன் காணவேண்டும். இலங்கையிலுள்ள அனைத்து மக்களும், ஒற்றுமையாக சமாதானமாக வாழவேண்டும். அதற்கான வழியை இலங்கை அரசு ஏற்படுத்த வேண்டும் என்று பதிலளித்தார். (5)




## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 11 . 09 . 1936 — மறைவு 06 . 08 . 2018

### அமரர் முருகன் கணபதிப்பிள்ளை (பப்பர்)

கடந்த 06.08.2018 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.09.2018) வியாழக் கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 15.09.2018 சனிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.
தொ.பே: 076 180 4608

மனைவி, மகள்,
பேரப்பிள்ளைகள்.

### கீத் நொயார் விவகாரம்

# கோத்தாவிடம் மூன்றரை மணி நேரம் விசாரணை

கொழும்பு, செப். 13

ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டு சட்ட விரோதமாக தடுத்து வைக்கப்பட்டமை, சித்திரவதை செய்யப்பட்டமை, ஆயுதத்தால் தாக்கப்பட்டமை, கொலை செய்ய முயற்சிக்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவு நேற்று சிறப்பு விசாரணைகளை முன்னெடுத்தது.

நேற்று முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 1.40 மணி வரை விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. கீத் நொயார் விவகாரத்தில், 8 ஆவது சந்தேக நபரான முன்னாள் இராணுவ புலனாய்வுப் பணிப்பாளர் மேஜர் ஜெனரால் அமல் கருணாசேகர குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கொடுத்த இறுதி வாக்கு மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை மையப்படுத்தி இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மறைமுக பொறுப்புக் கூறல் காரணிகள் குறித்து இந்த விசாரணைகளில் அவதானம் செலுத்தப்பட்டதாகவும், அதன் படி அமல் கருணாசேகர கோத்தபாய ஆகிய இருவரினதும் வாக்குமூலங்களை மையப்படுத்தி மிக விரைவில் முன்னாள் இராணுவ தளபதியும் தற்போதைய அமைச்சருமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவிடம் விசாரணை நடாத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (5.71)

---

## மூதாட்டி...

யபபட்டுள்ளது. நேற்று இரவு இரண்டு மணியளவில் வீட்டின் கூரையைப் பிரித்து உள் நுழைந்த திருடர்கள் வீட்டில் இருந்த நகை, பணம், தொலைபேசி என்பவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளனர். 82 வயது மதிக்க தக்க மூதாட்டியும் அவரது சகோதரியும் வீட்டில் உறக்கத்தில் இருந்த வேளை இந்த திருட்டு நடைபெற்றுள்ளது. (உ- 726)

## திரைப்படப்...

கும் மேற்பட்ட இளைஞர்களைக் கொண்ட கும்பல் ஆவேசமாகக் கத்திக் கொண்டும் சந்தையில் இருந்தவர்களை கத்தி, பொல்லுகளைக் காட்டி மிரட்டிக்கொண்டும் மற்றொரு குழுவினரைத் தேடியது. எதிர்ப்பட்டவர்கள் எல்லோரையும் மிரட்டிய குழுவினர் சந்தையில் இருந்தவர்களைத் தாக்கவும் செய்தனர்.

ஒரு கட்டத்தில் இரு குழுக்களும் சந்தையில் நேருக்கு நேர் சந்தித்து மோதலில் ஈடுபட்டன. ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டது மட்டுமல்லாமல் சந்தையில் வியாபாரம் செய்தவர்களையும் வாடிக்கையாளர்களையும் தாக்கியுள்ளனர்.

பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் வழங்கப்பட்டபோதும் பொலிஸார் 35 நிமிடங்களின் பின்னரே சம்பவ இடத்துக்கு வந்தனர். அதற்கிடையில் மோதலில் ஈடுபட்ட குழுவினர் தப்பிச் சென்றிருந்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் இருவரைக் கைது செய்தனர். அவர்களிலல் ஒருவருக்குத் தலையில் கடுமையான காயம் ஏற்பட்டிருந்தது. அவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் மேதிலக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ-7,21,4,105)

## ஆண்...

யாகளின் தங்கும் விடுதியிலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் மனித எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட எலும்புக்கூடு வயது முதிர்ந்த ஆணுடையதாக இருக்கலாம் என்றும், ஒன்றரை மாதத்துக்கு முன்னர் அதற்குரிய நபர் உயிரிழந்திருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

தொடருந்து ஊழியர்கள் தங்கும் விடுதியைச் சுற்றியுள்ள பகுதிகள் நேற்றுத் துப்புரவு செய்யப்பட்டபோது இந்த எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது. விடுதியிலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் எலும்புக் கூடு காணப்பட்டுள்ளது. தகவல் காங்கேசன்துறைப் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. பொலிஸார் அந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டு அடையாளப்படுத்தினர்.

மாலை 4 மணியளவில் மல்லாகம் நீதிவான், எலும்புக் கூட்டை நேரில் சென்று பார்வையிட்டார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி எலும்புக்கூட்டைச் சோதனை நடவடிக்கைகளுக்காக மீட்டுச் சென்றார்.

எலும்புக் கூடு மீட்கப்பட்ட பகுதிக்குச் செல்வதற்கான பாதைகள் எதுவும் இல்லை. அந்தப் பகுதி முழுவதும் பற்றைகளால் சூழப்பட்டுள்ளது. எலும்புக் கூட்டுக்கு அருகிலிருந்து மைலோ மற்றும் பிஸ்கெட் பக்கெட்டுகள் மீட்கப்பட்டன. (உ-5.26)

## பட்டப்பகலில்...

வாயிலுக்கு வெகு அருகில் வைத்து நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று கோப்பாய் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. பட்டப்பகலில் இந்தக் கொள்ளை இடம்பெற்றது. கலாசாலையில் முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றும் பெண் கடமைக்கு வந்துகொண்டிருந்தபோது, அவரின் பின்புறமாக மோட்டார் சைக்களில் வந்தவர்கள் அவரது தாலிக்கொடியை அறுத்துக் கொள்ளையிட்டுக்கொண்டு தப்பிச் சென்றுவிட்டனர் என்று முறையிடப்பட்டுள்ளது. (உ-11)

## அரச...

உள்ளார். கட்சியும் கூட்டணியும் யாரை நியமிப்பது என்பதைத் தீர்மானிக்க வேண்டும். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள மகிந்த ராஜபக்ச, இந்து ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

**கேள்வி**: 2015ஆம் ஆண்டு எதிர்கட்சிகள் மாத்திரம் உங்களிற்கு எதிராக அணிதிரளவில்லை. உங்கள் அரசின் காலத்தில் தமிழ் மக்கள் முஸ்லிம் சிறுபான்மை இனத்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர். அவர்கள் உங்களிற்கு மீண்டும் வாக்களிப்பார்கள் என்று நீங்கள் கருதுகின்றீர்களா?

**பதில்:** இந்த அரசு செய்த தவறுகளை அவர்கள் புரிந்து கொண்டுள்ளார்கள் என்று நான் கருதுகின்றேன். 2014ஆம் ஆண்டு இடம்பெற்ற முஸ்லிம்களிற்கு எதிரான வன்முறைக்கு காரணமான அமைச்சர் தற்போது அரசில் உள்ளார்.

நாங்கள் அரசிலிருந்தவேளை அழிக்கப்பட்ட வீடுகளை மீளக் கட்டிக்கொடுத்தோம்.

ஆனால் இந்த ஆண்டு கண்டி வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு எதனையும் செய்யவில்லை.

கண்டி வன்முறைகள் ஆரம்பமானவேளை நான் அந்தப் பகுதிக்கு உடனடியாக சென்று அனைத்துச் சமூகத்தை சேர்ந்தவர்களின் கூட்டத்தை கூட்டினேன். அரச தலைவரும், தலைமை அமைச்சரும் பின்னரே வந்தனர்.

**கேள்வி:** நீங்கள் சிறுபான்மை மக்கள் பாதுகாப்பாக உணராத சிங்கள பௌத்த பலம்பொருந்திய பெரும்பான்மையை பிரதிநித்துவம் செய்கின்றீர்கள் என்ற கருத்து காணப்படுகின்றதே?

**பதில்:** 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தலில் நாங்கள் 72 சதவீத வாக்குகளை பெற்றோம். ஆகவே அநேக மக்கள் எங்களுடன் உள்ளனர் என்று நான் கருதுகின்றேன். இது எங்கள் எதிராளிகள் பரப்பும் பொய். மக்கள் மத்தியில் இவ்வாறான உணர்வு இல்லை என்று நான் கருதுகின்றேன்.

**கேள்வி:** விடுதலைப் புலிகளிற்கு எதிரான போரில் உங்கள் பங்களிப்பு என்ன? மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் காணப்படுகின்றனவே? பத்திரிகையாளர் ஒருவர் சித்திரவதை செய்யப்பட்டமை தொடர்பில் நீங்கள் சமீபத்தில் விசாரிக்கப்பட்டீர்கள்? இந்த விடயங்கள் என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்?

**பதில்:** இவைகள் பிரச்சினைகளாகயிருக்கும் என்று நான் கருதவில்லை. இந்தக் குற்றச்சாட்டுகள் என்னை துன்புறுத்துவதற்கானவை என்பது மக்களிற்கு தெரியும்.

முன்னர் என்னுடைய அரசிலிருந்த தற்போதைய அரசில் இடம்பெற்றிருப்பவர்கள் குறித்து ஏன் குற்றச்சாட்டுகள் இல்லை?

இந்த வழக்குகளில் காணப்படும் ஆதாரங்கள் வலுவற்றவை இன்றுவரை நிரூபிக்கப்படாதவை.

பன்னாட்டு மனித உரிமை அமைப்புகளை பொறுத்தவரை அவர்கள் என் மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கட்டும் எனக்கு மறைப்பதற்கு எதுவுமில்லை.

பயங்கரவாத அமைப்பான விடுதலைப்புலிகளை நாங்கள் எங்களிற்காக மாத்திரம் தோற்கடிக்கவில்லை. ஒரு சமூகத்திற்காக ஒரு நாட்டிற்காக மாத்திரம் நாங்கள் அவர்களை தோற்கடிக்கவில்லை. அவர்கள் ராஜீவ்காந்தியை கொலை செய்தார்கள். வேறு நாடுகளில் ஏனைய பயங்கரவாத அமைப்புகளுடன் இணைந்து செயற்பட்டனர். உலகிற்கு அவர்கள் தற்கொலை அங்கிகளை அறிமுகப்படுத்தினர். இதன் காரணமாக அவர்களை தோற்கடித்ததன் மூலம் பல நாடுகளிற்கு உதவியுள்ளோம்.

**கேள்வி**: நீங்கள் 2019ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கு தலைமை தாங்குவீர்களா? 19ஆவது திருத்தம் இரண்டு தடவைக்கு மேல் போட்டியிடுவதற்கு தடை விதித்துள்ளதே?

**பதில்:** நான் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்குத் தலைமை தலைமை தாங்குவேன். அரசமைப்பு திருத்தம் அவ்வாறு தெரிவிக்கின்ற போதிலும் நான் போட்டியிடலாம் என்ற கருத்து காணப்படுகின்றது. நீதிமன்றத்தில் இதனை எதிர்கொள்ளவேண்டும். ஆனால் நான் அந்த ஆபத்தை எதிர்கொள்ளவேண்டுமா என்பது குறித்து சிந்திக்கவேண்டும். அனைவரும் ஏற்கத்தக்க மற்றொரு வேட்பாளரை நியமிப்பதே இன்னொரு சாத்தியப்பாடாகும்.

**கேள்வி:** அவ்வாறு நியமிக்கப்படுபவர் உங்கள் குடும்பத்தை சேர்ந்தவராகயிருப்பாரா அல்லது வெளியிலிருந்து யாரையாவது நியமிப்பீர்களா?

**பதில்:** அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கான வயதை 35 ஆக உயர்த்தியுள்ளதால் எனது மகன் தேர்தலில் போட்டியிட முடியாது. எனது சகோதரர் நிச்சயமாக போட்டியாளர்களில் ஒருவராக உள்ளார். ஆனால் கட்சியும் கூட்டணியும் யாரை நியமிப்பது என்பதை தீர்மானிக்கவேண்டும். (5)

(தொடர்புடைய மற்றொரு செய்தி 11ஆம் பக்கம்)

## மின்சாரம்...

பரிதாபமாகச் சாவடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 10 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது, உயிரிழந்த இளைஞன், இயந்திரம் ஊடாக கல்லுடைக்கும் வேலை செய்து வருகிறார். இளைஞன் தனது வீட்டுக் கிணற்றை ஆழப்படுத்தும் முயற்சியில் நேற்று ஈடுபட்டுள்ளார். கிணற்றினுள் இறங்கி நிதர்சனும் மற்றொரு இளைஞனும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கல்லுடைக்கும் இயந்திரத்துக்கு மின் வழங்கும் வயரில் மின்ஒழுக்கு ஏற்பட்டு சுதர்சன் தாக்கப்பட்டுள்ளார். உடனடியாக மற்றைய இளைஞன் அருகில் இருந்தோரையும் அழைத்து, சுதர்சனை கிணற்றிலிருந்து மேலே தூக்கி வந்துள்ளனர். உடனடியாக முச்சக்கர வண்டியில் வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்துள்ளார் - என்றனர். (5.110)

## பொலிஸ்...

கிழமை கொடிகாமம் பொலிஸாரின் வாகனத்தைக் கடத்திய சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். அவருடன் மேலும் 6பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரு குழுக்களுக்கு இடையில் மோதல் இடம்பெறுவதாக 119 அவசர பொலிஸ் இலக்கத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றனர். மோதலில் ஈடுபட்ட குழுக்களை கைது செய்ய முற்பட்டபோது, பொலிஸாரின் வாகனத்தை அங்கிருந்த ஒருவர் எடுத்துக் கொண்டு தப்பி ஓடியுள்ளார்.

இந்தத் தகவல் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டது. சம்பவம் இடம்பெற்ற பகுதியில் மேலதிக பொலிஸார் குவிக்கப்பட்டனர். சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. வாகனம் நேற்றுமுன்தினம் இரவு மீட்கப்பட்டது. கடத்திச் சென்ற நபரைத் தேடும் நடவடிக்கைள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. பல பொலிஸ் குழுக்கள் அங்கு களமிறக்கப்பட்டு சுற்றிவளைப்பும் மேற்கொள்ளப்பட்டது. வாகனத்தைக் கடத்திச் சென்ற சந்தேக நபரைப் பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்தனர்.

மேலும் குழு மோதலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களுக்கும் மணல் கடத்தலுக்கும் தொடர்பு இருப்பதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேகநபர்களை நேற்று இரவு நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (5.8.26.159.9)

## வடக்கு...

அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் நேற்றுச் சந்திப்புக்களை மேற்கொண்டபோதும் எந்தவொரு முடிவும் எட்டப்படவில்லை.

இதேவேளை, இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்ப்பதற்கு அவைத் தலைவர் முன்வைத்துள்ள யோசனையிலும் புதியதொரு சிக்கல் எழுந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

வடக்கு அமைச்சரவையிலுள்ளவர்கள் அனைவரும் பதவி விலகுவதாகத் தெரிவித்து ஆளுநருக்கு முதலமைச்சர் கடிதம் அனுப்புவது என்றும் பின்னர் புதிய அமைச்சரவையை முதலமைச்சர் அறிவிப்பதன் ஊடாக அமைச்சரவை பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்று அவைத் தலைவர் யோசனை முன்வைத்திருந்தார்.

ஆனால், வழக்குத் தாக்கல் செய்த பா.டெனீஸ்வரன், நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளையின் அடிப்படையில் பதவியேற்ற பின்னரே அவரை நீக்க முடியும். அதற்கு மாறாக சகல அமைச்சர்களும் பதவி விலகுவதாகக் கொடுக்கும் கடிதத்தின் ஊடாக செயற்படுத்த முடியாது. அவைத் தலைவர் முன்வைத்த யோசனையில் இதுவே புதிதாக எழுந்துள்ள சிக்கலாகும்.

வடக்கு மாகாண முதலமைச்சர் பணியகத்தில், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் நேற்று நேரில் சந்தித்துக் கலந்துரையாடினர். வடக்கு மாகாண ஆளுநருக்கு கடந்த ஆண்டு தான் வழங்கிய கடிதத்தை ஆளுநர் அரசிதழில் பிரசுரித்தால் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று முதலமைச்சர் திரும்பத் திரும்பக் கூறிவந்திருந்தார். ஆனால் அந்த நிலைப்பாட்டிலிருந்து நெகிழ்வுத் தன்மையுடன் செயற்பட முதலமைச்சர் நேற்று இணங்கியுள்ளார். மேலும் வடக்கு மாகாண ஆளுநரும், சட்டரீதியான எந்த முயற்சிக்கும் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஆனாலும், அவைத் தலைவர் முன்வைத்த யோசனையில் எழுந்துள்ள புதிய சிக்கல் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு இன்னமும் தெரியப்படுத்தப்படவில்லை. அதனை அவர் ஏற்றுக் கொண்டாலே, வடக்கு அமைச்சரவை பிரச்சினை தீர்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (5)

## வாக்குறுதிகள்...

சபையின் 39 ஆவது கூட்டத்தொடரில் உறுப்பு நாடுகளால் தெரிவிக்கப்பட்டது. .

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தேசிய நல்லிணக்க செயற்பாட்டுத் திட்டம் மற்றும் சமாதான முயற்சி முன்னுரிமைத் திட்டம் என்பவற்றை வரவேற்கின்றோம். எனினும், சில விடயங்கள் தொடர்ந்தும் காலதாமதம் ஆகின்றதது இது நல்லிக்கணத்திற்கு பாதிப்பாக அமையும்.

முறையான தலைமைத்துவமும் காலவரையறையுடனான செயற்பாட்டுத் திட்டமும் வகுக்கப்படுமாக இருந்தால், இலங்கை ஐ.நாவிற்கு வழங்கிய வாக்குறுதிகளை அமுல்படுத்துவதற்கு இலகுவாக அமையும். இதன் மூலம் நல்லிணக்கமும் சமாதானமும் உருவாகிய நாடாக இலங்கை மாற்றமடையும் என்று தெரிவிக்கப்பட்டது. தன்னிச்சையான தடுத்து வைப்பு பற்றிய ஐ.நா. செயற்பாட்டுக்குழுவின் இலங்கை தொடர்பிலான அறிக்கையும் இந்த கூட்டத்தொடரில் முன்வைக்கப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குற்றவியல் நீதி முறையில் உள்ள சில குறைபாடுகள் காரணமாக, குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகுவோர், தன்னிச்சையாகத் தடுத்து வைப்புகளுக்கு உள்ளாகும் அபாயமான நிலை உள்ளது. பொலிஸாரின் விசாரணைத் திறனில் உள்ள குறைபாடுகள், சட்ட மா அதிபர் திணைக்களம் மற்றும் நீதிமன்றத்தில் உள்ள வளப்பற்றாக்குறை உள்ளிட்ட பல காரணிகளால் வழக்குகள் பல ஆண்டுகள் தேங்கியுள்ளது.

பயங்கவரவாத தடைச்சட்டத்தின் கீழான கைதுகள் மற்றும் தன்னிச்சையான தடுத்து வைப்பு என்பன தற்போது இலங்கையில் குறைவடைந்துள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது. நியாயமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு பயங்கரவாத தடைச் சட்டத்தின் சரத்துக்கள் தடையாக அமைகின்றது என்றுள்ளது.

வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதை வரவேற்பதாக ஜேர்மன், மெஸிடோனியா, மொன்டெனேக்ரோ மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத் தொடரில் வரவேற்றனர். (உ-7)

## விக்னேஸ்வரா அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், செப். 13
புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## டயமன்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், செப். 13
வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணி வெற்றிபெற்றது.
சிதம்பராக் கல்லூரியில் நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பை ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## ஆதிசக்தி அணி போராடி வெற்றி

யாழ்ப்பாணம், செப். 13
வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். சேவியர் அணி வெற்றிபெற்றது.
சிதம்பராக் கல்லூரியில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சென். சேவியர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங் லயன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## மின்னொளி வென்றது

யாழ்ப்பாணம், செப். 13
கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விநாயகர் விளையாட்டுக் கழகம் தென்மராட்சி ரீதியாக நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மின்னொளி அணி வெற்றிபெற்றது.
விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கைதடி தெற்கு மின்னொளி விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து கைதடி கலைநகர் துர்க்கா விளையாட்டுக் கழக பி அணி மோதியது. 10:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைதடி தெற்கு மின்னொளி விளையாட்டுக் கழக ஏ அணி வெற்றிபெற்றது. (ம-23)

# ஆவரங்கால் மத்தி, இந்து இறுதியில் இன்று மோதல்





யாழ்ப்பாணம், செப். 13
சிறிமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 45ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது.
சிறிமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 13

**தாச்சித் தொடர்**

கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விநாயகர் விளையாட்டுக் கழகம் தென்மராட்சி ரீதியாக நடத்தும் தாச்சித் தொடரில் ஏ பிரிவு ஆட்டங்கள் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. ஆண்களுக்கான ஆட்டத்தில் வடக்கு செவின் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கச்சாய் கலைமகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**ஆதிசக்தி வி.கழக கால்பந்துத் தொடர்**

வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்ப்பாண மாவட்ட ரீதியிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சிதம்பராக் கல்லூரியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நக்கீரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட மென்பந்தாட்டத் துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் அண்மையில் இடம்பெற்றது. கிளிநொச்சி இந்து கல்லூரி அணி சம்பியனானது. அந்த அணிக்கு கல்லூரிச் சமூகத்தால் நேற்றுமுன்தினம் மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. (ம-23,159)




பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டக் கூடைப்பந்தாட்டத் தொடரில் 20 வயது பெண்கள் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கு கல்லூரிச் சமூகத்தால் நேற்று மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. (ம-23)

# செரீனாவை மோசமாகச் சித்தரித்து கேலிச் சித்திரம்

Mark Knight
@Knightcartoons

My toon in today's @theheraldsun on #SerenaWilliams @usopen




அமெரிக்கரென்னிஸ்வீராங்கனை செரீனா வில்லியம்ஸை கிண்டல் செய்தும் மிக மோசமாகச் சித்த ரித்தும் ஆஸ்திரேலிய நாளிதழொன்று கேலிச் சித்திரம் வெளியிட்டது. இதற்கு உலகெங்கும் இருந்து கண்டனங்கள் குவிந்து வருகின்றன.

பன்னாட்டு அந்தஸ்துபெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கப்பகிரங்கத்தொடர்நியூயோர்க் நகரில் நடைபெற்று சமீபத்தில் முடிவடைந்தது.

பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில்அமெரிக்கவீராங்கனை செரீனா வில்லி யம்ஸை எதிர்த்து ஜப்பானிய வீராங்கனை ஒசாகா மோதினார். ஒசாகாவெற்றிபெற்றுச் சம்பியனானார். இந்தஇறுதியாட்டத்தில் செரீனா இரண்டு தடவைகள் விதிமுறைமீறலில்ஈடுபட்டார்என்று நடுவர்குற்றம்சுமத்தினார். இதையடுத்துநடுவர்ஒசாகாவுக்குப்பெனால்டி வழங்கி உத்தரவிட்டார்.

இதையடுத்து நடுவருடன் செரீனா கடுமையாக வாக்குவாதத்தில் ஈடுபட்டார். நடுவரை பொய்யர், பித்தலாட்டக் காரர் என்றெல்லாம் திட்டினார். இந்த விவகாரம் பூதாகரமாக வெடித்தது. செரீனாவுக்கு கண்டனங்களும் அதேநேரம் ஆதரவுகளும் குவிந்தன.

ஆஸ்திரேலியாவில் இருந்து வெளிவரும் 'ஹெரால்டு சன்' நாளேட்டில் பணியாற்றும் மார்க் நைட் என்ற ஓவியர் செரீனாவை மோசமாகச் சித்தரித்து கேலிச் சித்திரம் ஒன்றை வெளியிட்டார். அதில் குண்டான தோற்றத்தில் செரீனா வில்லியம்ஸ் கோபத்தில் குதிப்பது போலவும் வரைந்திருந்தார்.

"செரீனா வில்லியம்ஸின் உருவத்தையும், அவர்சார்ந்திருக்கும்இனத்தையும் குறிப்பிடும்வகையில் படம் வரையப்பட்டுள்ளது" என்று எதிர்ப்பலை குவிந்துள்ளன. (ம)

# இங்கிலாந்து அணியிடம் வெற்றியை வழங்கினோம்

## கோக்லி புலம்பல்

"இங்கிலாந்து அணி மிகச் சிறப்பாக விளையாடவில்லை. நாம்தான் இங்கிலாந்து அணியிடம் வெற்றியைத் தரைவார்த்தோம்"என்றுதெரிவித்தார்இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி.

இங்கிலாந்துக்கு எதிராக நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்த ஐந்தாவது ஆட்டத்



தின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறுதெரிவித்தார்கோக்லி.

"இரு அணிகளுக்குமே வெற்றி என்பது தொடரில்சாத்தியமாகவே இருந்தசூழல்கள் அதிகம். இதனை நாம் அங்கீகரிக்க வேண்டும். ஆட்டங்களில் நாம் வெற்றி பெறக்கூடியவாய்ப்புக்கள்இருந்தபோது நாம் அதை மேலும் உறுதிப்படுத்தவில்லை. இந்தத்தொடரில்நாங்கள்தான் எங்கள் கைவசம் இருந்த வாய்ப்புக்களை அவர்களுக்கு விட்டுக்கொடுத்தோம். எங்களால் அவர்கள் மீது அழுத்தத்தைநீண்டநேரத்துக்குத்தக்கவைக்க முடியவில்லை" என்று கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)



# ஆஸி. டெஸ்ட் அணியில் ஐந்துவீரர்கள் அறிமுகம்

ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியில் ஐந்து வீரர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஆரோன் பின்ஞ்சும் ஒருவராக உள்ளார்.

ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் 7ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் ஐந்து வீரர்கள் புதிதாகச் சேர்க்கப்படவுள்ளனர். பின்ஞ், ட்ராவிஸ் ஹெட், நேசர், டாக்கெட், மார்னஸ் ஆகிய ஐவருமே அவ்வாறு டெஸ்ட் அணிக்காக அறிமுகமாகவுள்ளனர்.

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் அணிக்கான ஆஸ்திரேலிய அணிவிவரம்-டிம்பெய்ன்(தலைவர்), அஷ்டோன் அகர், பிரெண்டன் டாக்கெட், ஆரோன் பின்ஞ், டிராவிஸ் ஹெட், ஜோன் ஹோலண்ட், உஸ்மான் கவாஜா, மார்னஸ் லபுஸ்சாக்னே, நாதன்லையன், மிச்செல்மார்ஷ், ஷோன் மார்ஷ், மைக்கேல் நேசர், ரென்சோ, சிடில். (ம)

# அன்டர்சன் சாதனை

"பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் அதிகஇலக்குகளைக்கைப்பற்றிய வேகப்பந்து வீச்சாளர்" என்ற அடைவை நிலை நாட்டினார் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன்.

இந்தியாவுக்கு எதிராக நேற்று முன்தினம் முடிவுக்கு வந்த டெஸ்ட் ஆட்டத்தில் பும்ராவை வீழ்த்தியதை அடுத்தே அதிக இலக்குகளைக் கைப்பற்றிய வேகப்பந்து வீச்சாளர் என்ற அடைவை நிலைநாட்டினார் அன்டர்சன்.

ஆஸ்திரேலியஅணியின்முன்னாள் வீரர் மெக்ராத் 563 இலக்குகளைக் கைப்பற்றி அதிகஇலக்குகளைக்கைப்பற்றிய வீரர்களின் பட்டியலில் நான்காவதுஇடத்திலும், அதிக இலக்குகளைக் கைப்பற்றிய வேகப்பந்து வீச்சாளர்களின் பட்டியலில் முதலாவது இடத்திலும் இருந்தார். பும்ராவின் இலக்கை வீழ்த்தியதை அடுத்து மெக்ராத்தை பின்தள்ளினார் அன்டர்சன்.

அதிகஇலக்குகளைக்கைப்பற்றிய வீரர்களின் பட்டியலில் இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சாளர் முரளிதரன் 800 இலக்குகளுடன் முதலிடத்தில் உள்ளார். (ம)





# இலக்குகளைக் கைப்பற்ற அதிஸ்டமும் தேவைதான்

## சமி ஆதங்கம்

"இலக்குளைக்கைப்பற்றுவதற்குதிறமைமட்டுமல்லாமல்சிலநேரங்களில்அதிர்ஸ்டமும் தேவைப்படுகிறது" என்று தெரிவித்தார் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் சமி.

இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் சமி 30 பந்துப்பரிமாற்றங்கள்மட்டும்வீசி7 ஓட்டமற்றபந்துப்பரிமாற்றங்கள் உள்ளடங்கலாக72ஓட்டங்களைமட்டுமேவிட்டுக்கொடுத்தார். எனினும்இலக்குகள்எதையும் கைப்பற்றவில்லை. இதையடுத்தே இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் அவர்.

"என்னதான் சிறப்பாகப் பந்துவீசினாலும் இலக்குகளைக் கைப்பற்றுவதென்பது மிகப்பெரியதொருசவாலாகவே உள்ளது. பந்துவீச்சாளரின் முக்கிய இலக்கு சரியானஇடத்தில் பந்தை விழுத்துவதுதான். அதை தொடர்ந்து செய்தாலும் இலக்குகள் என்று வரும்போது அதிஸ்டமும் தேவைப்படுகிறது" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)



**மாடிக்கட்டடம் வாடகைக்கு**

யாழ்நகரின் மத்தியில் வங்கி, தனியார், அரச அலுவலகத் தேவைகளுக்கு உகந்த மூன்று மாடிக்கட்டடம் வாடகைக்கு விடப்படும்.

077 329 7462

**வீடு வாடகைக்கு**

வண்ணார்பண்ணை மேற்கு இல.104, சிவப்பிரகாசம் வீதியில் சிறிய குடும்பத்திற்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.

077 614 1373 (CS/18375)(13.17)



இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய ரீதியிலான கபடியில் 20 வயது ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் கிண்ணம் வென்ற நெல்லியடி மத்திய கல்லூரியின் மாணவர்கள் பாடசாலைச் சமூகத்தால் நேற்று மதிப்புறுத்தப்பட்டனர். (ம-422)

**FLC FRENCH LANGUAGE CENTRE**

**பிரெஞ்சு**

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 18.09.18 செவ். 3 pm.

181, பிரதான வீதி, நெல்லியடி.
0762 669 614
ஆரம்பம் :17.09.18 மாலை 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

## மூன்றாவது இடத்தைப் பிடித்தார் ஜோகோவிக்



பன்னாட்டு அந்தஸ்து பெற்ற பகிரங்கத் தொடர்களில் ஒன்றான அமெரிக்கப் பகிரங்கத் தொடரைக் கைப்பற்றியதை அடுத்து தரப்படுத்தலில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறினார் சேர்பிய வீரரான நொவக் ஜோகோவிக்.

அமெரிக்கத் தொடர் ஜோகோவிக்குக்கு மூன்று இடங்களை முன்னேற்றமடையச் செய்துள்ளது. எனினும் தரப்படுத்தலில் அசைக்க முடியாத ஆதிக்கத்துடன் நடால் முதலிடத்தில் உள்ளார். இதன்படி 8 ஆயிரத்து 760 புள்ளிகளை நடால் பெற்றுள்ளார். சுவிட்சர்லாந்து வீரரான பெடரர் 6 ஆயிரத்து 900 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். ஜோகோவிக் 6 ஆயிரத்து 445 புள்ளிகளைப் பெற்றுள்ளார். ஆர்ஜென்ரீன வீரர் டெல் பொட்ரோ 5 ஆயிரத்து 980 புள்ளிகளுடன் நான்காவது இடத்தில் உள்ளார். ஜேர்மனி வீரர் அலெக்சாண்டர் 4 ஆயிரத்து 890 புள்ளிகளு டன் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் சிலிச், டிமிட்ரோவ், தியம், அன்டர்சன், இஸ்னர் ஆகியோர் உள்ளனர். (ம)




# வேலைவாய்ப்பு

நெல்லியடியில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு கீழ்க்காணும் அனுபவமுள்ள பணியாளர்கள் உடன் தேவை!

**வரவேற்பாளர்கள்**
Receptionist

**நிர்வாக அலுவலகர்**
Administrative Officer

**தமிழ், ஆங்கிலம்**
Computer Typing **தெரிந்தவர்கள்**

**தகைமைகள்:** நெல்லியடி, வடமராட்சியில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை

- கணினி அனுபவம் இருத்தல் வேண்டும்.
- கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

சனிக்கிழமை (15.09.2018) காலை 9.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:

ANDRA WEDDING CARDS
232, யாழ்ப்பாணம் வீதி, நெல்லியடி.
0776622981 | 0777481696

## சீரடிபாபாவும், 5 ஜோதிலிங்க யாத்திரையும்

ஆரம்பம் **20.10.2018** யாத்திரீகர் **15** நாள்கள் **14**

தரிசிக்கும் இடங்கள் :- சீரடிபாபா, பீமாசங்கர் (ஜோதிலிங்கம் 1), நாசிக், திரியம்பகேஸ்வரர் (ஜோதிலிங்கம் 2), குருநேஸ்வரர் (ஜோதிலிங்கம் 3), திருப்பதி பாலாஜி அவுரங்கபாத் (மினிதாஜ் மஹால்) பரளி வைத்தியநாகநாதம் (ஜோதிலிங்கம் 4 ) , எல்லோரா (குகைக்கோவில்கள்), பத்ரமாருதி இந்துக்கோயில்கள் (குஷ்னேஸ்வரர் ஜோதிலிங்கம் 5) அவுண்டநாகநாதம் நாசிக் சூர்ப்பனகை மூக்கு அறுபட்ட இடம், மலைக்குன்றும், பஞ்சவடி, கோதாவரிநதி, கலாராம் மந்திர், கறுப்புராமர், சீதாகுகை, பத்ரமாருதி, சயன ஆஞ்சினேயர், அஸ்டகணபதி, கஞ்சன் கணபதி, அக்கல் கோட்பாபா, பாபாவின் முன்ஜென்மம், துல்ஜாப்பூர், பவானி அம்மன், பண்டரிபுரம், நாராயணர், சனிசிங்கனாப்பூர், (பூட்டு இல்லாத ஊர்), சுயம்புவாக உருவான சனிபகவான், எல்லோரா கைலாசநாதர் கோயில், திருப்பதி விஷ்ணு, புட்டர்பர்த்தி சாயிபாபா, காளாஸ்தத்திரி, திருத்தணி முருகன் இவை தவிர வேறு ஆலயங்களும் வரும்.

கொழும்பு , சென்னை, மும்பாய், சென்னை, கொழும்பு விமானம், சுற்றிப்பார்க்க A.C வாகன வசதி பிராமண சமையல் ஆள்கள் மூலம் சமைத்த மூன்று வேளை சுத்தமான சைவ உணவு காப்பி, ரீ, நாளொன்றிற்கு 1 லீற்றர் மினரல் வாட்டர், இரண்டு பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகளில் தங்கவைக்கப்படுவீர்கள். போக வர A/C வாகன வசதி ஒழுங்கு செய்யப்படும்.

குறைந்த கட்டணம் நிறைவான தரிசனம்

யாழ் – கொழும்பு – கொழும்பு – யாழ்
வாகனவசதி ஒழுங்கு செய்து தரப்படும்

வாழ்க வளமுடன்

**விஸ்வபிரம்மஸ்ரீ கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்**
No.59, 3/6, Sea Street, Colombo - 11, Tel: 0777 680 102, 0777 362 154
E-mail:- sriranganathan2601@gmail.com, sriranganathan1944@gmail.com
Facebook: sridevisriranganathanthuraiappa
(c/31864)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.